# செங்குந்த மித்திரன்

தொகுதி - ௩ (3)

பகுதி . ௮ (8)

ஆவணி, Aug. 1929


பட
Y592 [illegible], N27CH.
N29.3.8
143412.

Registered No. M

REGISTRAR OF ... 22 AUG 1929 MADRAS

38

# செங்குந்தமித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

ஆசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.

தொகுதி - ரு] சுக்கிலஹு - ஆவணிமீ [பகுதி - அ

## உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| பத்திரிகாசிரியர் முன்னுரை | .... | ௨௯௫ |
| ஒட்டக்கூத்தர் திருநாள் | .... | ௨௯௬ |
| ஆராய்ச்சிப்பகுதி: செங்குந்தர்கள் ஈட்டியெழுபதுக்காகத் தலைகொடுத்தது உண்மையா ? | | ௨௯௭ |
| பேரூர் செங்குந்த முதலிமார் மடம் | .... | ௨௯௮ |
| குலதிலகர் பகுதி : அற்புதங்கள் செய்யும் அம்மையார் | .... | ௨௯௯ |
| சமயப் பகுதி : இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம் | ... | ௩௦௧ |
| பொது விஷயம் : உண்மையினுபர்வு | ... | ௩௦௫ |
| சுகாதாரப் பகுதி : காற்று (Air) | .... | ௩௦௬ |
| காவல் பகுதி : செங்குந்த யாத்திரைவாசி | ... | ௩௦௭ |
| அதிமதுரம் | ... | ௩௧௧ |
| தொழிற் பகுதி : அற்பம் அற்பமன்று | ... | ௩௧௬ |
| செங்குந்தர் கிளர்ச்சி | .... | ௩௧௭ |
| தலைச்சங்கத்தின் பிரசாரம் | ... | ௩௨௫ |
| நிரூபம் | ... | ௩௨௯ |
| பாமாலைப் பகுதி : சங்கமும் கல்வியும் | .... | ௩௩௦ |
| ‘செங்குந்த மித்திரன்’ பஞ்சாங்கம் | ... | ௩௩௨ |

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்

நெ. 31, அரண்மனைக்காரன் தெரு, சென்னை.

## விளம்பரங்கள்

## 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'

**நல்ல புத்தகங்கள் !** நம்பிக்கையான விலைகள்

இது வெளியூர்களிலுள்ள செங்குந்த நேயர்களுக்குத் தேவையான புத்தகங்களை வி. பி. தபாலில் அனுப்புவதற்கெனவே ஏற்பட்டுள்ளது. இவ்விடம் தமிழிலும் ஆங்கிலத்திலும் அகராதிகள், புராணங்கள், நவீனக்கதைப் புத்தகங்கள், பிரபந்தங்கள் வைதிகநூல்கள், பாடபுத்தகங்கள் முதலியவற்றின் திருத்தமான பதிப்புக்கள் அழகான கட்டடங்களில் கிடைக்கும். தேவையான புத்தகங்களுக்கு ஆர்டர் அனுப்புக. ஆர்டர் அனுப்புவதோடு அதன் மதிப்பில் கால்பாகத்தை முன்பணமாக மணியார்டர் செய்தனுப்புக. மிகுதி நிற்கும் ரூபாயைத் தபால் பாக்கிங் செலவோடு வி. பி. போஸ்டில் புத்தகமனுப்பி வாங்கிக்கொள்ளுவோம். முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கப்படமாட்டா.

இவ்வியாபாரத்தில் வரும் லாபமனைத்தும் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் ஏழைச் செங்குந்த மாணவரின் கல்வி சம்பந்தமாகச் செய்யும் தருமங்களுக்கு உதவுமாகையால், புதிய புத்தகங்களை வாங்க விரும்பும் செங்குந்த நேயர்கள் குலாபிமானச் சிந்தையுடன் நமது 'செங்குந்தமித்திரன் புத்தகசாலை'க்கே ஆர்டர் அனுப்பவேண்டிக்கொள்ளுகிறோம்.

ஈ. வே. சிங்காரவேலு முதலியார், பி.ஏ.,
மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ்,
200, தம்புசெட்டித் தெரு, சென்னை.

---

# செங்குந்த புராணம்.

இப்புராணம் நாவினுன் மழுவெடுத்த ஞானப்பிரகாச சுவாமிகளால் பாடப்பெற்று தேவகாண்டம் மானவகாண்டம் என இரண்டு காண்டங்களாகவும், ஒவ்வொரு காண்டமும் பல படலங்களாகவும், கவிச்சக்கிரவர்த்தியார் ஒட்டக்கூத்தர் பாடியருளிய ஈட்டியெழுபதை பெரும்பாலும் தழுவி சுமார் மூவாயிரம் செய்யுட்களால் முடிவடைகின்றது. நம் குலவரலாறு இன்னதென அறியாத சிறுவர் சிறுமியருங்கூட எளிதில் அறிந்துகொள்ளுமாறு தெளிவாக ஒவ்வொரு படலத்தின் ஈற்றிலும் வசனபாகமும் அமைந்துள்ளது.

இதில் குலவரலாறு, குலத்தினர் செய்த அரும்பெருஞ்செயல், குலதருமம், ஒழுக்கநெறி, குலப்பெரியார் சரிதம் ஆகியவை அடங்கியுள்ளன. ஒவ்வொரு செங்குந்த மக்களிடத்தும் ஒவ்வொரு புத்தகம் இருத்தல் இன்றியமையாதது. இவ்வரிய புராணம் காலஞ்சென்ற எனது தகப்பனர் வித்வான் ஆ. க. குமாரசாமி முதலியார் அவர்களால் பல பழம் பிரதிகளைக் கொண்டு ஆராய்ந்து அச்சுவாகனமேற்ற பலமுறை முயன்றும் பயன்படாது போயிற்று. தற்போது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தினின்றும் வெளிவரும் நம்மித்திரன் தோன்றி உலாவி யுபதேசித்துவரும் இக்காலத்தில் பல்வேறிடங்களில் வாழும் நம்மவருக்குள்தோன்றிய ஊக்கமும் குலமுன்னேற்றத்துக்குரிய சாதனமும் வெள்ளிடைமலைபோல் விளங்கலால் தவறாது ஆதரவளிப்பார்களென்று நம்பியே நாளது வைகாசிமீ 21உ (3-6-1929) திங்கட்கிழமை யன்று திருப்பத்தூர் விக்டோரியா பிரசில் அச்சிட ஆரம்பித்திருக்கின்றது. சுமார் ஒரு வருஷத்துக்குள் முடிவுபெறும்.

நெடுநாள் நின்று நிலவக்கூடிய இதற்கு முன்பணமாக அனுப்புவோருக்கு புத்தகம் 1-க்கு ரூபா ஒன்னரையாகவும் முடிந்த பிறகு இரண்டு ரூபாயாகவும் ஏற்படுத்தியிருக்கிறது. ஆகையால் குலாபிமானிகள் ஒவ்வொருவரும் அவசியம் ஆதரவளிப்பீர்களென்று நம்புகின்றேன். முன்பணம் அனுப்புவோர் கீழ்க் குறித்த விலாசத்துக்கு அனுப்பவும்.

இப்படிக்கு,
A. K. முருகைய முதலியார், தமிழ்ப்பண்டிதர்,
திருப்பத்தூர் (வட ஆற்காடு)

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

[பத்திரிகாசிரியர் : ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.]

தொகுதி - ௧ | சுக்கில வருஷம் - ஆவணி மீ | பகுதி - ௮

143472

முருகன் துணை

கண்ணிமதி புனைந்தசடைக் கனியே முக்கண்
கரும்பேயென் கண்ணேமெய்க் கருணை வாழ்வே
புண்ணியநன் னிலையுடையோ ருளத்தில் வாய்க்கும்
புத்தமுதே யானந்த போகமே சீர்
எண்ணியமெய்த் தவர்க்கெல்லாம் எளிதி லீந்த
என்னரசே ஆறுமுகத் திறையாம் வித்தே,
திண்ணியவென் மனமுருக்கித் தருவா யென்னைச்
சிறுகாலை யாட்கொண்ட தேவ தேவே.

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### ஒரே இலக்கு : கல்வியில் அபிவிருத்தி

நமது முதலாவது மகாநாட்டில் செய்துள்ள தீர்மானங்களை ஆசாரத்துக்குக் கொண்டுவர நம்மவர் என்ன முயற்சி செய்து வருகின்றனர் என்பதை அறியப் பலரும் அவாவுகின்றனர். மேலும், ஆரம்ப சூரத்துவமாகவும் சந்தைக் கூட்டமாகவும் புராண வைராக்கியமாகவும் இம்முயற்சிகள் போய்விடுமோ எனவும் சிலர் கவலை யுறுகின்றனர். அத்தீர்மானங்களைப்பற்றி விஸ்தாரமாக எமது முன்னுரையில் இதுவரை எழுதாததற்கும் எம்மீது குறை கூறுகின்றனர். சீர்திருத்த வாயிலாக முன்னேற்றமடைவதற்கான கண்விழிப்புக்கும் முயற்சிக்கும் அறிகுறியாக எங்கும் விளங்குவது இத்தகைய குற்றம் கூறுதலே யாகையால் அதுபற்றி எமக்கு மிக்க மகிழ்ச்சி யுண்டாகின்றதே யொழிய ஒரு சிறிதும் வருத்தம்தோன்றவில்லை. எனினும், எமது கடமையினின்றும் யாம் என்றும் பிறழ்ந்ததில்லை யென்பதை மட்டும் வற்புறுத்திக் கூற விரும்புகின்றோம். பத்திரிகாசிரியரின் பொறுப்புத் தாம் எந்த மக்கள் சமூகத்துக்காக உழைக்க முன்வந்திருக்கின்றனரோ அந்தச் சமூகத்தின் அறிவு நிலைக்கும் அநுபவ நிலைக்கும் ஆசாரநிலைக்கும் தக்கவாறு காலப் போக்கினை யொட்டி அப்போதைக்கப்போது அவசியமானஉணர்ச்சிகளையும் கருத்துக்களையும் ஊட்டிவருதலிலேயேஅமைந்திருக்கின்றது. அப்பொறுப்பினை ஏந்தித் தொண்டியற்றி வருந் தோரணையில், மகாநாட்டுத் தலைவர்கள் எடுத்துக் காட்டிய நெறியில் நமது சமூக முன்னேற்றமுறுவதற்கு நம்மவர்களில் பெரும்பாலோர் கல்வித்துறையில் அதி தீவிரமாக விருத்தியை யடைந்தாலொழிய ஏனைய துறைகளிலே தொடங்கும் முயற்சி எதுவும் பலிதமுறாதென்னும் உண்மை எமக்கு நாளுக்குநாள் ஸ்திரப்படுவதால் அக்கல்வி யபிவிருத்திக்கான வழிகளையே இதுவரை எடுத்துக் காட்டிக்கொண்டு

வந்தோம். வந்தும் அதற்குரிய வசதிக ளைனத் தும் நாம் இன்னும் தேடிக்கொள்ள முடியாம லிருப்பதற்கு வருந்த வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்.

மேல்நாடுகளில் கல்வி யபிவிருத்திக்காகத் துரைத்தனத்தாரே யன்றிச் செல்வம் நிறைந்த சீமான்கள் செய்யும் தருமம் அளவு கடந்ததே. உலகப் பிரசித்திபெற்ற சர்வகலாசழகங்களும் அவைகளைச் சார்ந்த கல்லூரிகளும் பணக்கா ரர்களின் தர்ம ஸ்தாபனங்களேயாம். மாணக் கர்கள் உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உயர் தரக் கல்வி பயின்று, ஆராய்ச்சித் துறைகளில் பழகி,நிபுணர்களாவதற்கு ஏராளமான உபகார நிதிகள் ஏற்படுத்தியிருப்பவர்கள் மேல் நாடு களில் ஆயிரக்கணக்காக உளர். இத்தகைய உப கார நிதிகளே அந்நாடுகளின் கல்வி மேம்பாட் டிற்கு அநுகூலமாயிருக்கின்றன. செங்குந்த சமூகத்திடையே அத்தகைய செல்வச் சீமான் கள் இல்லையென்று சொல்ல முடியாது. இச் சீமான்கள் ஒன்று சேர்ந்து நமது "செங்குந்தர் கல்விநிதியை" விருத்தி செய்ய முற்படுவார்க ளானால் நமது சமூக முன்னேற்றம் அதிவிரை வில் கைகூடும். இந்நெறியே நமது சமூக முன் னேற்றத்திற்கு அறிவாளிகள் கண்ட குறுக்கு வழி என்று சொல்லலாம். இதைக் கவனியாது நாம் ஆசார சீர்திருத்தம் தொழில் சீர்திருத்தம் முதலியன செய்யப்புகுவோமானால் நம்முயற்சி யெல்லாம் விழலுக்கிறைத்த நீராகுமே யொழிய யாதொரு நற்பயனையுந் தராது. இவ்வுண் மையை நமது வாசகர்கள், தம் மனதில் பதிந்து கொள்ள வேண்டுமென யாம் பன்முறையும் வற்புறுத்துகின்றோம்.

சமூகத் தொண்டாற்றும்போது நாம் அப் போதைக்கப்போது ஒரு இலக்கை வைத்துக் கொண்டே உழைக்கவேண்டும். பல இலக்கு களை வைத்துக்கொண்டு உழைக்க முற்படுவோ மானால் எந்தத் துறையிலும் நாம் ஒழுங்காக வும் தீர்மையாகவும் வேலை செய்ய இயலாமல் அரைகுறையாக வைத்துவிட்டு எந்நோக்கமும் கைகூடப் பெறோம் என்பதை அறிஞர்கள் உணருவார்கள். ஆகவே இப்போது நமது நோக்கம் நமது சமூகத்தவரின் கல்வியபிவிருத் திக்கான அனுகூலங்களைத் தேடிவைத்தலான ஒரே நோக்கமாக இருக்கட்டும். இந்நோக்கம் சிறிது நிறைவேறியதும் மற்ற துறைகளில் உழைக்க இறங்குவோம்.

ம. ச

## செங்குந்தர் கல்வி நிதி

இக் கல்விநிதி நமது முதலாவது மகாநாட்டின்கண் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் ஆதரவில் நம்மவர் கல்வி அபிவிருத்திக்காக ஏற்படுத்தப்பட்டது.

இதற்கு அன்பர்கள் மகாநாட்டின்கண் நிறைவேறிய தீர்மானத்தின்படி

1. மகமை ஏற்பாடு செய்யவும்,
2. உண்டி வசூலித்து அனுப்பவும்,
3. சடங்குகளில் கட்டணம் செலுத்தவும்,
4. ஊர்ப்பொதுப் பணங்களிலிருந்து பங்கு தரவும்,
5. நன்கொடை அளிக்கவும்

வேண்டிக்கொள்ளப் பெறுகின்றனர்.

ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.,
பி. சே. மாணிக்கவாசக முதலியார்,
தலைச்சங்க அமைச்சர்கள்.

# ஒட்டக்கூத்தர் திருநாள்

ஆவணிமீ 30வ சனிக்கிழமை (14-9-29)

வருஷா வருஷம் இத்திருநாளைக் கொண்டாடுவது செங்குந்த குல மக்கள் குழுமி வசிக்கும் ஒவ்வொரு கிராமத்திலும் அவசியமாகு மெனச் சென்ற இரண்டு வருஷங்களாக நமது மித்திரனில் எழுதி யிருந்தோம். அவ்வண்ணமே பற்பல விடங்களிலும் அத்தினம் விழாக் கொண்டாடப் பெற்றுக் குந்தத்தின் பெருமையை நிலைநாட் டிய இக்குலதிலகருக்கு நாம் இயற்றவல்ல சிறந்த கைம்மாறாக இது வரை நூற்றுக்கணக்கான செங்குந்தர் சங்கங்கள் தோன்றி நம்மவ ரிடையே ஒரு பெருங் கிளர்ச்சியை யுண்டாக்கி யிருக்கின்றன. இச் சங்கங்களெல்லாம் இவ்விழாவினை இவ்வருடமும் கொண்டாடிப் புதுச் சங்கங்களையும் புத்துணர்ச்சியையும் நம்மவரிடைஉண்டாக்கிப் புது உற்சாகத்துடன் முன்னிலும் பன்மடங்கு தீவிரமாகக் குலத் தொண்டில் ஈடுபடுமென எதிர்ப்பார்க்கின்றோம்.

இத்திருநாளன்று நடைபெற வேண்டிய நிகழ்ச்சிகள்—கூத்தர் பெருமான் திருவுருவப் படத்தை அலங்கரித்துப் பூசித்தல், அபிடேக ஆராதனைகள் செய்தல், அவ்வவ்வூரிலுள்ள ஏழைகளு க்கு அன்ன மளித்தல், கவிச் சக்ரவர்த்தியாரது சரித்திரத்தை பல ருங் கேட்டின்புறுமாறு உபந்யசித்தல், குலமுன்னேற்றத்துக்கான ஏற்பாடுகள் முதலியன.

பத்திரிகாசிரியர்.

☞ கூத்தர் படம் தேவையானவர்கள் நமது தலைச்சங்கத்திற்கு ரூபாய்1-8-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். தயாரித்த படங் கள் பெரும்பாலும் செலவாய் விட்டபடியால் இன்னும் சில காப்பிகளே இருக்கின்றன.

# ஆராய்ச்சிப் பகுதி

## செங்குந்தர்கள் ஈட்டியெழுபதுக்காகத் தலைகொடுத்தது உண்மையா?

செங்குந்த சமூகத்தின் வரலாற்றையும் அதன் கீர்த்தியையும் புகழ்ந்து ஒரு பிரபந்தம் இயற்றித்தர வேண்டுமென்று கவிச் சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தரைச் செங்குந்தர்கள் கேட்டுக்கொண்டதாகவும், அப்புலவர் பெருமான் "நம் பெருமையை நாமே பாடிக்கொள்வது உசிதமல்ல. அது வேண்டின் ஆயிரத்தெட்டுச் செங்குந்தர்கள் தலைகளை யறுத்துச் சிரச் சிம்மாசனமிடுக. அதன்மீதிருந்து நமது வரலாற்றையும், பிரதாபங்களையும் புகழ்ந்து உலக மறியப்பாடுவோம். அப்போதுதான் நீங்கள் நமது தொல் புகழைக்கூறும் பிரபந்தத்தை உண்மையில் விரும்பியதாகவும், யாம் உண்மையைக் கூறியதாகவும் யாவரும் அறிவர்." எனக் கூறியதாகவும், உடனே அவர்கள் 72 நாடுகளுக்கும் தெரிவிக்கத் திருமருகல் நாட்டார் தவிர ஏனைய 71 நாட்டுச் செங்குந்தர்களும் தங்கள் தங்கள் நாட்டுக்குவந்த விகிதாசாரம் விரும்பித் தந்த தலைகளைக் கொணர்ந்து உறையூரில் சேர்த்துச் சிரச்சிம்மாசனம்இட்டதாகவும் பல மரபினர் சூழ்ந்திருந்த இராஜ சபையின்கண் கவிச் சக்ரவாததியார் அதன்மீதமர்ந்து ஈட்டி எழுபதென்னும் தெய்வீகப் பிரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளிப் பின்னர் எழுப்பெழுபது பாடி அறுபட்டத் தலைகள் தத்தம உடல்கள்தோறும் சென்று ஒட்டிக்கொள்ளச் செய்ததாகவும் பண்டைய நூல்கள் வாயிலாக நாம் அறிகிறோம்.

தற்காலத்தில் தம்மைத்தாமே ஆராய்ச்சிக்காரர்கள் என்று சொல்லிக்கொள்ளும் சிலர், 'செங்குந்தர்கள் பிரபந்தத்திற்காக தலைகொடுத்தார் என்பது நம்பக்கூடியதா? அது உண்மையாயின் அவ்வாறு செய்ய அரசன அனுமதித்திருப்பானா? அனுமதித் திருப்பினும் அது அநாகரிகச் செயலன்றோ?' எனக் கூறுகின்றனர்.

குருக்ஷேத்திரத்தில் துரியோதனதியர்க்கும் பாண்டவர்க்கும் நடந்த பாரத யுத்தத்தைப் பார்க்கும்படி வியாசபகவான் கண்கொடுத்த போது அங்கிருந்த யானை, குதிரை, தேர், வில், வாள், போர்வீரர் முதலியவற்றைக் கண்டு பயந்து பழையபடியே என்னைக் குருடனாக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதாகச் சொல்லப்படும் பிறவிக் குருடனாகிய திருதராஷ்டிரனைப்போல் உலகம் இன்னதென்றும், போர்க்களம் இப்படிப்பட்டதென்றும், சுத்த வீரர் தன்மை இத்தகைத் தென்றும், கண்டேனும், கேட்டேனும் அறியாது ஆற்காட்டில் சண்டையென்றால் உடனே அடுப்பங்கரை தேடிப் புகுந் தொளிக்கும் தைரியமுள்ள சில வெட்டுச் சுரைக்காய் வீரர்களது கூற்றென்றே இதைச் சொல்லவேண்டும்.

நவவீரர்கள் கைலாயத்திலிருந்து வந்த தெய்வீகப் புருஷர்களென்பது ஒருபுறமிருக்கட்டும். அதன் உண்மைத் தத்துவத்தைப்பற்றி வேறொரு சமயம் ஆராய்வோம். 'முசுமுகச்சோழன்' என்னும் பெயர் முசுகுந்தச்சோழன் என மாறிய வரலாற்றையும், 'கைக்கோளப் பெரும் படை' எனப் பண்டைய நூல்களில் வரும் பிரயோகத்தையும், கைக்கோளப் பெரும்படை ஈழம், மலையாளம், கலிங்கம் முதலிய பல நாடுகளைச் செயித்தது என்ற சரித்திரத்தையும், வீரநாராயணர் விஜயம் முதலிய நூல்களையும், தென்னாற்காடு ஜில்லாச் செங்குந்தர்கள் வல்லான் சம்மாரத்தை இன்னும் கொண்டாடிவருவதையும், பிறவற்றையும் நன்குணர்ந்த அறிவாளிகள் இவ்வெறும் கூற்றைக் கூற முன்வரமாட்டார்கள்.

புனைவுரை யின்றி உண்மையைக் கூறுவதாகக் கருதப்படும் பண்டைத் தமிழ் நூல்களில் அக்காலத்து வீரர்கள் அரசனுக்காகவும், நாட்டிற்காகவும், மானத்திற்காகவும் தங்கள் உயிரைத் திரணமாகக் கருதியதாகவும், அதற்குப் பெண்மணிகளும் உதவி புரிந்ததாகவும், கூறியிருப்பதை நூன்றும் காணலாமன்றோ? ஒரு வீரனைப் பார்த்து அரசன் 'நீ பகைவனை எவ்வாறு கொன்றாய்?' என்றபோது 'இவ்வாறுதான் கொன்றேன்' என்று சொல்லித் தன்னைத்தானே வெட்டிக்காட்டிய வீரனைப்போன்றவர்கள் பலர் இருந்தார்கள். அரசன் யுத்த காலத்தில் பாதுகாப்பின்றிச் சென்றான் எனக்கேட்டுச் சகியாது தம்மைத்தாமே வெட்டிக்கொண்ட வீரர்கள் சமீப காலத்திலு மிருந்தனர். இவ்வாராய்ச்சிக்காரர்கள் உக்கல் நாகப்பன்போன்ற வைராக்கியமும், வீரமும் பொருந்திய புருஷர்களைக் கனவிலும் கண்டிருக்க மாட்டார்களென்றே சொல்லவேண்டும். போர் என்னும் சொல்லைக் கேட்டே புயம்பூரிக்கும் சுத்தவீரர்களது இரத்தமும் இவர்கள நரம்புகளில் ஓடாது.

உயிரையே பெரியதாக மதித்த இவ்வெட்டுச் சுரைக்காய் வீரர்கள பிறவுயிரைக்கொல்லாமை ஒழுக்கந்தவறாமை, மானமழியாமை, முதலியவை உயிரினும் ஓம்பத்தக்கவை எனப் பெரியோர்கள சொல்லியிருப்பதை ஒருபோதும் அனுஷ்டானத்திற்குக் கொண்டுவந்திருக்கமாட்டார்கள என்றே கருதுகிறேன். உலக க்ஷேமத்தையும், நாட்டின் பெருமையையும், குறியாகக்கொண்டு இதுவரையில் யாரும் சென்றறியாத இமயமலையிலுள்ள எவரெஸ்ட் சிகரம்போன்ற மலைப்பிரதேசம், துருவப்பிரதேசம் முதலிய இடங்களுக்குத் துணிந்து சென்று உயிரைக் கொடுப்பவர்களை இன்னும் காணகிறோமல்லவா?

செங்குந்தர்கள் ஈட்டி யெழுபதுக்காகத் தலை கொடுத்தது பொய்யெனில் 72நாட்டாருள் ஒரு நாட்டாரை மாத்திரம் ஏனைய 71 நாட்டாரும தலைகொடா நாட்டாரென்று சொல்வதும், அந் நாட்டார் அதைத ஒப்புக்கொள்வதும் எவ்வாறு பொருந்தும்? 71 நாட்டினரும தலைகொடுத்தமையினா என்னும வழக்கால கொடுத்த தலைகள் ஆயிரத்தெட்டா யிராவிடினும குறைந்தது (71) எழுபத்தொன்றாகவாவது இருந்தே தீரவேண்டும. எவ்வாறாயினும செங்குந்தர்கள பிரபந்தத்திற்காகத தலை கொடுத்தாரென்பது ஒரு தலை.

இதனை அரசன் அனுமதித்திருப்பானா? என்பதைப்பற்றி இனி ஆராயவோம. பண்டைக் காலத்தில் தேசாபிமானிகள நிறைந்து அக்காலத்திற்கேற்ப ஒழுங்கான முறையில் குடியரசு நடந்துவந்ததாகச் சொல்லப்படும் மேரியதேசத்தில 'கிளேடியேட்டர்கள' என்னும மல்லர்கள் பலர் அடிக்கடி ஜனங்களின் வேடிக்கையாகத்தம மல்யுத்தம செய்து இரத்தம பீரிட்டு காலரங்கங்களிலும வீசத் திரளான ஜனங்களிடையே மாண்டதைச் சரித்திரம அறிந்த யாராவது மறுப்பார்களா? உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும (நமநாடு உட்பட) மனிதனை மனிதன் ஆடு மாடுகளைப்போல் விலைக்கு வாங்கித் தன்னிஷ்டப்படி அவனை நடத்தலாம் என்ற நியாயம் கொஞ்ச காலத்திற்கு முன்னும்கூட அரசர்களாலும், மதாச்சாரியர்களாலும் ஒப்புக் கொள்ளப்பட்டிருந்தது என்பதை மறுக்கவல்லார் யார்? நம நாட்டில் ஒருவன் இறந்துபோனால் அவன் பிரேதத்தைச் சுடும் இடத்திலேயே உயிரோடிருந்தும் அவன் மனைவியையும் கட்டாயப்படுத்தித் தள்ளி அவளை உயிரோடு எரித்துக்கொன்ற கொடுமையை யார்தான் பொய் யென்று சொல்ல முடியும்? இவ்வழக்கங்கள் தற்காலத்தில் நமக்குக் கொடுமையாகவும், அநியாயமாகவும் தோன்றுகின்றன. தோன்றினும பொய்யல்ல, உண்மையே. அக்காலத்திய சட்டப்படி அவை நியாயமெனக் கொள்ளப்பட்டிருந்தன. அதனால் அவை அக்காலத்திய அரசாங்கங்களால ஆதரிக்கப்பட்டு வந்தன. அவை இக்காலத்தில செல்லா? ஆகையால பல்லாண்டுகளுக்கு முன நடந்த ஒன்றை இக்காலத்திய சட்டத்தைக்கொண்டு தீர்மானித்தல ஒருபோதும் பொருந்தாது.

இனித் தலையறுத்து ஆசனமிட்டுப் பிரபந்தங் கேட்டல் அநாகரிகமான கொடுஞ்செயலன்றோ? என்பதைப்பற்றி ஆராய்வோம். முதலில அது கொடிய அநாகரிகச் செயலென்றே ஒப்புக் கொள்வோம். அதனாலேயே அது நடந்திராதெனச் சொல்ல இயலுமோ? அதனை எப்பெயரிட்டுக் கூறினும கூறுக. உண்மையாய் நடந்ததென்று ஒப்புக்கொள்ளுதலே போதுமென்பது தான் நமது கொள்கை.

கடைசியாகச் சிரச்சிமமாசன மிட்டது அநாகரிகமானதா? என்பதைபபற்றி விசாரிப்போம். பல நூற்றாண்டுகளுக்குமுன் நடந்த ஒன்றை இக்காலத்திய வழக்க ஒழுக்கங்களை மாத்திரமே அறிந்தவர்கள தங்கள குறுகிய ஞானத்தைக்கொண்டு நாகரீகமானதா? அல்லவா? எனத் தீர்மானிக்க முயலுதல் ஒருகாலும பொருந்தாது. ஒரு காலத்திலும், தேசத்திலும நியாயமெனக் கருதப்பட்டவை மற்றொரு காலத்திலும, தேசத்திலும அநியாயமெனக் கருதப்பட்டு வருகின்றன. அக்காலத்தில நியாயமெனக் கொள்ளப்பட்ட மேற்கூறிய அடிமை வியாபாரமும், உடன்கட்டை ஏறுதலும இக்காலத்தில் அநாகரீகமெனக் கருதப்படுகின்றன. தாயாதிகளுக்குள்ளும பெண் கொடுத்தல் கொள்ளுதல் முறையெனக் கொள்ளும சில அநாகரிக நாட்டு வழ

க்கம் நம்நாட்டில் முறையல்லவெனக் கருதப்படுகிறது. இவை காலத்தாலும் தேசத்தாலும் ஏற்படும் வித்தியாசங்களாம். ஆகையால் பண்டைக்காலத்திய வழக்க ஒழுக்கங்கள் இப்போது நம் சூழலுக்கும் கொள்கைகளுக்கும் ஏற்பப் பொருந்தாதனவாயின் அவற்றை நீக்க முயலுவது பொருந்துமேயன்றி அவை அநாகரிகமானவையென்று கூறுதல் பொருந்தாது. தற்காலத்தில் நாம் அனுசரித்துவரும் வழக்க ஒழுக்கங்களைப் பிற்காலத்தவர் தங்கள் சூழலுக்கும், கொள்கைக்கும் பொருந்தாவிடின் அநாகரிகமானவை என்று கூறவும் கூடுமல்லவா? ஆகையால் ஒட்டக்கூத்த முதலியாருக்குச் சிரச்சிம்மாசனமிட்டது அநாகரிகமெனல் பொருந்தாது.

இதனால் செங்குந்தர்கள் சிரச்சிம்மாசனமிட்டுப் பிரபந்தம் கேட்டது உண்மையென்றும், அது அரசனால் அனுமதிக்கப் பெற்றதென்றும், அது அநாகரிகச் செயல் அல்லவென்றும் கொள்ளவேண்டியிருக்கிறது.

வீரவாகுதாசன்.

---

## பேரூர் செங்குந்த முதலிமார் மடம்

நொய்யலாறு என வழங்கும் காஞ்சிமா நதி தீரத்தில் நீர்வளம் நிலவளம் அமையப்பெற்றதும், தென் கைலாயமெனவும் மேலைச்சிதம்பரமெனவும், கொண்டாடப் பெறுவதும், சாந்தலிங்க ஸ்வாமிகள் என்னும் மஹான் எழுந்தருளியிருந்து சமாதியடைந்ததுமாகிய பேரூர் எனனும் புராதன க்ஷேத்திரம் கோயம்புத்தூருக்கு 3½ மைல் தூரத்திலிருக்கிறது. இந்த க்ஷேத்திரத்தில செங்குந்தர்கள் பண்டைக்காலத்தில் ஆகமநெறி தவறாத உத்தம உயர்சைவச் சீலர்களாய் வாழ்ந்து வருநாளில் ஒருநாள் இததலததிற்குத் தரிசனார்த்தம் வந்த சோழ அரசன் செஙகுநதர் வீதி வழியாகச் செல்லுங்கால் வீடுகள்தோறுமிருந்த தறிகளில் கட்டிய மணிகளின் ஓசையைக் கேட்டு ஒவ்வொரு வீடும் சிவாலயமென்றும், தறிமணியோசை இறைவன் ஆராதனை காலத்தில் செய்யும் மணியோசை என்றும் கருதிச் சாளரங்கள்தோறும் நின்று எட்டிப் பார்த்து வணங்கி ஸ்தோத்திரம் செய்து கொண்டே சென்றான். இதைக்கண்ட சில செங்குந்த இளைஞர்கள் சிவனடியாராகிய 'குணமெனனும் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்தலரிது' என்பதை உணராது நகைத்துப் பரிகசித்தனர். இதையறிந்த சோழ ராஜன் உண்மையைக் கூறாது என்னைப் பரிகசித்து என் பக்திக்கு இடையூறு விளைத்த இவ்வூர்ச் செங்குந்தர்கள் நசிக்கக் கடவது. எனச் சபித்தான். இந்நிகழ்ச்சியைக் கேள்விப்பட்ட செங்குந்தர்கள் சாபமிட்டவர் யாவர் எனத் தேடலுற்றனர். கடைசியில் அரசன் ஆற்றில் நீராடிக் கொண்டிருந்தபோது சாபமிட்டவர் அவனெனத் தெரிந்து அரசனை நோக்கி 'தவசிரேஷ்டரே! நீவிர் யார்? எந்நாட்டவர்? இவ்வூர்ச் செங்குந்தர்களுக்குச் சாபமிட்டது நீர்தானா?' என வினவினர்கள். சோழன் 'நான் சோழமகாராஜனுடைய சகோதரன். இறைவன் தரிசனார்த்தம் இங்குற்றேன் என்னைப் பரிகசித்து என் பக்திக் கிடையூறியற்றிய செங்குந்தர்களுக்குச் சாபங்கொடுததது யானே.' எனப் பதிலிறுத்தார். செங்குந்தரும் 'எங்குலததலைவரே! உமது குடும்பத்திற்கும் செங்குந்தர்களுக்கும் வெகு காலமாக இருந்து வரும் நெருங்கிய சம்பந்தத்தை நீர் உணரமாட்டீரோ? சைவ சமயப்பரிபாலகர்களாகிய செங்குந்தர்கள் சிவனடியார்களுக்கு அபசாரஞ் செய்வதுண்டோ? ஏதோ சில இளைஞர்கள் அறியாமையால் செய்த குற்றத்திற்காகத் தாங்கள் குற்றஞ் செய்யாத செஙகுநதரனைவரையும் சபிததல் நீதியோ? நீதி செலுத்தி உலகத்தைக் காக்கும் எம்மிறையே! அறிவினர்களுக்குப் புத்தி புகட்டித் திருத்துவது தங்கள் கடமையன்றோ?' என்று கூறிச் சாபத்திறகு விமோசனம் கூறும்படி வேண்டிக்கொண்டனர். சோழன் சிறிதும் இரக்கங்கொள்ளாது 'சிவாபராததத்திற்கும் விமோசனமுண்டோ? தூய்மையிய வெள்ளைத் துணியில் பட்ட சிறு கறையும் எவர்க்கும் எளிதிற் புலனாமன்றோ?' என்றான். அப்போது செஙகுநதர்கள் மனம் நொந்து நீர் மூழ்கிய இம்மடுவிலேயே மூழ்கிப் போகக் கடவது என எதிர் சாபமிட்டனர். சோழன் சாபத்தைக்கேட்டுச் சிறிதும் மனங் கலங்காது யான் மூழ்கிப்போயினும் இந்நதி இது முதல் என் பெயரால் வழங்குவதன்றி இதில் ஸ்நானம் செய்தோர்களுக்குப் பலன் மோக்ஷமே யாகுக வென்று கூறி நதியில் மூழ்கிப்போய் விட்டான். அன்று முதல் இன்று வரையில் அம்மடுவுக்குச் சோழமடுவென்றே பெயர் வழங்கி வருகிறது. அபபோதே செங்குந்தர்களும் அததலத்தை விட்டகன்றனர். இனனும் அங்குச் செங்குந்தர்கள் குடியேறினும் க்ஷீணித்துப் போகின்றனர்.



(4)

இது நிற்க, இத்தலத்தில் ஆலயத்திற்கு வடபுறம் தேரோடும் வீதிக்கு வடக்கு, கோமுட்டிச் செட்டிமார் மடத்திற்கு மேற்கு, நாடார்மடத்திற்குக் கிழக்கு, வடகைலாயம் கோபுரத்திற்கும் பட்டி விநாயகர் ஆலயத்திற்கும் தெற்கு, இந்த எல்லைக்குட்பட்ட இடமே நமது மடத்திற்குரியது. இங்கிருந்த கட்டடம் சிலனாய் வெகு காலம் வெறுஞ் சுவரா யிருந்துவந்தபடியால் தேவஸ்தான கமிட்டியார் அவ்வூரை அடுத்துள்ள வடவழிச் செங்குந்த நாட்டாண்மைக்காரருக்கு மடத்தைக் கூடிய சீக்கிரம் கட்டாவிட்டால் ஏலம் போட்டு விடுவதாகப் பல நோட்டீஸ் கொடுத்தார்கள். சமீபத்தில் வடவழியில் மடம் கட்டிக் கும்பாபிஷேகம் செய்தபோது கூடியிருந்த கொளத்துப்பாளையம், முத்திபாளையம், பூதூர், வடவழி, சுல்தானிபுரம், மருதாபுரம், கணபதி முதலிய கிராமத்தார்கள் பேரூர் மடத்தைப் புதுப்பிக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். அதன் பிரகாரம் புதூர் திரு. வடிவேலு முதலியார் அவர்கள்முன்னின்று மடத்தைத் திருப்பணியை நடத்தி வருகிறார்கள். இது வரையில் சுமார் 2000 ரூபாய்க்குமேல் செலவாயிருக்கிறது.

இத்தலத்தில் பலவேறு சாதியார் மடங்கள் நல்ல நிலைமையில் இருந்து வருகின்றன. அவற்றுள் தெப்பக்குளத்திற்கு வடகிழக்கில் மேற்கு பார்த்தாற்போ லிருக்கும் மௌத்தியா மடம் என்பதும் ஒன்று.

கணபதி வா. ப. தஞ்சையப்ப முதலியார்.

## குலதிலகர் பகுதி

### அற்புதங்கள் செய்யும் அம்மையார்.

('நவ சக்தி'யில் கண்டது.)

திருச்சி ஜில்லா உடையார் பாளையம் தாலுக்கா கீழமாளிகைக் கிராமத்துக்கு ஒரு மைல் தூரத்துள்ள மருதூர் என்னும் கிராமத்தில் திருவருள் வலியால் வியக்கத்தக்க அற்புதங்கள் செய்யும் அம்மையார் ஒருவர் வாழ்ந்து வருகிறார். இவ்வம்மையார் செங்குந்த மரபிற் றோன்றியவர். இவர் பெயர் தெய்வயானை. இவருக்கு இப்போது வயது முப்பத்தேழு. இவர் கணவருடன் இல்லறத்திலிருந்து வருகிறார். இவருக்கு ஓர் ஆண்பிள்ளையும் மூன்று பெண்களும் உண்டு. வழிவழியாக முருகனை வணங்கிவரும் குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் கல்வி கற்கவில்லை. இவரது கணவனார்க்கு நெசவுத்தொழில்.

இவ்வம்மையார் தமது ௨௨-வது வயதில் ௫ வயதுடைய தம் ஆண் குழந்தையை யிழந்தார். அதுமுதல் சிலநாள் வரையில் அக்குழந்தை புதைக்கப்பட்ட இடத்திற்குப்போய் வருந்தியழுது வந்தார். ஒரு நாளிரவு தாம் பழநிக்குச் சென்று முருகனை வணங்கியதாகவும், காவடிகளைக் கண்டதாகவும் கனாக்கண்டு விழித்தார். இக்கனாக் கண்ட சின்னாளில் சில பெண்களோடு ஏரிக்குக் குளிக்கச் சென்றார். தலைக்குத் தேய்த்துக் கொள்ளதக்க துணிஞ்சித் தழை ஒடிப்பதற்கு, அங்குள்ள அம்மரத்தில் ஒரு துறட்டை மாட்டி யிழுத்தார். அத்துறடு தன் கையினின்றும் நீங்கி வானோக்கிச் சென்றது. அது கண்டு அஞ்சி உற்று நோக்குங்கால் கருநிறமுடைய ஒரு மனிதன் தன் மீது கரிய கம்பளம் ஒன்றைத் தலையிலிருந்து முதுகுபுறமாகத் தொங்க விட்டுக்கொண்டு அத்துறட்டைப் பிடித்துப் போவதாகப் புலப்பட்டது. பிறகு, அவ்வம்மையார் தமது தலையின்மேல் பெருஞ் சுமை இருப்பதுபோலத் தோன்ற, இஃதென்ன புதுமையா யிருக்கிறதே யென்று கீழே குனிய, தமது தோளிலிருந்து ஒரு மனிதன் கரிய மேனியும் கச்சம் கோவணமும் உடையனாய், கலீரென்ற ஒலியுடன் குதித்துத் தம் முன்னே போனதைப்பார்த்து, மிக அஞ்சி வந்து தம்முடன் குளிக்க வந்த பெண்களிடம் நடந்த வரலாற்றைச் சொல்லிக் குளித்து வீடு சேர்ந்தார்.

சேர்ந்தவுடன் அப்பெண்கள் நடந்த வரலாறுகளை அவ்வம்மையாரின் கணவன், மாமன், மாமி முதலியவர்களிடம் சொல்ல, அவர்கள் மிகவும் கவலைகொண்டு அவ்வம்மையாருக்குப் பேயோ பிசாசோ பிடித்துவிட்டது என்று கொண்டு, பூசாரிகளை யழைத்துப் பேயோட்டத் தொடங்கினார்கள் ஏரியின் அருகே நடந்த செயலிலிருந்து, அம்மையார் தமதுணர்வின்றிப் பித்தர்போல முருகன் கோவிலுக்கு அடிக்கடி போய்வரும் வழக்கமுடையவரானார்; அது

கண்ட கணவன் முதலாயினோர், அவ்வம்மையாரை வீட்டிலடைத்துப் பூட்டிவைத்தார்கள். இச்செயலைப் பார்த்துக் கொண்டிருந்த ஒரு பெண் ஏரிக்குக் குளிக்கச் சென்றாள் வீட்டிலடைக்கப்பட்டிருந்த அம்மையார் தனக்கு முன்னே அவ்வேரியில் குளித்துக் கொண்டிருந்ததைக் கண்டு வியப்புற்று, 'அம்மே! வீட்டிலடைக்கப்பட்டிருந்த நீ இங்கே எப்படி வந்தாய்? இஃதென்ன மாயம்,'' என்று கேட்டாள். அதற்கு,'நான் ஏரிக்கு வந்தபிறகுதானெனக்கு உணர்வு வந்தது,' என்று சொன்னார். அதனை அப்பெண் வீட்டுக்குச் சென்று அம்மையாரின் கணவன் முதலியவர்களுக்குத் தெரிவிக்க,அவர்கள் இது கடவுளின் திருவருட் செயல் எனத் தெளிந்து பேயோட்டுத லொழிந்தார்கள்.

இது நிகழ்ந்த சின்னாளுள் பங்குனி உத்திரம் வந்தது; அன்றையத்தினம் அம்மையார் பல ஏழைகளுக்கு அன்னம் அளிப்பது வழக்கம். அன்று வீடுவாசல்களைச் சுத்திசெய்துவிட்டு, ஏரிக்குப் போய் நீராடி வீட்டுக்கு வந்தார். வீட்டினுள் ஓர் அறையில் ஐந்தாறு காவடிகளிருக்கக்கண்டு, இது முருகனது திருவருட் செயல் எனத் துணிந்து, சமயல் செய்து அக்காவடிகட்கு முன்னர் வைத்துப் படைத்து, அப்பிரசாதத்தைப் பலருக்கும் அளித்தனர். அன்று தொட்டு அவ்வம்மையாரிடம் அற்புதச் செயல்கள் நிகழ ஆரம்பித்தன.

ஒரு சமயத்தில் அவ்வம்மையார் முன்னர் வானிலிருந்து திருவெண்ணீற்றுப் பையும், உருத்திராக்க மாலையும், வெள்ளி வேலும் துள்ளி வந்தன: பிறிதொரு சமயத்தில், அம்மையார் ஒரு தாம்பாளத் தட்டில் தழையையும் வைக்கோலையும் கிள்ளிப்போட்டு மேலேதூக்க, தேங்காய், கற்பூரம், வெற்றிலை, மலர், இளநீர், பழம் முதலியன வந்தன. இன்னொரு சமயத்தில் ஒரு கற்றை ஊதுவத்தி வானிலிருந்து துள்ளி அம்மையார் கரத்தில் வீழ்ந்தது. மற்றொரு சமயம் பழநியில் வேலருக்கு அபிடேகமான தீர்த்தம் ஒரு செம்பில் வந்தது. பின்னொரு சமயத்தில், அம்மையார் ஒரு பையனை மண் பிசைந்து வரச்சொல்லி, அம்மண்ணை யிரு கூறாக்கி அவற்றை இரண்டு காகிதங்களில் வைத்து அவைகளின்மேல் திருநீறு தூவி, ஒரு பாகத்தை அங்கிருந்த ஒருவர் கையிலும், மற்றதை வேறொருவர் கையிலுங்கொடுத்து மூடிக்கொள்ளச் சொன்னார். சிறிது நேரங்கழித்துத் திறந்து பார்க்கச் சொல்ல ஒருவர் கையிலிருந்தது நல்ல வெல்லமாகவும், மற்றவர் கையிலுள்ளது கட்டிக் கற்பூரமாகவும் காணப்பட்டன; அதுகண்டு எல்லாரும் வியந்து அவ்வெல்லத்தை யுண்ண மிகவும் இனிமையா யிருந்தது. அங்கோர் வீட்டிலுள்ளார், தமது வீட்டில் சில படிகளில் அரிசிவைத்து, அதனைப் பழநிக்கு அனுப்பி அங்குள்ள குருடு நொண்டி முதலிய ஏழைகளுக்கு அளிக்கவேண்டுமென அம்மையாரை வேண்டிக்கொள்ள, சிறிது நேரத்திற்கெல்லாம் அவ்வரிசி காணப்படவில்லை. ஒருவர் ஒரு பலாப்பழத்தை அம்மையாரிடம் கொடுத்து, அதனைப் பழநிக்கு அனுப்பும்படி வேண்ட, அம்மையார் அப்பழத்தை யெடுத்து மேலே தூக்க, அப்பழம் காணாமற் போயிற்று. களைப்புற்ற ஒருவர் முகவாட்டத்தைக்கண்டு, அம்மையார் ஒரு தட்டில் குவளையொன்றை வைத்து மேலே தூக்கினார். அக் குவளை மறைந்தது சிறிது நேரத்துள் அதே குவளையில் பால் வந்திருக்க, அவருக்கு அப்பாலை யருந்தித் தெளிவித்தார். ஒரு நாள் அம்மையார் தமது நாவை யிழுத்து அரிந்து ஒரு வாழையிலையில் வைத்தார் நா துடித்தது. பின் வாயைக் கட்டிக்கொண்டு கையை யேந்தி நிற்க, ஒரு சிறு செம்பில் தூய நீர்வர, அந்நீரை அம்மையார் வாயில் விட்டுக்கொள்ள உடனே நாக்கு முன்போலவே வளர்ந்துவிட்டது. இவைபோலும் பற்பல அற்புதங்கள் இன்றும் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

இவ் வம்மையார் திருவருளியக்கத்தா[ல்] கூறிய வாக்கின் வண்ணமே கீழமாளிகை திரு கனகசபை யென்பார் தனது எண்ணம் நிறை[வேறி] இப்போது திருவையாறு வடமொழி[க்] கல்லூரியிற் கல்வி பயின்று வருகிறார். மக[ப்] பேறின்றி வருந்திய விருத்தாசலம் ஹை[ஸ்]கூல் தமிழ்ப்பண்டிதர் திரு. சுந்தரராஜ உடை[]யார் நன்மகப்பேறு பெற்றனர். திரு. வேல[ா]யுத முதலியார் ஒரு வழக்கில் வெற்றிகொண்டார். இன்னும் மகப்பேறில்லாதவர்கள் அம்மையாரிடம் வந்து தெரிவித்தால், அம்மையா[ர்] அவர்களைப் பார்த்து, "அம்மா! உனக்கு பிள்ளை பிறந்தால் அப்பிள்ளையைப் பழநிக்[கு] அனுப்புகிறாயா?" எனக் கேட்பார். அத[ற்]குடன்பட்டவர்க்கு அவ்வாறே மகப்பே[று] வாய்க்கிறது; குழந்தை பிறந்த மூன்றும்மாத[த்தில்] அம்மையாரிடம் அப்பிள்ளையைக் கொடுப்பா[ர்]கள். அம்மையார் அப்பிள்ளையை ஒரு தாம்பாளத்தில் வைத்து மேலே தூக்குவார்: பிள்ளை காணாமற் போய்விடும்: நாலைந்து நாழிகை கழித்து அம்மையார் முன் போலவே தாம்பாளத்தை மேலே தூக்குவார்: அப்போது அக்குழந்தை மொட்டையடிக்கப்பெற்றுத் திருவெண்ணீறும் உருத்திராக்க மாலையும் அணிந்துகொண்டு அத்தட்டில் வந்திறங்கும். இன்னும் சிலர், தாங்கள் நினைத்த காரியம் முடியுமா? அல்லது முடியாதா? என்று அம்மையாரிடம் கேட்பார்கள். அப்போது, அம்மையார் அவர்களிடம் மண்ணுங்கட்டி புழுதி மண் முதலிய பொருள்களைக் காகிதத்தில் வைத்து மடித்து அவர்களிடம் கொடுப்பார். அக்காரியம் முடியுமென்றால், அவை கற்பூரம், கற்கண்டு, சர்க்கரை முதலான நல்ல பொருள்களாக மாறியிருக்கும். முடியாதென்றால் கரி யெருமுட்டை முதலான நன்மையில்லாப் பொருள்களாக மாறியிருக்கும். இவ்வாறு மாறும் வகையைக்கண்டு தான் அம்மையார் பலாபலன்களைப் பிறருக்குச் சொல்லி வருகிறார்.



வானிலிருந்து வரும் பொருள்கள் இரண்டு முழத்திற்குமேல் வரும்பொழுது தான் தெரிகின்றன. போகும் பொருள்களும் அப்படியே. அவை யெங்கிருந்து வருகின்றன என்று கேட்டால், அம்மையார் அவையெல்லாம் பழநியிலிருந்தே வருகின்றன என்று சொல்லுகிறார்.

இவ் வம்மையாரது அருஞ்செயல்களைப் பார்க்க விரும்புவோர், திருச்சிக்கும் விழுப்புறத்திற்கும் புதிதாக அமைக்கப்பட்டிருக்கும் இருப்புப்பாதையில் சேந்துறை ஸ்டேஷனில் இறங்கி அம்மையார் வசிக்கும் மருதூர் என்னும் கிராமத்திற்குப் போய்ப் பார்க்கலாம்.

குறிப்பு.—சென்னை திருவல்லிக்கேணி வீரவாகு சங்கக் காரியதரிசி திரு. க. ப. பசுபதி முதலியார் அவர்கள் அவ்வூருக்குச் சென்று இவ்வம்மையாரை நேரில் தரிசித்து இவரது தாம்பாளத்தில் இரண்டணா வைக்க, அதை அம்மையார் மேலே தூக்கவும், அணாவுக்குப் பதிலாக மிளகு, அரிசி, விபூதி முதலிய வந்தன. அவற்றை முதலியார் அம்மையாரிடமிருந்து அகமகிழ்வுடன் பெற்றார்.

## சமயப் பகுதி

### இந்து தெய்வ மூர்த்த தத்துவார்த்த விளக்கம்

அன்பு மறிவுமிக்க சிவநேசச் செங்குந்த குலச் சீரியர்காள்!

திருவளர்ந் தோங்குமிப் பரத கண்டத்திற் சீருற்றுச் சிறந்து விளங்கும் நம் இந்து மக்கள் ஸ்ரீசிவபெருமானுகியாக விநாயகர், சுப்பிரமணியர், சோமாஸ்கந்தர், நடராஜர் முதலிய கடவுள் மூர்த்தங்களையும், அய்யனார், பிடாரி, மாரி, மாடன், கருப்பன், அம்மைச்சார் முதலிய சிறு தேவதைகளையும், தத்தம் வருணாச்சிரமப் பகுதிக்கேற்ப வழிபடு தெய்வமாய்க் கொண்டு வணங்கி வழிபாடாற்றி வருகின்றனர். சிலர் இத்தேவதைகளுக்குப் பிரார்த்தனையாக உயிர்ப்பலி கொடுக்கின்றனர். சிலர்மேல் ஆவேசம் வந்து ஆடிக் கோயில்களில் குறி சொல்லுகின்றனர். ஆடு, மாடு, கோழி, பன்றி முதலிய உயிர்ப்பலி கேட்கின்றது. என்னே! இவர்களின் அறியாமைக் கூற்று! கண்டதெல்லாஞ் சாமி! தின்பதெல்லாங் கொலை!! இது விஷயங்களிலுள்ள உண்மைக் கருத்துக்களை விளக்கியும், ஆபாசங்களை நீக்கி, அறியாமையைக் கண்டித்தும், நம்மித்திரனில் தொடர்ச்சியாக வெளியிடுமாறு 5-7-29-ல், திருப்புலிவனம் தமிழ் மாணவர், கன்னியப்பன் என்பவரும் மற்றுஞ்சில பிரமுகர்களும் விரும்பிக் கேட்டுக் கொண்ட வண்ணம், இந்து தெய்வ மூர்த்த, தத்துவார்த்த விளக்கம் என்னும் மகுடமிட்ட வியாசம் ஒன்றை ஈண்டு தமியேன் வரைய முன் வந்துள்ளேன்.

உலகத்திலே நாஸ்திகர்களைத் தவிரக் கடவுள் இல்லையென்கிற மதம் எதுவுங் கிடையாது. நாஸ்திகனுங்கூட அடியோடு ஒன்றுமில்லை யென்கிறதில்லை; இயற்கை (Nature) என்பது ஒன்று இருக்கிறது என்கிறான். எல்லா மதங்களும் கடவுள் ஒருவர் உண்டென்பதை ஒப்புக்கொள்ளுகின்றன. இவ்வுலகுக் கெல்லாம் கடவுள் ஒருவரே யென்பதும், அவரையறிய ஏற்பட்டிருக்கும் மார்க்கம் என்ற மதங்கள் பல

வென்பதும் யாவரு முணர்ந்த விஷயங்களே. எல்லா மதங்களாலும் பாதிக்கப்படுபவர் எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் ஒருவரே.

"யாதொரு தெய்வங்கண்டீரத் தெய்வமாகியாங்கே
மாதொரு பாகனார் தாம்வருவார்."

என்பது. மனவாக்கினுக் கெட்டாத சமயாதீதப் பரம்பொருளை, அருவன் என்போர் சிலரும், உருவன் என்போர் சிலரும், அருவுருவன் என்போர் சிலருமாகப் பலவித கொள்கைகளை யுடையவர்களே யன்றி பல கடவுளுளர் எனக் கூறுவார் அறிவுடை மக்களில் எவருமிலர். ஆனால் நம் இந்துமதமாகிய சைவம், வைணவம் முதலிய மதங்களிலே, பல கடவுள் மூர்த்தங்கள் காணப்படுகின்றதே! பல மூர்த்தங்களையும் வழிபாடு செய்கின்றார்களே! கடவுள் ஒருவரா? பலரா? என்ற ஆசங்கை நிகழலாம். கடவுள் ஒருவரே நம் இந்துமத ஸ்தாபகர்களாகிய பெரியார்களின் கொள்கையும் இதுவே. வேதத்தின் முடிவு மிதே.

"தெய்வம் ஒருவனேயென்று உணரவல்லீரேல்
அருவினைகளோந்துமறும்"

என்பது நம் ஔவைப் பிராட்டியாரின் அமுத வாக்கன்றோ? இந்து மத நூல்களின் முடிவான கருத்தும் இதுவேயா மென்க. 'பொன்ஒன்றே, பணி பல' என்பது போன்று, கடவுள் சர்வ சக்தியுடையவராதலால் அன்பர்கள் யாரார் எவ்வித பக்தியோடு எந்தெந்த விதமாய்த் தம்மைத் தரிசித்து வணங்கினார்களோ, அந்தந்த மூர்த்தமாகவே, அவரவர்களுக்குக் காட்சி யளிக்கின்றனர். அந்த உருவங்கள் தான் நம் இந்துமதத்தில் பல கடவுள் மூர்த்தங்களாக (விக்கிரஹங்கள்) வழங்கப் பெறுகின்றன. நாம் அவரைஎப்படிப் பாவித்து வணங்குகிறோமோ அப்பாவனையின் வடிவமாகவே இறைவன் நமக்கு வெளிப்படுகின்றான். வானமிசை விளங்கும் வெள்ளிய சந்திரன் ஒன்றே யெனினும், நீர் நிறைந்த பல குடங்களில் பல சந்திரர்களின் வடிவம் பிரதிபலித்துத் தோன்றுதல் போல, தெய்வ மூர்த்தங்கள் பலவாயிருப்பினும், எல்லாவற்றுள்ளும் விளங்குங் கடவுள் ஒருவனே யென்று உணரவேண்டும். ஆனால் நம் இந்து தெய்வ மூர்த்தங்கள், ஒவ்வொன்றும் ஒவ்வொரு தத்துவார்த்தத்தையும் இறைவனின் எண் குணம் செயல் முதலிய சூக்கும கருத்துக்களையுந் தன்னுள்ளடக்கிக் கொண்டிருக்கின்றது. ஆழ்ந்த கருத்துடன் ஊன்றிப் பார்த்தறியும் நுண்ணறிவாளர்க்கே இது புலனாகும். ஆகலின் இது விஷயத்தைப்பற்றி யாராய்ச்சி செய்வோமாக. இறைவன் திருவருள் துணைபுரிவதாக.

### விநாயக மூர்த்தம்

அகண்டாகார நித்யவியாபக சச்சிதாநந்தப் பிழம்பாய் விளங்கும் பரப்பிரமம் (சிவபெருமான்) ஆன்மகோடிகளுக்கருள் செய்யும் பொருட்டுக் கொண்டருளிய மூர்த்தங்கள் பல. அவற்றுள் விநாயக மூர்த்தமே மிகச் சிறந்ததாம். என்னை யெனின்! தனக்கொரு தலைவனையுடையோன் கடவுளாதல் பொருந்தாது. இவருக்குமேல் ஒரு தலைவர் இல்லை யென்பது விநாயகரென் னுமிவரது திருநாமத்தாலே நன்கு அறியக் கிடக்கின்றது. இக்கடவுள் சிவபெருமானின் வேறாகாத "ஓம்" என்னும் மகா மநுவினின்றும் பூதாங்கம், தேவாங்கம், மிருகாங்கம் என்னும் மூன்றங்கங்களுடன் பிரணவ சொரூபியாய் யானைமுக வடிவுடன் தேவர் துயரகற்றுவான் கஜமுக சூர சம்மார நிமித்தம் தோன்றினர் என்பது சரித்திரம்.

(தொடரும்)

வை. ச. இராமலிங்க முதலியார்.
துணைத்தலைவர்,
சைவசித்தாந்த செங்குந்த சமாஜம், கண்டாச்சிபுரம்.

---

### நரம்புச் சிலந்திக்கு மருந்து

நஞ்சுள்ள புஷ்பம் ஒன்று உளது. அதன் பெயர் கனகாம்பரம். அப்புஷ்பத்தை ஆமணக்கெண்ணெய் விட்டரைத்து நரம்புச் சிலந்திக்குப் பூசினால் அது குணமாய்விடும். இது கையாளும்போது குழந்தைகள் வாயில்விடாமல் கவனித்துக்கொள்ள வேண்டியதவசியம்.

* * *

### புது இருப்புப் பாதை.

கொல்லங்கோட்டிலிருந்து திருச்சூருக்குப் புது ரெயில்பாதை போடுவதற்கும், சொரனூர் எறனகுளம் பாதையைப் பிராட்கேஜ் என்னும் பெரிய பாதையாக மாற்றி யமைப்பதற்கும் தீவிர முயற்சி செய்யப்பட்டுவருகிறது.

* * *

### கடலாமை.

எட்டு அடி நீளமுள்ள கடலாமை யொன்று சமீபத்தில் சென்னைக் கடலோரத்தில் தொக்கப்பட்டது. இதனைச் சென்னை செத்த காலேஜ் (Museum)என்ற அபூர்வ பொருட்காட்சி சாலையார் பத்திரமாக வைத்திருக்கிறார்கள்.



(6)

## பொது விஷயம்

### உண்மையினுயர்வு

அருமணிக்கடல் சூழ்ந்த இந்தியவுலகின்கண் மக்களாய்ப் பிறந்த நாம், கல்வி யறிவு ஒழுக்கங்களினாலும், குணவிசேடத்தினாலும் மேம்பாடெய்தி உண்மையைக் கடைப்பிடித் தொழுகுதல் மிகவும்அத்தியாவசியமாக வேண்டற்பாலது. உலகில் ஒவ்வொருவரும் தமக்குத் தீமையை வருவித்துக்கொள்ள விரும்பாமலிருப்பதோடு நன்மையைப் பெருக்கிக் கொள்ள முயற்சி செய்வார்க ளென்பது யாவரு மறிந்த விஷயம். தீமைக்குக் காரணமாயுள்ளவைகளை விலக்குதலும், நன்மைக் கேதுவாயிருப்பனவற்றை யனுஷ்டித்தலும் மாணிடர்களினியல்பு. நம வாழ்நாட்களில் நன்மையையும் கௌரவத்தையும் அடைவதற்கு முக்கிய சாதனமாயுள்ளது உண்மை யுணர்தலே. உண்மை, வாய்மை, மெய்மை என்பன ஒரு பொருட் சொற்கள். சத்தியம், நிஜம் என்னும் வடமொழிச் சொற்களும இத்த பொருளை யுடையன. நல்லொழுக்கங்களில உண்மை யுரைத்தலையே மிக மேலானதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையாவது பொய் சொல்லாதிருத்தலாம். பிறருக்குத தீமையைத்தராத சொற்களைச் சொல்லுதலே யுண்மை யெனப்படும்.

"வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும்
தீமையிலாத சொலல்." என்பது குறள். அதாவது தீமை பயவாததாய் உள்ளதை உள்ளவாறே கூறுதல். அவ்வாறு சொல்லுமிடத்தும் உலகுக்கோ பிறருக்கோ கேடுவருமாயின் அது வாய்மை யெனப்படாதது. தவிர உண்மைக்கு மாறாக பொய்மை புகலுமிடத்தும் அது யாவர்க்கும் எததகைய தீங்கையும் விளைவிக்காது, நன்மைகளையே தருமாயின அது வாய்மையெனக் கருதப்படும். இதனை

"பொய்மையும் வாய்மையிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்," எனத்தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் மிகதெளிவாகக் கூறியிருக்கின்றார்கள். பொய்யாவது, நடந்தொன்றிருக்க மற்றொன்றைச் சொல்வதும், ஒன்று நடவாதிருக்க அதை நடந்ததாகச் சொல்வதும, நடந்ததை நடக்கவில்லை யென்று சொல்வதும் போல்வன. அப்படிப் பொய் சொல்வதால் விளையுங் கேடுகள் பலவாதலாலும், உண்மையே சொல்வதால் உண்டாகும் நன்மைகள் அதிகமாதலாலும், "உண்மையைக் கைக்கொள்", "வாய்மை கடைப்பிடி", என்று நம் பெரியோர்கள் கட்டளை யிட்டிருக்கின்றனர்.

"தன்னெஞ்சறிவது பொய்யற்க, பொய்த்தபின்
தன்னெஞ்சே தன்னைச்சுடும்" என்பது திருக்குறள் வாக்கியம். ஒருவன் தான் பொய்யென்றறிந்த ஒன்றை மற்றவர்களுக்கு மெய்போலச் சொன்னால் அவன் மனமே அவனைச் சுடுகின்றது, என்பது பொருள். ஆதலால் நம் மனம் அறிந்த அல்லது நேரில் கண்ட எந்த விஷயத்தையும் மறைத்துச் சொல்லுதல் கூடாது. அப்படிச் சொல்லுதலே பொய் எனப்படும். இதை வேறொருவர் அறியாவிட்டாலும, நம் மனம் நன்கறியு மாதலால் நமக்குத் தக்க தண்டனை நம் மனத்தாலேயே கிடைக்கும் என்பது திண்ணம். உண்மை யுரைப்பதனால் மனத்திறகுத் திருப்தியும், உலகத்திற் புகழும் கௌரவமும கிடைக்கின்றது. உண்மையினால் இப்பூவுலகில் நன்மைகளை யடைவதுமட்டுமன்றி மேலுலகில் உயர்ந்த பதவிகளையுமடையலாம. ஆங்கிலேயர்கள் உண்மையையே உயர்வாகக் கொள்ளுகின்றனர். "மக்கள் இயல்பில் உண்மையே உயர்ந்த நலம்" (Truth is the sovereign of human nature) என்பது ஆங்கில ஆசிரியர்களின் கொள்கை. வாய்மையே மக்கட்கு ஓரணிகலன் போல்வது. "உண்மை உலகாளும" "உண்மையே வெல்லும், உண்மையே வுயர்வு" என்பன நம் பண்டைய பெரியோர்களின் பழமொழி. ஆதலின் நாமனைவரும் உண்மையைக் கைக்கொண்டு, சத்தியந் தவறு நெறியினராய் ஒழுகுதல்வேண்டும். சத்தியத்தைக் கைப்பிடித்தலாலுண்டாகும் புகழுக்கும், "சத்தியந் தலைக்காக்கும்" என்னும் பழமொழி யினுண்மைக்கும், நம் சூரிய குலதோன்றலாகிய அரிச்சந்திர பூபதியின் சரிதமொன்றே போதிய சான்றுடை

யும். இவர் சத்தியத்தை முன்னிட்டு அடைந்த கஷ்டங்களும் இழிதொழில்களும் கூறலாந் தகைமைத்தன்று. இராஜ்ஜியமிழந்தும், காசி நகர் சென்று மனைவியை விற்றும் தாம் புலையனுக்கு அடிமைத்தொழில் பூண்டும், தம் மனைவியைவெட்டத் தாமே கொலையாளியாயும், சத்தியத்தை விட்டாரில்லை. இதனாலன்றோ மும்மூர்த்திகளையுங் கண்டு தெரிசிக்கும் பெரும் பேறுபெற்றார்? கௌசிகமுனியின் தவப்பயனில் பாதியுங் கைவரப்பெற்றார்? அதுடனில்லாமல் இப்பொழுதும் யாவரும் துதி செய்யும்படியான பெரும்புகழையும் பாக்கியத்தையும் பெற்றார்? ஆகலின் "பொய்யுரை யஞ்சுமின்" என்ற இளங்கோவடிகளின் உபதேசத்தைக் கைக்கொண்டு பொய் புகலுவதை யறவே விடுத்து உண்மை யுரைத்தலைக் கைக்கொள்ள வேண்டுமென்பது எமது பிரார்த்தனை.

இனி உண்மையுரைத்தலினான் அடையும் பயனாதிகளைப் பற்றி யொரு சிறிதாராய்வாம். ஒருவன் உண்மையுரைத்தலையே விரதமாகக்கொள்வானாயின் அவன் வேறொரு தருமஞ் செய்ய வேண்டியதில்லை. பொய்யாமையே எல்லா அறங்களிலும் சிறந்ததாகும். இதனை

"பொய்யாமை பொய்யாமை யாற்றினறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று" எனவும்,
"யாமெய்யாக் கண்டவற்றுளில்லையெனத்தொன்றும்
வாய்மையினல்ல பிற"

எனவும், வரும் திருக்குறளானுணர்க. உண்மையுரைத்தலினால் இம்மையில் புகழும் கௌரவமும், அம்மையில் மோக்ஷவின்பமும்சித்திக்கும். உண்மை யுள்ளவனைக் கடவுள் நேசிக்கிறார். அவனுக்குத் தெய்வ கடாக்ஷமும் காரியசித்தியும்எளிதிலுண்டாகின்றன. பகவத் தரிசனமும், இலக்குமி கடாட்சமும் கிடைக்கின்றன. உலகத்தாரால் நன்கு மதிக்கப்படுகிறான். எனவே பொய்மையை விடுத்து வாய்மையைக் கைக்கொள்ள வேண்டு மென்பது பெற்றாம். பொய் பேசுதலை விடுத்து வாய்மையைக் கைகொண்ட கள்வன் கதையை உங்களுக்கு ஞாபகமூட்டி நம் வியாசத்தை முடிப்பாம்.

திருட்டுத்தொழில் செய்வதில் வல்ல கள்வனொருவன், தவத்திற் சிறந்த மகாதவசியாகிய மகானொருவரைக் கண்டு வணங்கித் தனக்கு உபதேசஞ் செய்யுமாறு கேட்டுக் கொண்டான். மகான் அக்கள்வனை நோக்கிச் சகல கெட்ட விஷயங்களையும் விட்டுவிட வேண்டுமென்றனர். கள்வனோ தான் சிறுவயதில் கைக்கொண்ட தனது கெட்ட விஷயங்களை விட்டுவிட முடியாதென்றும், தனக்கு அவர் சொல்லும் உபதேசமானது மிகச் சிறியதாய்த் தனது பழைய பழக்க வழக்கத்துடன் அனுஷ்டிக்கக் கூடியதாய், அதனால் தனக்கு மேலான பதவி கிடைக்கக்கூடியதாயிருக்கவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டான். மகான் சிறிது நேரம் யோசித்து முடிவில் கள்வனை நோக்கி, 'அப்பா! நீ கோரியபடி ஒரு உபதேசஞ் செய்கிறேன். அதைக்கேட்டுக்கொண்டு போவதால் மட்டும் பயனில்லை; அதன்படி நடக்கவேண்டும். அதாவது, நீ எப்பொழுதும், எவ்விடத்தும், எந்தத்தொழிலிலும், உன் தலை போகும்படியான ஆபத்து உனக்கு நேர்வதாயிருந்தாலும், "உண்மை", அதாவது, "பொய்சொல்லாதிருத்தல்" "கண்டதைக் கண்டவாறே, உள்ளதையுள்ளவாறே சொல்லுதல்" என்ற குணத்தைக் கடைபிடித்து ஒழுகுதல் வேண்டு'மென்றனர். அவ்வாறே உபதேசம் பெற்றகன்ற கள்வன் பின்னர் ஒருநாள் தன் வறுமையி னிமித்தம் அரசன் அரண்மனையிற் கன்னக்களவு செய்ய நடுநிசியிற் புறப்பட்டான். வழியில் மாறுவேடம் பூண்டு நகர் சோதனைக்காக வந்த அரசர் கோமகன் இவனைக் கண்டு யாரென வினவக் கள்வன் "நான் ஒரு திருடன் அரசன் பொக்கிஷசாலைக்குக் கன்னம் வைக்கப் போகிறேன்" என்றனன். மன்னர் மன்னனும் அவன் வாய்மைக்கு மெச்சித் தானும் ஒரு திருடனென்றும் தானும் அரண்மனைக்கு களவு செய்யக் கூட வருவதாகவுஞ் சொல்ல, இருவருமாக அரண்மனையடைந்து கன்னம்வைத்துக் கள்வனை உட்சென்று திருடிவருமாறு சொல்லியனுப்பினன். உட்சென்றவன் வேறெதையும் எடுக்காமல், அரசன் மிக்க ஜாக்கிரதையாகவும் அன்பாகவும் காப்பாற்றிவந்த இரத்தினமணிகள் மூன்றில், தனக்கு ஒன்றும், தன்னுடன் வந்த கூட்டாளிக்கு ஒன்றுமாக, இரண்டுமணிகளைமட்டி லெடுத்துக் கொண்டு, அரசனுக்கு ஒன்றை வைத்துவிட்டு வெளியேறி வந்தனன். வெளியே வந்ததும் மாறுவேடம் பூண்டு தன்னுடன் வந்த அரசனாகிய தன் கூட்டாளிக்கு ஒரு மணியை யளித்துத் தான் போய்வந்த சங்கதியனைத்தையுங் கூறித் தன்னிருப்பிடத்தையுந் தெரிவித்துத் தானொரு பணிமேயாம் வீடடைந்தனன். பொழுது விடிந்ததும் அரசன் தன் மந்திரியை யழைத்து 'நமது அரண்மனையிற் களவு போனதாக ஒரு சொப்பனங்கண்டேன். நீ சென்று யாவுஞ் சரியாயிருக்கிறதா என்று பரிசோதித்துவா? என்னென்ன களவு போயி



ருக்கிறது பார்ப்போம்' என்று சொன்னான். மந்திரி அவ்வாறே பரிசோதித்து வருகையில் அரசன் வைத்திருந்த மூன்று மணிகளில் இரண்டு மணிகள் மாத்திரங் களவுபோயிருப்பதைக் கண்டு ஆச்சரியமடைந்து, அந்த ஒரு மணியைத் தான் எடுத்துக்கொண்டு மூன்று இரத்தினமணிகள் மட்டும் களவுபோய் விட்டதென்று அரசனிடஞ் சொன்னான். பகலில் சபை கூடியதும், அரசன் சேவகனை அழைத்து கள்வனிருப்பிடஞ் சொல்லி, அவனை யழைத்து வருமபடி ஆக்ஞாபித்தான். மந்திரியோ ஒரே பிடியாய் மூன்று மணிகளையுந் தான் காணவில்லையென்று சாதித்தான். முடிவில் அத்திருடன் வந்ததும் அரசன் அவனை நோக்கி "நீ யார் உன் வரலாறென்ன?" என்று வினவினன். அதற்கு அக்கள்வன் "ஐயா நான் உண்மையைச் சொல்லுகிறேன் கேளுங்கள்" என்று "நான் ஒரு திருடன். நான் வசிப்பது இந்தவூர். முன்னொருநாள் ஓர் சன்னியாசியிடம் உபதேசம் பெற்றுக்கொண்டேன். அவர் எது நடந்தாலும் உண்மை பேசும்படி உபதேசித்தனர். அதுமுதல் நான் உண்மையே பேசி வருகிறேன். நேற்றிரவு என் வறுமை நோயால் தங்கள் அரண்மனைக்குத் திருட வந்தேன். வழியிலெனைப்போலொத்த ஒரு திருடனைச் சந்தித்து அவனுடன் கூடி தங்களரண்மனையிற் கன்னம் வைத்து உட்சென்றேன். தாங்கள் வைத்திருந்த மூன்று இரத்தினமணிகளைக் கண்டேன். அதின் பேரில் என் கருத்து சென்றது. நான் வேறெதையுந் தொடாமல் எனக்கொன்றும் என் தோழனுக்கொன்றுமாக இரண்டு மணிகளை மட்டில் எடுத்துக்கொண்டு, தங்களுக்கென ஒருமணியை யவ்விடமே யிருத்திவைத்துவிட்டு வெளியேறி, நடந்த சங்கதி யனைத்தும் என் தோழனிடங் கூறி, அவனுக்கோர் மணியைக் கொடுத்துவிட்டு என்னிருப்பிடத்தையும் அவனுக்குத் தெரிவித்துவிட்டு நான் ஒரு மணியுடன் என் வீடு சேர்ந்தேன். அரசே! நான் எடுத்துக்கொண்ட ஒரு மணியும் இதோ இருக்கிறது" என்று அரசன் எதிரில் வைத்தான். அரசன் 'ஆகா மெத்த சந்தோஷம்? உன் கூட்டாளியாகிய எனக்கு நீ அளித்த மணி இதோ இருக்கிறது" என்று அரசனுந் தன்னிடமிருந்த மணியை எதிரில் வைத்துவிட்டு, உடனே மந்திரியைப் பார்த்து, ஏ! கயவனே! நீ காலையில் எடுத்த மணியை வைத்துவிடு" என்று பயமுறுத்தவே மந்திரி பயந்து தான் எடுத்த மணியைக் கொடுத்துவிட்டான். பிறகு அரசன் திருடனின் உண்மையை மெச்சி அவனிருந்த கீழ் நிலைமையிலிருந்து உயர்த்தி, உயர் ஸ்தானமாகிய மந்திரி வேலையைக் கொடுத்து, மந்திரியின் மடமையை நோக்கித் துப்பி அவனை மந்திரி வேலையினின்றும் நீக்கிவிட்டான்.

ஆகையால், சகோதர சகோதரிகளே, பொய்மையை விடுத்து வாய்மையைக் கைக்கொண்டதனாலடைந்த உயர்வையும், உண்மையைக் கைவிட்டதனாலடைந்த கேட்டையும் பாருங்கள். அரிச்சந்திரன், தருமர், மனு, இராமர், பரதன் முதலிய நம் நாட்டுவீரர்கள் உண்மையைக் கைக்கொண்டவாற்றாலன்றோ எல்லாப் பெரும் புகழ் படைத்து இன்றும் விளங்குகின்றனர். ஆகலின் நாமும் வாய்மையையொழித்து உண்மையைக் கடைப்பிடித்தொழுக நம மறு முகந்திறைவன் நமக்கின்னருள் சுரப்பானாக.

வை. ர. இராமலிங்க முதலியார்,
துணைத் தலைவர்,
சைவசித்தாந்த செங்குந்த சமாஜம், கண்டாச்சிபுரம்.

---

### இலங்கையில் குழந்தைகள்.

இலங்கையில் பெற்றோர்களில் சிலர் தங்கள் குழந்தைகளை வீட்டுவேலை செய்வதற்காக விற்று விடுகிறார்களென்றும், பிறகு அக்குழந்தைகள் மிகவும் கேவலமாக நடத்தப்படுகின்றனவென்றும் சென்றவாரம் இங்கிலீஷ் பார்லிமெண்டில் கூறப்பட்டது. இது குறித்து விசாரணை செய்து பார்லிமெண்டுக்குத் தெரிவிக்கும்படி சிலோன் கவர்னரைக் கேட்டிருக்கிறார்களெனத் தெரிகிறது.

* * *

### சர்க்கரை செய்தல்.

இரசாயன சாஸ்திரத்தில (பொதுவாக விஞ்ஞான சாஸ்திரத்திலேயே) ஆணையற்று தற்போது விளங்குபவர்கள் அமெரிக்கர். பல நூதன பொருட்களையும், கருவிகளையும் கண்டுபிடித்துக்கொண்டு வருகிறார்கள். தற்போது அமெரிக்கா ரசாயன சாஸ்திரிகள் பீட்ரூட் கிழங்குகளினாலும், கருப்பஞ் சாற்றினாலும், சர்க்கரை எடுக்கப்படுவது போலவே புஷ்பங்களிலிருந்தும் சர்க்கரை செய்யலாம் என்று கண்டுபிடித்திருக்கின்றார்கள்.

* * *

### மோட்டாரினால் தீமை.

மோட்டார்கள் நகரங்களில் பெருகப்பெருக அவைகளிலிருந்து தீமை ஏற்படுகிறது. மோட்டார்களின் கீழ்ப்பாகத்திலிருந்து வெளிப்படும் கரியமல வாயுவானது ஜனங்களுக்குக் கெடுதியை விளைவிக்கிறது. இதை நீக்க ஒரு டாக்டர் இப்புகையானது மோட்டாரின் கீழ்ப்பாகத்திலிருந்து வராமல் மேல் நோக்கிச் செல்லும்படியாகச் செய்துவிட்டால் அவ்வளவு கெடுதல் செய்யாதெனக் கூறுகிறார். ஏனெனில் அப்புகையானது காற்றைவிட அதிக லேசாக இருப்பதால் மேல் நோக்கிச் சென்று விடுமாம்.

## சுகாதாரப் பகுதி

### காற்று (Air)

(தொகுதி 3, 256-ம் பக்கத் தொடர்ச்சி.)

### பிராணவாயு (Oxygen)

ஆகவே நாம் சுவாசிக்கும் வாயுவில் அதிகமாகப் பிராணவாயு இருக்கப் பார்க்கவேண்டும். ஆனால் முழுதிலும் பிராணவாயுவாகவே இருக்கக்கூடாது. அவ்விதமாகச் சாதாரணமாய் காற்று தனித்து இருக்கவேமாட்டாது. உப்புவாயு கலந்துதானிருக்கும். உப்பு வாயு கலவாமல் சுயமாகத் தனித்து இருக்கின் எல்லாம் எரிந்துபோகுமென்றே சர்வசக்தர் இதன் வேகத்தைத் தணிக்க உப்பு வாயுவைக் கலந்திருக்கிறார்.

இது ஜன அடர்த்தியான பட்டணங்களில் சிறிது விசாலமாயும், மரங்கள், கொடி, செடிகள் அடர்ந்த இடங்களில் அதிகமாகவும் இருக்கும்.

இதன் செயல் இரும்பு, கந்தகம், திமிரி பாஷாணம் முதலானவைகளின் மேல் செல்லும். பொன வெள்ளிகளின் மேல் இதன் செயல் நடவாது.

மேற்குறித்தவைகளினால் பிராணவாயு நம் தேக சுகத்திற்கு எவ்வளவு அவசியமெனத் தெரிகிறதல்லவா? ஆகையால்தான் கடவுள் நம்மீது கருணைகூர்ந்து நமக்கு அதை இலவசமாகக் கொடுத்திருக்கிறார். ஆனால் நல்லவனும் தீயசேர்க்கையால கெடுவதுபோல் அதை நம்முடைய துர்க்கிருத்தியங்களினால் கெடுக்காமல் நாம செவ்வனே உபயோகப்படுத்திக்கொள்வது நமது கடமையாகும்.

எப்படியெனில், நம்மையும், நம்மைச்சுற்றிலுமுள்ள வஸ்துக்களையும சுத்தமாக வைத்துக்கொள்ளவேண்டும. அணியும ஆடைகளும் அழுக்கற்று இருக்கவேண்டும. கள்ளுண்ணல, புலால புசித்தல முதலான துர்கிருத்தியங்களை அறவே விடவேண்டும.

நம் மினத்தவர்கள் செய்யும தொழில் முகாந்தரத்தில் நம்மைச் சூழ்ந்துள்ள காற்று வெகு சீக்கிரத்தில கெட ஏதுவிருக்கிறது. எப்படியெனில, நூல் நூற்கும்போதும தறி நெய்யும் போதும் பஞ்சு தூசுகள் அங்கு அதிகமாக பரவுகின்றன. அதனால் நற்காற்று கெடுகின்றது. அவ்விதம் கெடாதபடி இத்தொழில் நடாத்தும் இடங்களை இருண்ட குகைகளைப் போல் வைத்திராமல், அதிகக் காற்றோட்டமுள்ளவைகளாக இருக்கப் பார்க்கவேண்டும். வீட்டின் வாயில்களையும், தாழ்வாரங்களையும், கூடங்களையும், தட்டி முதலானவைகளினால் அடைத்து விடாமலிருக்கவேண்டும். வீட்டின் அறைகள் கூடியவரையில் பெரிதாகவும், பெரிய ஜன்னல்கள் பொருந்தியுள்ளவைகளாகவும் இருக்கவேண்டும். பாவுக்கு வேண்டிய புளித்தக் காடித்தண்ணீர்ப்பானைகளையும் பணத்தைப் போல் வீட்டு அறைக்குள் போற்றி வைக்காமல் வெளியான இடங்களிலோ, புறக்கடைகளிலோ, நாட்பட வைத்துவைக்காமல் உடனுக்குடன் செலவழித்து விடவேண்டும். தறி நெய்யும் மேடைகளின்மேல் பருத்தித்தூசு அதிகமாகப் படிகிறதினால் தினம் இரண்டுமுறை பெருக்கிச் சுத்தஞ் செய்துகொண்டே இருக்கவேண்டும். தறிமேடைகளின்மேல் தாரபோட்டுவைக்கும் கஞ்சிப் பாத்திரங்களையும், கஞ்சி மட்டைகளையும் பிரதிதினம் சுத்தஞ் செய்துகொண்டே இருக்கவேண்டும்.

நம்மைச் சுற்றிலுமுள்ள வாயுவில் தூசுகள் அடராதபடி தக்க ஏற்பாடுகளைச் செய்யவேண்டியிருக்க, சிலர் புகையிலையைக் கடைந்து மூக்குத்தூள் என்று பெயரிட்டு அதை உபயோகப்படுத்துகிறது என்ன பயனைக்கருதியோ? என்ன கொடுமை! என்ன வருமை! காற்றிலுள்ள தூசுகள போதாதென்றோ இவ்விதஞ் செய்கிறது! இதனால வரும நற்பயன் ஒன்றுமில்லாவிட்டாலும இத்தூள் மூக்கின் துவாரமண்டைக்கும, நுரை ஈரல்களுக்கும சென்று அங்குள்ள அவயவஙகளைக் கெடுக்கின்றன. ஆனால் இதை உபயோகப்படுத்துபவர்களுக்கு இவை புலப்படா. நாளடைவில் அக்கருவிகளைச் "சிங்கி குளிர்ந்து கொள்வதுபோல்" கெடுக்கிறதும தெரியாது. இக்கொடிய துர்ப்பழக்கத்தை அறவே விட்டுவிட வேண்டும்.

மனிதர்களுக்குச் சுவாசந்தான் உயிர். எவ்வளவு சுவாசத்தை அதிகமாக செலவழிக்கிறார்களோ அவ்வளவுக்களவு ஆயுள்குறைகின்றது. தூங்குங்கால் சுவாசத்தை மூக்கின் துவாரமே விடப்பழகல்வேண்டும். வாயின் வழியாக விடவேகூடாது. நித்திரையில் பெரிய குரட்டைவிட்டுத் தூங்குவதையும் தடுத்தல் அவசியம். யோகீஸ்வரர்கள் பிராணுயாமம் முதலானவைகளினால் சுவாசபந்தஞ் செய்து நிஷ்டைகூடி ஆயுளை விர்த்திசெய்கிறதினால் காலனையும் காலால் வெல்கின்றனர். இதனால் நற்காற்றின் அருமையும் பெருமையும், திறமையும் தெரிகிறதல்லவா? இவ்வித சாதனைகளில் அன்றோ பழகவேண்டும். நிற்க,

ஆண், பெண்மக்கள்கள் யாவரும், வருமையின் கொடுமையால் வேலைகளையே பார்த்திராமல் "கந்தையானாலும் கசக்கிக்கட்"டென்றபடி பிரதிதினமும் நீராடி ஆடைகளைத் துவைத்துக் கட்டவேண்டும். புலால் புசிப்பவர்களில் சிலர் அவர்களுடைய வீட்டில் நுழைதற்கும் சகியாத துர்நாற்றம் வீசும்படியான செய்கைகளைச் செய்து வைத்திருக்கின்றனர். அந்தோ பரிதாபம்! அந்நேயர்கள் சொல்லுபவர்களின் மேல் கோபதாபங் கொள்ளாமல் தாங்களே அக்கொற்ற கொடிய செயல்களை அறவே விட்டு சுத்தமாயிருக்கவேண்டும். ஏனெனில், "சுத்தம் சோறிடும்"

நல்லோரிணக்கம் வேண்டுவோர் அந்நேயர்களை நன்மார்க்கமாக அனுசரித்தால், அவர்களும் அடைந்தவர்களைச் சன்மார்க்கத்தில் பழக்கி நற்போதனைகளைப் புகட்டிப் பேரின்பவாழ்வை அடைய வழிகாட்டுவதுபோல், இவ்வரிய பிராணவாயுவையும் சுத்தமாக வைத்து நம்மைச் சுற்றிலும் பரவச்செய்தால், அவ்வாயுவும் பிரதியுபகாரத் தன்னுடைய சக்திர்த்தியங்களைச் செய்து நம் தேகங்களைச் சுகமாகவும், சுறுசுறுப்பாகவும் வைத்து, நோயற்றவாழ்வாகிய குறைவற்ற செல்வத்தையுங் கொடுக்கும். இதில் சந்தேகமே இல்லை. ஆகவே நம்மவர்கள் பிராணவாயுவை தங்களுடைய நல்ல நடை, உடை, பாவனைகளினால் நல்வரவேற்றுக்கொண்டே இருந்து சுகமடைய நம் முருகப்பெருமான் அருள்புரிய வேண்டுகிறேன்.

மா. பாமதுருநாத முதலியார்,
சானிடரி இன்ஸ்பெக்டர்,
திருமயிலாப்பூர், சென்னை.



## நாவல் பகுதி

### செங்குந்த யாத்திரைவாசி

#### எனது பயணம்

எனதரிய செங்குந்த சகோதர சகோதரிகளே! யான் என் யாத்திரையைத் துவக்கிச் சில மாதங்களே ஆயினும் ஏறக்குறைய தென்னிந்தியாவிலுள்ள எல்லா ஜில்லாக்களையும் சுற்றிப்பார்த்து வந்திருக்கிறேன். செங்குந்தர்கள் அனைவரும் ஒரே பரம்பரையைச் சேர்ந்தவர்கள் என்னும் உண்மையை விளக்கக்கூடிய அநேக அத்தாக்ஷிகள் அவர்களிடையே காணப்படுகின்றன. செங்குந்தர்கள் என்று யாவரும் எளிதில் கண்டு பிடிக்கக்கூடிய பல சிறப்புக்குணங்கள் எல்லா நாட்டுச் செங்குந்தர்களிடத்தும் அமைந்திருக்கின்றன. அவற்றையெல்லாம் கெட்டவையென்றாவது நல்லவையென்றாவது சொல்லமாட்டேன். நல்லவை சிலவும் தீயவை சிலவுமாக இருக்கின்றன. அவற்றுள் கக்ஷிப் பிரதிகக்ஷியும் ஒன்றாகும். இரண்டொன்று தவிர, கக்ஷியில்லாத செங்குந்த கிராமமே கிடையாதென்றே சொல்லவேண்டும். எனதரிய செங்குந்த சகோதரர்களுக்கே சிறப்பாகவுள்ள மற்றைய குணங்களைப்பற்றி இங்கு நான் சொல்லப்போவதில்லை. சமயம் நேர்ந்துழி ஆங்காங்குச் சொல்லுவேன்.

ஆரம்பத்திலேயே சகோதரர்களுக்கு யான் தெரிவித்துக் கொள்ளவேண்டிய விஷயமொன்றுண்டு. ஒற்றுமை என்பது மக்களாய்ப் பிறந்த யாவர்க்கும் அத்தியாவசியமானது. (ஒற்றுமையைப்பற்றிச் சொல்லவேண்டிய சந்தர்ப்பங்கள் எனது யாத்திரையில் அநேகமிருக்கின்றபடியால் அதைப்பற்றி யான் ஈண்டு சொல்லப் போவதில்லை.) சீரும் சிறப்பும் பெற்று வாழ நினைக்கும் மனிதனுக்கும் மனிதனுக்கும், ஜாதிக்கும் ஜாதிக்கும், நாட்டிற்கும் நாட்டிற்கும் ஒற்றுமை அவசியம் இருந்தே தீரவேண்டும். ஆகையால் இவ்வுண்மையினை யுணர்ந்த யான் நம்மினத்தவர்க்கும் மற்றைய இனத்தவர்க்கும் ஒற்றுமை கெட்டு விரோத முண்டாகக்கூடிய முறையில் எவ்வித முயற்சியும் செய்யத்

துணியேன் என்பதைச் சகோதர சகோதரிகள் ஞாபகம் வைத்துக்கொள்ள வேண்டும். எந்தச் சகோதர இனத்தவரோடும் நாம் விரோதம் கொள்ளுதல் கூடாது. என்றாலும், உண்மையை விளக்காமல் இருக்கவும் முடியாது. அதை ஒரு வியாஜமாக வைத்துக்கொண்டு அவர்களோடு பகைமை பாராட்டுதலும் கூடாது. இது எனது முக்கிய நோக்கங்களுள் ஒன்றாகும். ஒழுக்கம் முதலியவற்றால் நம்மினும் வேறுபட்டுள்ள சிலர் 'நாங்களே நவவீரர் பரம்பரையில் வந்தவர்கள்' என்றும், நாங்களும் நவவீரர் பரம்பரையில் வந்தவர்கள்தான்' என்றும், இக்காலத்தில் மாத்திரம் சொல்லிக்கொள்ளுகிறார்கள் என்று எண்ணவேண்டாம். இத்தகைய வீண் போட்டிகள் முற்காலத்திலும் வேறினத்தவரால் ஏற்பட்டுப் பின்னர் அவை இருந்த இடந்தெரியாமல் போய்விட்டன இதற்குமேல் இதைப்பற்றி விரிவாய்க் கூற எனக்கு இஷ்டமில்லை. இவ்விஷயத்தில் யான் நுழைந்ததற்குக் காரணம் என்னவென நீங்கள் நினைக்கலாம். அதனை விளக்குகிறேன். எனது யாத்திரையில் 'செங்குந்தர் அனைவரும்' 'எல்லாச் செங்குந்தர்களும்' என்பவைபோன்ற பிரயோகங்கள் ஆங்காங்கு விரவி வருமாகையால் அவ்விடங்களில் சகோதரர்களை மயங்கவைக்கலாகாதென்னும் கருத்துக்கொண்டே என உணர்வீராக. என் வியாசங்களில் வரும் 'செங்குந்தர்' என்னும் பதமானது நமது முதலாவது மகாநாட்டில் யார் செங்குந்தர்கள் எனத் தீர்மானிக்கப்பெற்றிருக்கின்றனரோ அவர்களை மாத்திரம் குறிக்குமேயன்றி ஏனையோரைக் குறிக்காது என்பதை மறக்கலாகாது.

குலாபிமான மென்பதைக் கனவிலும் கொள்ள எனக்கு நமது மகாநாட்டிற்குப் பிறகு புத்துணர்ச்சி உண்டாயிருப்பதுபோல ஏனைய சகோதரர்களுக்கும் உண்டாயிருக்கிற தென்பதை யாவரும் மறுக்கமுடியாது. செங்குந்தர்கள் உறக்கத்திலிருந்து விழித்து எழுந்துவிட்டார்கள். இறைவன் கடாக்ஷத்தால் நமக்கு நற்காலம் பிறந்துவிட்டது என்ற நன்நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள். எனினும் இன்னும் சில முக்கியமான இடங்களிலுள்ளவர்கள் குப்பகர்னனுக்கு உத்தம சீடர்களாகவே இருந்து வருகிறார்கள் என்பதையும் மறுக்க முடியாது.

இன்னும் யான் எடுத்த விஷயத்தைத் துவக்காது போய்க்கொண்டேயிருப்பேனாயின் ஒரு சமயம் உங்கள் பொறுமையை நீங்கள் இழக்கநேரிடும். அதற்கிடங்கொடாவண்ணம் யான் விஷயத்தில் நுழைகிறேன். யான் எனது யாத்திரையை முறையாகச் சொல்லுவேன் என்று எதிர்பார்க்கலாகாது.

சென்ற தை மாதம் ஒரு சுபதினத்தன்று எனது யாத்திரை பயணத்தைத்துவக்கினேன். ஆரம்பத்திலேயே நற் சகுனங்கள் தோன்றி என்னைப் பன்மடங்கு உற்சாகப்படுத்தின. எனது உறவினரும் நண்பர்களும் யான் யாத்திரையாகச் செல்லுகிறேன் என்பதை மாத்திரம் உணர்வார்களேயன்றி விபரம் ஒன்றும் அறிந்தாரில்லை உறவினரும், நண்பர்களும் யான் புறப்படவிருக்கும் தினம் மாலை 2 மணியிலிருந்து என் இருப்பிடத்தை நோக்கி வந்தபடியே இருந்தார்கள். அவர்கள் என்னைச் சூழ்ந்துகொண்டு குதூகலத்தோடு, 'உமது யாத்திரை உமக்கேயன்றி உம்மைச் சேர்ந்தவர்களுக்கும் நற்பயனை அளிக்கும்' என ஆசீர்வதித்தார்கள். அக்கூட்டத்திலிருந்த வயோதிகர் ஒருவர் அங்கிருந்தவர்களை நோக்கி 'ஐயா இப்பிள்ளை ஆழ்ந்த கல்வியும், கூர்த்த அறிவும், நல்லோரிணக்கமும், நல்லொழுக்கமும், தெய்வபக்தியும் வாய்க்கப்பெற்றவர் என்பதை யாவரும் உணர்வீர்கள். எங்கள் செங்குந்த குலத்தை விளக்க வந்த ஒரு திவ்யதிலகமென்றே சொல்லுவேன். இப்பிள்ளையைப் பார்க்குந்தோறும் அவரது வாய்ச்சொற்களைக் கேட்குந்தோறும் அவரது பரந்த நோக்கங்களையும் அரிய குணங்களையும் உன்னுந்தோறும் எனக்குண்டாகும் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. எனது ஆப்த நண்பரும் நெருங்கிய உறவினரும் பல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்ற புலவர் பெருமானுமாகிய எங்கள் துற்பாக்கியத்தால் சமீபத்தில் விண்குடியேறிய பெரிய முதலியார் அவர்கள் உண்மையிலேயே பெருந்தகையாளர் என்பது அவர்களது மைந்தர் ஆகிய இப்பிள்ளையினாலேயே நன்கு விளங்குகிறது. 'தக்கார் தகவிலர் என்பது அவரவர் எச்சத்தாற்காணப்படும்' என்ற மறைமொழிக்குத் தக்க எடுத்துக்காட்டு இதனினும் வேறு வேண்டுமோ? துப்பாக்கியினின்று பீரங்கியன்றோ உதித்தது. என் கூற்று முகஸ்துதி என்னும் குற்றத்துள் அடங்காவண்ணம் இதனுடன் நிறுத்திக் கொள்ளுகிறேன். 'தந்தைசொல்மிக்க மந்திரமில்லை' என்னும் ஆன்றோர் மொழியின் கருத்தை நம்மெல்லோரைக்காட்டிலும் இப்பிள்ளையே நன்குணர்வர். பெரிய முதலியார் அவர்களுக்கு இவ்வுலக வாழ்க்கையில் எவ்வித மனக்குறையுங் கிடையாது. எல்லாப் பாக்கியங்களும் நிரம்பப்பெற்றவர்கள் என்பதை இங்கு உணராதார் யார்? இப்பிள்ளை யென்றால் அவர்களுக்கு உயிர். இவருக்கும் அவர்களிடத்து அன்பு, மரியாதை, அடக்கம் முதலியவை இல்லையென்று சொல்லமாட்டேன். என்றாலும் ஒரே ஒரு விஷயத்தில் இவரிடத்தில் அவர்களுக்குத் திருப்தி யுண்டு. இந்த மர்மத்தை உங்களில் அநேகர் உணர்ந்திருக்கமாட்டீர்கள். பெரிய முதலியார் அவர்கள் இயற்கையாகவே மிகுந்த குலாபிமான முடையவர்கள். சீரிய செங்குந்த குலம் தற்காலம் மிகுதியும் சீர்கேடுற்றிருக்கிறது என்பதை உணருந்தோறும், பேசுந்தோறும் கண்ணீர்விட்டுக் கதறுவார்கள். நம் குல தெய்வமாகிய முருகவேளைத் தியானித்துச் சமுகச் சீர்திருத்தம் செய்ய வல்ல பிள்ளைகளைத் தோற்றுவிக்க வேண்டுமெனப் பிரார்த்திப்பார்கள். இப்பிள்ளையின் அறிவாற்றலைக்கண்டு, தாம் பன்னெடுநாள் கொண்டிருந்த எண்ணம் நிறைவேறுமென நம்பியிருந்தார்கள் ஆனால் இப்பிள்ளைக்குக் குலாபிமான மென்பது எள்ளளவுங் கிடையாது. குலத்தொண்டின் அவசியத்தைப் பற்றிப் பலநடவைகளில் இனிய வார்த்தைகளால் சொல்லியும் அது செவிடன் காதில் ஊதிய சங்காகவே முடிந்தது.



'இவர் தேசியக் கொள்கையுடையவராம். அதாவது நமது இந்தியாதேசம் முன்னேற்றமடையவேண்டுமாம். இந்தியர் இதர நாட்டு மேதாவிகளால் சமமாக மதிக்கப்பெற வேண்டுமாம். இக்கொள்கையை நான் ஒருபோதும் மறுக்கமாட்டேன். ஆனால் எத்துணைப் பேர் இதுவரையில் இவ்வுயரிய கொள்கையோடு உழைத்து வந்தார்கள், வருகிறார்கள்? என்ன ஆய்விட்டது? நம்மினத்தவர் வரையில் பார்ப்போம். நம்மவர்கள் எந்த வகையிலாவது கீழுக்குப்போவதன்றி மேலுக்கு வந்திருக்கிறார்களா? இதற்குக் காரணம் இன்னதென்று அவர்கள் உணர்ந்தாரில்லை. இந்தியர் எனப்படுவோர் யார்? நாமெல்லாருந்தானே. நாமும் நம் குலத்தவரும் என்னிலையில் இருந்துவருகிறோம்? அம்மாளிங்குப் பசித்திருக்க, கும்பகோணத்தில் கோதானம் செய்வதனால் என்ன பயனுண்டாகும்? நமது நாட்டில் நடையுடைபாவனைகளால் ஒன்றுக்கொன்று வித்தியாசப்பட்ட பல மரபினர்கள் இருந்து வருகிறார்கள், அவ்வவ் வினத்தைச் சேர்ந்த அறிவாளிகள் தம் தம் இனத்தவரைச் சீர்திருத்த முயன்று வருவாராயின், மொத்தத்தில் இந்திய சமூகம் வெகு சீக்கிரத்தில் முன்னேற்ற மடையுமல்லவா? பலன் தரும் ஒரு செடியை வைத்து வளர்ப்பவன் அச்செடியின் வேருக்கு எட்டும்படி நீரை அதனடியில் பாய்ச்சாமல் நமக்கு வேண்டியது காயும் பழமுந்தானே என நினைத்துப் பூத்துக் காய்த்துப் பழுக்கும் கிளைகளின் முனையிலும் இலைகளின் மேலும் நீரைத் தெளிப்பதை யல்லவோ இவர்கள் முயற்சி ஒத்திருக்கிறது?

ஆகையால் இவர் தகப்பனார் அவர் காலத்திற்குப் பின்னாவது அவர்கள் விருப்பத்தை நிறைவேற்ற முயலுமாறு இப்பிள்ளையை நான் கேட்டுக்கொள்ளுகிறேன். அவ்விஷயத்தில் உங்கள் அனைவருடைய உதவியையும் நாடுகிறேன் என மிக ஆத்திரத்தோடு கூறினார்.

இவற்றையெல்லாம் உற்றுக் கேட்டுக்கொண்டிருந்த யான் வயோதிகர் பேச்சின் ஆரம்பத்தில் அங்கிருந்தோர் முகங்கள் மலர்ந்திருந்ததையும் பின்னர் வாட்ட முற்றதையும் கண்டேன். இனிப் பலர் பலவாறு பேச இடந்தரலாகாதெனக் கருதி யான் உடனே அனைவரையும் நோக்கி 'யான் சொல்லுவதைச் சிறிது கவனித்துக் கேளுங்கள். மாமா நீங்கள் ஆயாசப்படவேண்டாம். என் அறியாமைக்காக என்னை மன்னிக்கவேண்டுகிறேன். யான் புறப்படுகிற சமயத்தில் சொல்ல நினைத்திருந்ததை இப்போதே வெளியாக்கும்படி மாமா எனக்குச் சந்தர்ப்பம் தந்ததைப்பற்றிச் சந்தோஷிக்கிறேன். சாதாரணமாய் யாத்திரை செய்வோருள் சிலர் தீர்த்த யாத்திரையையே பிரதானமாகவும், சிலர் சிவஸ்தல யாத்திரையையே முக்கியமாகவும், மற்றும் சிலர் விஷ்ணுஸ்தல யாத்திரையும் அவசியமெனவும் கருதிச் செல்வதுண்டு. ஆனால் யான் செய்யக்கருதியுள்ள யாத்திரை எத்தகைத்தோவெனில் கூறுகிறேன் கேளுங்கள். எனது யாத்திரை எமது குலப்பெருங் கடவுளாகிய முருகப்பெருமான் சதா நீங்காது எழுந்தருளியுள்ள செங்குந்த கோட்டங்களாகிய தலங்களையே பிரதானமாக நாடிச் செல்லும் செங்குந்த யாத்திரை எனப்பெறும். சமீபத்தில் என் மனதில் உண்டான பெரிய மாறுதலை நீங்கள் அறிந்திருக்கமாட்டீர்கள். எனது தந்தையார் சொல்லை அலக்ஷியம் செய்து அவருக்கு என்னிடத்தில் அதிருப்தி உண்டாக்கியதைப்பற்றி இப்போது வருந்துகிறேன். செங்குந்தர்களுக்குக் குலாபிமானமே கிடையா

தென்றும், கஷிகளேயே வளர்த்துப் பிற இனத்த வரால் அவமதிக்கப்பட்டு நாளுக்குநாள் மங்கிக் கடைசியில் வறுமையால் நசித்துப் போய்விடு வார்கள் என்றும், இவர்களைச் சீர்திருத்த முடிய வே முடியாதென்றும் கருதியே இவ்விஷயத் தில் எனது தந்தையாரின் வார்த்தைகளை ஏற் றுக்கொள்ள மறுத்தேன் நமது கலைச்சங்கத் தையும் மித்திரனையும் விளையாட்டுப் பிள்ளைகள் செய்கை யென்றே அலக்ஷியம் செய்தேன். 'உரு வுகண்டு எள்ளாமைவேண்டும் உருள் பெருந் தேர்க்கு அச்சாணியன்னா ருடைத்து' என் னும் மேலோர் மொழியையும் மறந்தேன். இவ் வெண்ணங்கள் யாவும் நமது முதலாவது மகா நாட்டின் பின் சூரியனைக்கண்ட பனிபோல் ஒழிந்தன. நீரேறினால் மாத்திரம் பயிரேறாது; நாளும் ஏறவேண்டும். அதுபோல் கல்வி ஏறி னால் மாத்திரம் போதாது வயதும் அனுபவ மும் ஏறிய பிறகே தெளிந்த அறிவும் ஏறும் என்னும் உண்மையை இப்போது அறிந்து கொண்டேன். அனுபவ முதிர்ந்த மூத்தோர் சொல்லை அமுதமாகக் கொள்ளவேண்டும். அதனாலன்றோ கடறக்கற்ற வயோதிகர் மொழியைச் சான்றோர் பொன்னைப்போல் போற்றுகின்றனர். எனது பக்குவ நிலையை அறிந்து ஆசான் (குரு) என்னைத் தேடி வந்து உபதேசஞ் செய்தருளினார். அதன் பிறகே கலங்கியிருந்த என்மனம், தேற்றாங் கொட்டையில் தெளிவுற்ற நீரைப்போல் தெளி வுற்றது. இப்போது மாமா அவர்கள் கூறிய உண்மைகள் யாவும் முன்னரே என் மனதில் உதித்துவிட்டன. அன்பு கலந்த பெரியாரது இனிய சொற்கள் அவற்றை வேரூன்றச் செய் தன. இனி என் ஆயுள்பாகத்தைக் குலத்தொண் டிலேயே கழிக்கத் தீர்மானித்துள்ளேன். பல சகோதரர்கள் என்னைப் பின்பற்றுவார்க ளென்றே எதிர்பார்க்கிறேன். எனது தொண் டை இன்றே துவக்குகின்றேன். எனது அரிய தந்தையாரின் இஷ்டத்தையும் பூர்த்தி செய்கின் றேன்.

எனது அன்பிற்குரிய மாமா அவர்கள் அறி யாதவனாகிய என்னை ஸ்தோத்திரம் செய்ததை மாத்திரம் நான் ஏற்றுக்கொள்ளமாட்டேன். என்னிடத்திலுள்ள துற்குணங்களையே அவர் கள் பலருமறிய எடுத்துச் சொல்லி யிருக்க வேண்டும். அதுவே அறியாமையால் என் னிடத்துத் தோன்றும் கர்வத்தைக் கெடுத்து நல்லொழுக்கத்தை யுண்டாக்கும். ஆகையால் மாமா அவர்களையும் என் க்ஷேமத்தைக் கோரும் நண்பர்களையும் யான் கேட்டுக் கொள் வது யாதெனில், என்னிடத்துள்ள குற்றங் களையே அப்போதைக் கப்போது எடுத்துக் காட்ட வேண்டு மென்பதேயாம்.

நீங்கள் யாவரும் என் யாத்திரையின் விபரங் களை அப்போதைக்கப்போது நமது மித்திரன் வாயிலாகக் கண்டு கொள்ளலாம். யாத்திரை பூர்த்தியான பிறகே பகிரங்கமாகக் குலத் தொண்டு செய்ய முன் வருவேன்" எனப் பதி லுரைக்குமாற்றால் கூறினேன் வாட்ட முற் றிருந்த முகங்கள் யாவும் சூரியனைக்கண்டு அப் போதலர்ந்த தாமரை மலர்களை வென்றன. யான் பேசியதை எல்லாம் அருகிலிருந்து கேட் டுக்கொண்டிருந்த மாமா அவர்கள் அடங்காத ஆனந்தத்தால் ஒன்றும் பேச இயலாது என் னைச் சேர்த்துக் கட்டிக்கொண்டார்கள். அச் சமயத்தில் என் தோழனாகிய நடராஜன் ஓடி வந்து 'மணி ஐந்தாய்விட்டது. இக்காலதாம தம் செய்யலாகாது. என் வேலையை நான் பூர்த்தி.செய்துவிட்டேன் இதோ மோட்டா ரும் வந்து விட்டது' என்றான் உடனே நான் எழுந்து என் தாயார் தலைமயனார் முதலியவர் களிடத்தும், குழுமியிருந்த நண்பர்களிடத்தும் விடை பெற்றுக்கொண்டு மோட்டாரில் ஏறி ரயில்வே ஸ்டேஷனை அணுகினேன். மணி 5-20 ஆயிற்று என் யாத்திரைச் செலவை அறிந்த பல நண்பர்கள் அங்கு என்னை எதிர் பார்த்திருந்தார்கள். ரெயில் வண்டியும் வந்து விட்டது. 'ஸ்ரீய செங்குந்தத் தொண்டரே' உமது யாத்திரையின் நோக்கத்தைப்பற்றி இப் போது தான் கேள்விப்பட்டேன். உமது யாத் திரை நற்பயனைத் தருவதாக' என வாழ்த்தினர் கள்.

'யான் முருகப்பெருமான் அருளை முன் னிட்டே செல்கின்றேன். வெற்றி வேலே எனக்குற்ற துணையாகும். முன்னவனே முன் னிற்றால முடியாத பொருளுண்டோ! எமது இயக்கத்தை முன்னின்று நடத்துவோன் முரு கப்பெருமானே என்ற நம்பிக்கை எனக்குண்டு.' என அவர்களுக்குப் பதிலுரைத்தேன் வண்டி யும் புறப்பட்டு விட்டது.

(தொடரும்)

---

நமது சக்கரவர்த்தியின் தேகநிலை.

ஜார்ஜ் மன்னர் மிகவும் திருப்திகரமாகக் குண மடைந்து வருகிறாரென்றும், அவர் இனி வெளியில் செல்லுதற்கும், தேகப்பயிற்சி செய்தற்கும் இயலு மென்றும் அறிகிறோம்.



## அதிமதுரம்

கையில் காசில்லாவிட்டாலும் கடன் வாங்கிக்கொண்டு, பல மைல்கள் தூரம் இருந்தாலும் பக்கத்து வீடெனப் பாவி த்து, லாபம வரும் வேலையாயினும் அசட்டை செய்துவிட்டு, பலநாள் கஞ்சியில்லாது திண்டா டினாலும் கவலையில்லாது பெண்டு பிள்ளைகளை அல்லற்படவிட்டு, அமாவாசைக் கருக்கலானு லும் ஆசைச் சந்திரன் வெளிச்சத்தைக் கொ ண்டு, காந்தத்தி னருகுற்ற அயமே யென்ன, பரபரப்புடன் சூழலிலுள்ளவரெல்லாம் தன் னிடம் ஓடிவருமபடி இழுப்பது அதிமதுரம் என்னும் கிராமத்தின் கள்ளுக்கடை. வீதியில் லாது அருகிற் சென்றாலும் மூக்கைக் கெட்டி யாகப் பிடித்துக்கொண்டும் தலைகுனிந்தும் ஒழு க்கமுடையோர் விரைவாக விட்டு விலகும்படிச் செய்யும் அந்தப் புளித்தக்கள் ஓணான், பல்லி, தேள், எறும்பு முதலியவைகளின உடலையும் சாரத்தையும் கொண்டதா யிருந்தாலும் அது குடிகாரனுக்கு எத்துணை மதுரமா யிருக்கிற தென்று நாமறியோம். இதுவும் ஆச்சரியமலல: கண்ணால் காணவும் அருவருப்பாக இருக்கும் மலத்தை நாய் எவவளவு விரும்பிப் புசிக்கிறது? ஆனால குடிகாரனும் ஒழுக்கமுடையோரும் ஓரே பிறபபினரன்றோ? அதுவே நமக்கு வரு த்தத்தைத தருவது. மருதாபுரம் என்னும் அக்கிராமத்தின் உண்மைப் பெயரைவிட்டு அதை அதிமதுரமெனும் காரணப்பெயரால் அழைக்கும குடிகாரனது நன்றிதா னென்னே! இவ்வழகான பெயருககுக் காரணம் அங்கிரு ந்த கள்ளுக்கடையே.

இத்தகைய சிறப்பு வாய்ந்த கள்ளுக்கடையில் ஒருநாள் மாலை சுமார் 6-மணிக்கு வழக்கம் போல் பெருத்த கூச்சலா யிருந்தது. கூட்டம் மிகப் பெரிதா யிருநததால், அன்றாடம் கஷ்டப் பட்டு நெய்து சமபாதித்துத் தங்கள் வீட்டுப் பெட்டி பணம வைப்பதற்கேற்றதல்ல வென்று மடியில சுமந்து வந்து தொலைக்கும் பணத்தால தங்களிட மிருந்த பெட்டிகளை நிரப்புவதற்கு எப்பொழுதுமபோல் உட்கார்ந்திருந்த மூன்று ஆட்கள் வெகு பரபரப்புடன் பணத்தை வாங் கினார். அருகிலிருந்த 'சாக்கண' கடையில் பார்ப்போர பிரமிககும்படி குவிந்துகிடந்த அனு சாரக் காரப்பதார்த்தங்களும் சூரியன் முன் பனிக்கட்டியெனக் குறைய, அவரிடமிருந்த பெட்டியில பணம் குவிநதது. கடையைச் சுற்றி லும் முழங்காலுக்குமேல் அணிந்திருந்த ஓரே கந்தையுடனும், ஒரு கையில் மொந்தையுடனும், மற்றொருகையில் காரக்கரியுடனும் உட்கார்ந் திருந்தவர்களின் காட்சி இலவசமாகக் கஞ்சி வார்க்குமிடத்தில் குழுமியிருக்கும் பஞ்சைப் பிச்சைக்காரர்களுடையது போலிருந்தது. ஆனால் அவர்கள் கோரமான குரலில் ஒருவரை யொருவர் திட்டிக்கொள்வதும், ஒருவர் மீதொ ருவர் விழுந்து குத்திக்கொண்டும் அடித்துக் கொண்டும் ஆடுவதும் தள்ளாடி விழுவதும் அவர்கள் பைத்தியக் காரர்களோ என்று பார்ப் பவர்களை எண்ணச் செய்யும்.

இவ்வாறிருந்த ஆர்ப்பாட்டத்தி னிடையே ஒருவன் எழுந்து தன்னை நோக்கிவரும் மற் றொருவனிடம் தள்ளாடிக்கொண்டே சென்று 'என்னடா, எத்தனை மொந்தெ? இன்னைக்கி ரொம்ப ஜோரா இருக்கே. நம்பகிட்டே யிருந்த மூணாரை ரூபாயைச் செலவு பண்ணிட்டேன். இரண்டு ரூபா நெச்சத்துக்குக் கூலி, ஒண்ணரை கடன் வாங்கினேன். என்று அருவருப்பான குரலில் பேசினான். இப்படியே இருவரும் சற்று நேரம் பேசியபின்பு அவன் குடிவெறியால் விளையாட்டாகவே தன்னிடமிருந்த கூர்மை யானகத்தியை இடுப்பிலிருந்து எடுத்தான். இரு வருக்கும் நடந்த சம்பாஷணை முற்றி விளையாட் டுச் சண்டையாக முடிந்தது. விளையாட்டா கவே கத்திக்குச் சொந்தக்காரனும் அதைத் தன் எதிரி லிருந்தவனைக் குறித்து வீசி எறிந்தான். அவன் குறி சரியனதா யிராததாலும் எதிரி லிருந்தவன் சற்று நகர்ந்து விட்டதாலும் கத்தி நேராகச் சென்று சற்றுத்தூரத்தில் ஒரு மரத் தருகி லாடிக்கொண் டிருந்த 7 வயது பையனு டைய மார்பில் பாய்ந்தது. உடனே இரத்தம் வெள்ளம்போல் வீரிட்டு வந்தது. அப்பைய னுக்கருகே படுத்து உறங்கிக்கொண்டிருந்த ஒரு வரது வேஷ்டியில் இரத்தக் கறையாயிற்று. பையனும் உடனே விழுந்து மடிந்தான்.

சுமார் 1½-மணி நேரமாயிற்று. பையனது தகப்பனார் இருட்டு வேளையானதால் அவனைத் தேடிக்கொண்டு வந்தார். வழியில் நல்லதம்பி முதலியார் இரத்தக்கறை தோய்ந்த வேஷ்டி யோடு செல்வதைக் கண்டார். சிறிது நேரத் திற்கெல்லாம் தம் மகன் கத்தி பாய்ந்த மார் புடன் குப்புறக் கிடப்பதையும் பக்கத்தில் இரத் தம் தோய்ந்திருப்பதையும் பார்த்தார். பெற்ற வரது வயிறு பகீரெனப் பற்றியது; ஓ வென் றலறினார்; அழுதார்; தமது மகனது பிரேதத் தைப் புரட்டினார்; அவரது வருத்தமும் அள வில்லாமல் அதிகரித்தது. தாம் வெகு செல்வ

மாகவும் சீருடனும் வளர்த்து வந்த தமது ஒரே மகனை இங்ஙனம் கொலையால் பறிகொடுத்த அவர் பட்ட பாட்டை எவரே விரிக்க வருந்தார்? இதற்குள் அவரையும் பிணத்தையும் சுற்றி ஒரு பெருங்கூட்டம் திரண்டுவிட்டது.

சற்றுத் தெளிந்த பின் நல்லதம்பி முதலியாரையும் அவரது வேஷ்டியையும் பற்றிய கவனம் மகனைப் பறிகொடுத்த மயிலேறி முதலியாருக்குக் கவனம் வந்தது. நல்லதம்பி முதலியாரே தமது மகனைக் கொலை செய்தவரென எண்ணி, உடனே பெருங்கூட்டம் தம்மைப் பின் தொடர ஓடினர். சில நிமிஷங்களில் நல்லதம்பி முதலியாரின் கையைப் பிடித்துக் கொண்டார். கூட்டமும் அவர்களைச் சூழ்ந்து கொண்டது. நல்ல தம்பி முதலியார் பாபம், ஒன்றுமறியாது திகைத்தார். அயலூருக்குச் சென்று வீடு திரும்புகையில் வழியில் சற்று அயர்ந்து துயின்று பின் எழுந்து வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த அவர் எதை அறிவார்? சற்று இருட்டாயிருந்ததாலும் தூக்கத்திலிருந்து அப்பொழுதுதான் எழுந்த படியாலும் அவர் தமது வேஷ்டியிலிருந்த கறையைக் கண்டிலர். மயிலேறி முதலியாரும் சுற்றி நின்ற ஜனங்களும் அவர்மீது கொலைக்குற்றஞ்சாட்டி, வாயில் வந்தவாறு திட்டினார்கள். நல்லதம்பி முதலியார் பயத்தால் வாய் குளறிப் பேசினர். தூக்கத்திலிருந்து தெளிந்த அவர் முகம் பயத்தினால் குற்றம் செய்துவிட்டுத் தானே திகைப்பவனது முகத்தை ஒத்திருந்தது. இதனால் குற்றஞ் சாட்டுபவர் அவரே குற்றவாளியென ஸ்திரமாக எண்ணினர். நல்லதம்பி முதலியார் உண்மையை நிலைநாட்டச் செய்த முயற்சி வீணாயது. உடனே அவர் கைப்பிடியாகப் போலீஸுக்குக் கொண்டுபோகப்பட்டார்.

அதிமதுரத்துக் கருகிலிருந்த நியாயஸ்தலத்தில் நியாயாதிபதி வழக்கை விசாரித்தார். மயிலேறி முதலியார் பக்கம் வெகு பெயர்கள் சேர்ந்தனர். நல்ல தம்பி முதலியாருக்கோ, அவரது குடும்பமே ஆதரவாய் நின்றது. இருட்டு வேளையில் கொலை நடந்த இடத்திலிருந்து ஊருக்குச் செல்லும் வழியாக அவ்விடத்திலிருந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் அவரை மயிலேறி முதலியார் கண்டதும், அவரது வேஷ்டியில் இரத்தக்கறை தோய்ந்திருந்ததை ஒரு பெருங்கூட்டம் கண்டதும், அவர் முகம் பிரம்மஹத்தி பிடித்தவனது போலிருந்ததும், அவர் பயத்தினால் குற்றஞ்செய்து திகைப்பவன் போல் குளறிப் பேசியதும் அவர்மீது ஏற்பட்ட வீண் பழியைப் பலப்படுத்தின. கொலையான ஆறாவது நாள் நல்லதம்பி முதலியார் குற்றம் நிச்சயிக்கப்பட்டு அவரது வழக்கு அடுத்த செஷனில் விசாரிக்கப்படுமென்றும் தீர்மானமாயது. எப்படியாயினும் அவர் தூக்குத் தண்டனை யடைவது நிச்சயமெனப் பலருக்குத் தெரியும். அவர் நல்ல குணம் வாய்ந்தவரெனப் பலர் அறிந்திருந்தும் அவர் அகப்பட்டிருந்த நிலையும் அவர் மீது குற்றஞ் சொல்லக் காரணமாயிருந்த அடையாளங்களும் அவர்களைத் தடுத்தன. நல்லதம்பி முதலியாருடைய ஆவி இன்னும் சொற்பநாட்களில் அவரது உடலை விட்டுப் பாக்கவேண்டும்.

அந்தோ! பழியோரிடமும் பாபமோரிடமுமாக முடிந்தது. ஒரு பாபமுமறியாத நல்லதம்பி முதலியார் குடிகாரன் வெறி விளையாட்டால் உயிர்நீக்க வேண்டியதாயிற்று. இந்த அநியாயத்துக்கும் குடிவெறியல்லவா காரணம்? பல குடிகளைக் குட்டிச்சுவராக்கும் குடியால் விளையும் தீங்குகள் எத்தனை? அநியாயம் எத்தனை? நஷ்டம் எவ்வளவு? கள்ளைக் குடித்த மாத்திரத்தில் ஒருவன் தன் வசமிழந்தவனாய் ஏதோ ஒரு கொடிய பூதத்தால் ஆட்டப்படுபவன்போல ஆடுகிறான்; நல்லவற்றையுந் தீயவற்றையும் பிரித்தறியும் சக்தியை இழக்கிறான்; நண்பர் சுற்றத்தார் என்பதை மறக்கிறான்; விளையாட்டு, சாகசம் என்பவைகளை உணராது திகைக்கிறான்; செய்யத் தகாதவற்றைத் தயங்காது செய்கிறான்; வாயில் வரக்கூடாததைப் பிதற்றுகிறான்; சுருக்கமாக, பகுத்தறிவும், நல்லுணர்வும், பயமும், மானமும் அழிந்தவனாகி, பைத்தியம் பிடித்தவனிலும், கொடிய மிருகத்திலும் கேவலமாகிறான். சாதாரணமாக ஒருவன் எத்தனைச் சாந்தகுண சீலனாயினும் மது அவனது வயிற்றில் இறங்கியவுடன் அவனது நற்குணமும் சாந்தமும் பூனையைக்கண்ட எலியென ஓடி ஒளிகின்றன. உடனே இழிகுணங்கள் எல்லாவற்றிற்கு மிருப்பிடமாகிறான். இத்தகைய ஈனமான பல கெடுதிகளுக்குக் காரணமான கள்ளை ஏனோ மானிடர் பருகவேண்டும்? அதன் சாகச குணத்தை மறிக்கும் அதனை யொழிக்கிறார்களில்லையே. அதைக் குடிப்பதாலேதாவது ஆனந்தமுண்டா? அதற்கு ருசிதான் நல்லதாயிருக்குமோ? அதன் மணமும் மூக்கைக் கெடுத்து, குடலைப் புரட்டிக் கஷ்டப்படுத்தி அதன் பக்கல் வந்த ஒழுக்கமுள்ளவரை விரட்டுவதாக இருக்கிறதே. அப்படித்தான் அது ருசியானதாயும்,



ஆனந்தங் கொடுப்பதாயு மிருந்தாலும் அதைப் பருகி அதனால் அளவிலாத் தீமைகளுக்காளாவதா? ருசியாயிருக்கிறதென்று பாஷாணத்தை யருந்தலாமா? இன்னும் மதுவின் குணத்தை நோக்கின் அதைப் பாஷாணத்தினும் கொடிதென்றே சொல்லவேண்டும்.

* * * *

நல்லதம்பி முதலியாருடைய வழக்கு செஷனுக்குக் தீர்மானிக்கப்பட்டதற்கு மூன்றும் நாள் காலை 8-மணிக்கு அதிமதுரம், நெல்லுகிடங்கு தெருவில் பட்டாணி சத்திரத்தி லிருந்த ஒரு விசாலமான இடத்தில் சுமார் 1500 ஆட்கள் குழுமியிருந்தனர். அப்பொழுது உபந்யாசம் செய்வதற்காக ஒரு பெரியார் எழுந்தார். முக்கால் பங்குக்குமேலும் செங்குந்தரே வதியும் அதிமதுரம் கிராமத்தின் சீர்கேடான நிலையை யொழித்து அதனை மேல் நிலைக்குக் கொண்டு வரும் நோக்கத்தோடு அக்கிராமத்திற்குத் தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தார் கருணைகூர்ந்து அனுப்பிய பிரசாரகர்களிருவரில் அவர் ஒருவர். அவர் 'கக்ஷிப் பிரதிகக்ஷிகள்' என்பதைப்பற்றி வெகு திறமையாகவும் தெளிவாகவும் சொற்பொழி வாற்றினர். பல சமூகங்களையும் நாடுகளையும் பாழாக்கித் தகிக்கும் பெரிய அக்கினி கக்ஷிபேதமே என்றும், அது பெரிதும் செங்குந்தர்களிடை வேரூன்றி இருக்கிறதென்றும், அற்ப விஷயங்களைப்பற்றி யுண்டாகும் எண்ணிலாத கக்ஷிகள் பந்துத்துவம் நட்பு இவற்றை யழிக்கின்றனவென்றும், செல்வந்தர்களைப் பணத்தை வீணாக விரயம் செய்யத் தூண்டுவதும் அதுவே என்றும், அதனால் பலர் மூடத்தனத்திற்கும் கொடூரச் செயல்களுக்கும் ஆளாவதன்றிப் பெரும் பொய்களைச் சொல்லுகிறார்களென்றும் அதனால் கக்ஷிபேதம் அதிலீடுபடுபவர்களுக்குப் பாப மூட்டை கட்டிக்கொடுப்பதுடன் அவர்கள் செய்யஎண்ணும் நற்செய்கைகளைத் தடுக்கிறதென்றும், ஆகையால் மாபாதகங்களுக்கெல்லாம் மாதாவாய இதனி லீடுபடுவோர் பெரும்பாவிகளென்றும், நன்மை என்பதற்கு அணுவளவும் காரணமாகாத இதனை யழித்தலாலேயே எந்தச் சமூகமும் முன்னேற்றமடையுமென்றும், அதுபற்றிச் செங்குந்தரும் சிறப்பாய் அதனை வேரோடு பெயர்த்துத் தொலைத்து ஒற்றுமை யென்னும் அமுத மருந்தி ஆனந்திதிருக்க வேண்டுமென்றும் கூறி யமர்ந்தார்.

பின்பு மற்றொரு பிரசாரகர் 'பொய்' என்பதுபற்றிப் பேசினர். அவர் பொய் யென்பது உண்மையை, அதாவது நடந்ததை யொளித்து வேறு புகலல் என்றும், தன் மட்டில் நன்மை யடைய ஒருவன் பொய் சொல்லுவதால் எண்ணிலாதவர்க்குக் கஷ்ட முண்டாகலாமென்றும், அதனாலது கொடியதென்றும், அதுபற்றியே தெய்வப் புலமைத் திருவள்ளுவனாரும் "வாய்மை யெனப்படுவதியாதெனின் யாதொன்றும் தீமையிலாத சொலல்" எனக் கூறிப் போந்தனரென்றும், பிறர்க்கு வரும் நன்மையைத் தன் நலன் கருதிக் கெடுக்கப்படாதென்றும் பலர் நன்மையை அடையுமிடத்து ஒரு காரியத்தை ஒளித்தும் கூறலாமாகையால் பிறர் நன்மையே பிரதானம் என்பதை

"பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்" என்னும் பொய்யாமொழி வலியுறுத்து மென்றும், அவ்வாறு பிரதானமாய நன்மை அழியும்படி பொய் புகலுதல் எத்துணைக் கொடியதென ஆராயின புலனாமென்றும் கூறி, 'செங்குந்த மக்களே! நீங்கள் உயர்வுடையவர்களாகத் திகழவேண்டு மெனில் எவ்வகைச் சுயநலம்பற்றியும், எனக்கு முன் பேசிய நண்பர் கொடிதென விரித்துக் கூறிய கக்ஷிபேதம்பற்றியும் உண்மையை ஒளித்துப் பிறரது நன்மைகளுக்கு ஊறு ஏற்படுமாறு பொய் சொல்லுதலை அறவே விட்டொழியுங்கள்", என வற்புறுத்திப் பின் அக்கிராமத்துச் செங்குந்தர்கள் சீரிய நெறியில் நின்று திகழவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்தித்து அமர்ந்தார்.

உடனே மருதையா முதலியார் என்னும் ஒருவர் மேடைமீது வந்தார். அவ்வூரில் அவர் சற்றுப் பெரியவராக மதிக்கப்படுபவர்; ஒரு கக்ஷிக்குத் தலைவராக இருந்தார். அவர் மேடையேறியதும் அனைவரும் ஆச்சரியத்துடனும் ஆவலுடனும் யாது கூறப்போகிறாரென எதிர்பார்த்திருந்தனர் அவர் பின்வருமாறுபேசினர்:

"செங்குந்த சீமான்களே! நமது தலைச்சங்கத்தின் பிரமுகர்களாகிய தமது உயரிய உபந்யாசங்களால் இன்று எனது மனதில் கிளைப்பிய ஒருணர்ச்சியால் என்னுள் அமிழ்ந்துகிடக்கும் ஓர் இரகசியத்தை வெளியிட முனைந்துள்ளேன். இங்கு பேசுவதற்காக எனக்கனுமதி யளிப்பீரென எண்ணுகிறேன். நல்லதம்பி முதலியார்மீது கொலைக்குற்றஞ் சாட்டப்பட்டு அவர் தூக்குத் தண்டனை விதிக்கப்படும் நிலையிலிருப்பதையும் நீங்கள் நன்கறிவீர்கள். அவர் ஒரு பாபமுமறியாத நிரபராதி என்பதை நான் உண்மையாக அறிவேன். அவர்மீது குற்றஞ் சாட்டப்பட்ட நாள் மாலை அவர் ஒரு மரத்தடியில்

இளைப்பா லயர்ந்து துயின்றுகொண் டிருந்தார். அவர் பக்கலில் ஒரு சிறு பையன் ஆடிக்கொண் டிருந்தான். அவன் மயிலேறி முதலியாரது மகனென நானறியேன். திடீரென அருகிலிருந்த கள்ளுக்கடையின் பக்கமிருந்து ஒரு கத்திவந்து அவன் மார்பில் பாய்ந்தது. உடனே இரத்த வெள்ளம் பெருக, பையனும் மாண்டான். நான் அந்தப் பக்கமாகச் செல்லுகையில் இக்கோரக் காட்சியைக் கண்டேன் ஆயினும் இறந்த பையன் இன்னுனென அறியாததாலும், அருகிற்சென்றால் நடமைக் குற்றம் சாருமோ என்ற பயத்தாலும் நான் அதைக் கவனியாதவன்போல் போய்விட்டேன். பின்னர் பாபம்! 'பழியோரிடம் பாபமோரிடம்' என்பதுபோல பையனைக் கொன்ற குற்றம் ஒன்றுமறியாத நல்லதம்பி முதலியார் தலையில் விழுந்தது. இவ்வளவையு மறிந்த நான் ஏன் உண்மையை உரைத்து அவரை மீட்கக்கூடாதெனக் கேட்கிறீர்களோ? ஐயோ, அதைக்கூற நாணுகிறேன். என்னைக் கக்ஷிபேத மென்னும் பேய் பிடித்திருந்தது. அவர் எனக்கு எதிரான கக்ஷியைச் சேர்ந்தவர். கக்ஷி உண்டானதன் காரணத்தைப்பற்றிப் பலருக்குத் தெரியும். அது எவ்வளவு அற்பமானதென்றும் அதைக் கேட்டால் எத்தனை பெயர் எள்ளி நகையாடுவரென்றும் நான் இப்பொழுது தான் உணருகிறேன். சமீபத்தில் நடந்த நமது ஈஸ்வரன் கோயில் உற்சவத்தில் ஒருநாள் நான் பகலுற்சவத்தில் பாணம்வடிக்கை வேண்டுமென்றேன். அவர் அது வேண்டாவென்றார். இதனாலேயே கக்ஷி ஏற்பட்டது. இந்தக் கக்ஷிபேதத்தினாலேயே 'அவர் குற்றஞ் சாட்டப்பட்டு இறந்தால் நமக்கென்ன?' என்று வாளாவிருந்தேன். ஆனால் நமது தலைச் சங்கப் பிரசாரகர்களது சீரிய சொற்பொழிவுகளால் என் மனம் மாறிவிட்டது. இப்பொழுது பொய்யினாலும் கக்ஷியினாலும் உண்டாகும் பெருந்தீமைகளை நான் நன்குணர்ந்தேன். இன்று முதல் நல்லதம்பி முதலியார் என் அரிய நண்பரானார். அவரை மீட்கவேண்டியது என் கடமையாயிற்று. இப்பொழுது உண்மையை உரைத்தேன். நான் கூறுவது சத்தியம்."

இவ்வாறு ஆவேசங் கொண்டவர்போல் அவர் பேசியதைக் கேட்டுப் பலரும் திகைத்தனர். ஒருவரை யொருவர் பார்த்து விழித்தனர். பின்னர் பிரசாரகர்கள் கூறியபடி அனைவரும் ஒன்றுபட்டு திரண்டு பெருத்த ஆரவாரத்துடன் விரைவாக நீதிஸ்தலத்துக்குச் சென்றனர். நீதிபதியிடம் நல்லதம்பி முதலியாரது குற்றமற்ற தன்மையைக் கூறிச் சாதித்தனர். மருதையா முதலியாரும் பலமாகச் சாக்ஷி கூறினர். ஆகையால் நல்லதம்பி முதலியார் நிரபராதி எனத் தீர்மானிக்கப்பட்டு வழக்கும் தள்ளப்பட்டது. பின்பனைவரும் நல்லதம்பி முதலியாரைக் கண்டனர். அங்கு அவர் ஆச்சரியமென்னே! அவரது பலத்த விரோதியாகிய மருதையா முதலியார் அவரைத் தழுவிக் கொண்டார். நல்லதம்பி முதலியார் 'இது உண்மையா? அல்லது கனவா?' என ஏங்கினார். பின் உண்மையே என உணர்ந்தார்; திகைத்தார். சற்றுநேரத்தில் எல்லாம் விளக்கமாயிற்று. யாவரேனும் அவரது குற்றமற்ற தன்மையை ஒத்துக்கொண்டு கொலைநடந்த விதத்தை விளக்கினர். நல்லதம்பி முதலியாரது குற்றமும் நீங்கிற்று. அவரும் எமன் கையினின்றும் தப்பினார். பலர் கண்ணிலும் தம் பெருங்கேற்ப நற்குணசீலராகவே காணப்பட்டார்.

பின்னர் அனைவரும் 'ஜே' கோஷத்துடன் கூட்டம் நடந்த இடத்திற்குத் திரும்பி வந்தனர். பிரசாரகர்கள் நல்லதம்பி முதலியாருக்கு ஆறுதல் கூறினர். சிறிது நேரத்தில கூட்டமும் இனிது கலைந்தது. மருதையா முதலியார் இல்லத்தில் நல்லதம்பி முதலியாருக்கும் பிரசாரகர்களுக்கும் நல விருந்தாயது. நல்லதம்பி முதலியாருக்குத் தலைச் சங்கத்தினிடம் எழுந்த நன்றியினை அளவிட்டுரைக்க முடியுமோ? அவர் குலத்தொண்டினில் ஈடுபட்டு தளராதுழைக்க அன்றே சபதம் செய்துகொண்டார். அவ்வூரில நிலைத்து இன்னல் விளைத்துவந்த கக்ஷியும் மாண்டது. அவ்வூரார் பலரும் சிலநாட்களில் குடியை யொழித்தனர்; சீர்மை யுற்றனர். அது முதல் அவ்வூராருக்குத் தலைச் சங்கத்தோடு நல்ல சம்பந்தம் ஏற்பட்டது. இப்பொழுது நமது 'மித்திர'னும் அவ்வூரில ஏறக்குறைய ஒவ்வொருவர் வீட்டுக்கும் செல்லுகிறுன். நல்லதம்பி முதலியார் மருதையா முதலியார் ஆகியவரது குலத்தொண்டு குன்றாது நடைபெறுகிறது. தலைச் சங்கத்தாரது தீவிர உழைப்பைப்பற்றியும் அதனாலுண்டாகும் அளவிலா நன்மைகளைப் பற்றியும் ஒரு பெரிய மகிழ்ச்சியும், அச்சங்கத்தின் முதன்மையாளர்களாகிய புண்ணிய மூர்த்திகளிடத்து ஒரு ஆழ்ந்த நன்றியும் நல்லதம்பி முதலியாரது குடும்பத்தினர் மனதில் நிறைந்து நிலவுகின்றன. பொறுமை பொன்றுக! வாய்மை வளருக! கக்ஷிவொழிக! அன்பும் விசுவாசமும் அகன்றிலவுக!!

ஜெ. தங்கவேல்.



## சொழிற் பகுதி

### அற்பம் அற்பமன்று.

இவ்வுலகத்தில் அநேகர் அற்ப விஷயங்களென்று பல பொருள்களை அலட்சியம் செய்கிறார்கள். ஆய்ந்தோய்ந்து பார்த்தால் அற்பம் என்று இகழத்தக்கது ஒன்றுமில்லை. அற்பமானவை யென்று சிலவற்றினிடத்து நமக்கு அவமதிப்புத் தோன்றுமாயின், அப்போது முன்னிருந்த மகான்கள் சொல்லிய மேலான சில வசனங்களை நினைத்துப் பார்ப்போம்.

சிறந்த சிற்ப சாஸ்திரி ஒருவர் முன் சித்திரித்த ஒரு பிரதிமையில் ஒரு பாகத்தைத் திருத்திக்கொண்டிருக்கும்போது யாரோ ஒருவர் வந்து பார்த்து, 'இதென்ன இந்த அற்பத்தை ஒரு பெரிய காரியமாகச் செய்துகொண்டிருக்கிறீரே?' என்று கேட்டதற்கு அந்த சாஸ்திரி "நீர் சொல்வது சரிதான். ஆயினும் 'சிதலது நீர்வாய்ச் சிறுதுகளாற் பெருப்புற்று உருவமைந்த பெற்றியதென்ன?' 'பலதுளி பெருவெள்ளம்,' என்றபடி அற்பமான பல பரமாணுக்கள் சேர்ந்தே ஒரு பெரு மலையாகின்றது. அதுபோலவே அற்பமான பல காரியங்கள் சேர்ந்தே ஒரு பெருங் காரியமாகின்றது; அந்தப் பெருங் காரியம் அற்பமல்லவே" என்று விடை கொடுத்தனுப்பினர்.

நெசவு வேலையில் அமர்ந்திருந்த ஒருவர் தம் உத்தியோகத்தை விட்டு நீங்கும் காலத்தில் ஒரு கனவானிடத்தினின்றும் தமக்கு வேண்டிய ஆஸ்தி கொஞ்சம் வாங்கினர். அந்தக் கனவானுடைய வீட்டை உள்ளது உள்ளபடியே அதிலுள்ள சகல சாமான்களோடும் வாங்கிக் கொள்ளும்படியாக உடன்படிக்கை ஏற்பட்டது. அப்படியே அவர் அந்த வீட்டை வாங்கிக்கொண்டு, சாமான் பட்டியில் குறித்துள்ளபடி எல்லாம் சரியாயிருக்கிறதாவென்று சோதனை செய்து பார்க்கையில் சிறிய நாற்காலியொன்று காணுமலிருந்தது. அதைப் பற்றி அவ்வீடு விற்றவரைக் கேட்டதற்கு, அவர், 'ஆம், அது மெய்தான்; நான் தான் அச்சிறு நாற்காலியை எடுத்துக்கொண்டேன். இவ்வளவு பெரிய வியாபாரத்தில் நீர் அணுவும் விடாமல் நூல் நூற்றுப் பார்ப்பீரென்று நான் நினைக்கவில்லை,' என்றார். அதைக்கேட்டு அந்த வீடு வாங்கினவர், 'பிரபுவே நான் இத்தனை காலமாய்ச் சிறிதளவுகூட விடாமல் பார்த்து வந்திராவிட்டால், இப்போது இந்த வீட்டை வாங்கும் நிலைமைக்கு வந்திருக்க முடியாது. இன்னொரு வார்த்தை சொல்லுகிறேன்: தாங்கள் கோபம் கொள்ளக்கூடாது. தாங்கள் இப்படி அற்பமென்று சொல்லி ஒரு பொருளையும் அலட்சியம் செய்யாமல் கவனமாய்ப் பார்த்துக்கொண்டு வந்திருந்தால் இப்போது இந்த வீட்டை விற்க நேரிட்டிராது,' என்றார்.

பெரியோர்கள் கண்டுபிடித்த அரிய பெரிய விஷயங்களெல்லாம் முதலில் அற்பமான விஷயங்களைப் பார்த்துப் பரிசோதனை செய்ததனாலேயே யன்றி வேறு வழியாலன்று. புத்தியில்லாதவர் கண்ணுக்கு எங்கும் இருள்மூடித்தான் இருக்கும். புத்திமான்களுடைய கண்ணுக்கோ எங்கும் ஒவ்வொரு புதுமை காணப்படும். கடிகார யந்திரத்தில் கால அளவு சரியாய் ஏற்படுவதற்காகப் 'பெண்டுலம்' என்கிற கருவியைத் தொங்கவிட வேண்டுமென்று காலிலியோ என்பவர் அறிந்துகொண்டது பைசா நகரத்துக் கோயில் மண்டபத்தில் கட்டித் தொங்கின விளக்கைப் பார்த்ததினாலேதான். மிகவும் அற்பமான கடற்பாசி கடலில் மிதக்கக் கண்டதுதான், கோலம்பஸ் என்பவர் புதிதாய்க் கண்டுபிடிக்க வேண்டுமென்று ஆவல் கொண்டு போன புது உலகம் என்று சொல்லப்படும் அமெரிக்கா கண்டம் வெகு சமீபத்திலிருக்கிறதென்று உறுதியாய்ச் சொல்லித் தம் கப்பற் சேனையில் உண்டான குழப்பத்தைத் தணிப்பதற்கு இடமாயிற்று. தவளைக் காலானது இரண்டுவித உலோகங்களோடு சேர்ந்தால் அவற்றால் வலிக்கப்படுமென்று கால்வனி என்பவர் கண்டறிந்தார். இந்த அற்ப விஷயத்தைக் கண்டதுதான் உலகத்திற்கு இப்போது மகோபகாரமாய் வழங்கி வருகின்ற தந்திதபால் ஏற்படுத்துவதற்கு முதற்காரணமாயிற்று. ஜியார்ஜ் ஸ்டீவென்ஸன் தம் பாட்டியார் அடுப்பில் வைத்துச் சென்ற காபி கொதிக்கும்போது அதினின்று மேலெழும்பும்

நீராவி காப்பி பாத்திரத்தின் மேல்மூடியை மேலுக்குக் கிளப்புவதைப்பற்றி நோக்கிச் சிந்தித்தே, நீராவிக்கு அதிக வல்லமையிருக்கிறதென்று உணர்ந்து இப்போது யாவரும் அதிசயிக்கும் நீராவி யந்திரத்தைக் கண்டுபிடித்தார்.

பிராங்கிலின் என்பவர் மின்னலாவது, இரண்டு பொருள்கள் ஒன்றோடொன்று உரைவதாலுண்டாகிய நெருப்புத்தானென்று அதன் விபரத்தைச் சோதனை செய்திருக்கக் கண்டு, சாதாரணமான ஜனங்கள், 'வேலையற்ற அம்பட்டன் பூனையைப் பிடித்து சிரைப்பதுபோல போதுபோக்கற்ற வேலை இதனால் என்ன பயன்?' என்று சொல்லி ஏளனஞ் செய்தனர். அதற்கு பிராங்கிலின் சொன்னதாவது: 'குழந்தை பிறப்பதன் பயன் என்னவென்று நினைக்கிறீர்கள்? அது ஒரு பெரிய மனிதனாகு மென்பதல்லவா? பெரியவர்கள் குழந்தையின் முன்னிலையில் ஏதாவது ஒரு தகாத காரியத்தைச் செய்கிற காலத்தில், தங்களைப் போலவே அவனும் ஒரு காலத்தில் பெரியனாவானென்பது அவர்களுடைய எண்ணத்தில் உறுதியாயிருக்க வேண்டும்,' என்று பதிலுரைத்தார்.

ஒரு சாதாரண மனிதன் ஒரு சிறந்த உப்பரிகையைப் பார்த்து எவ்வளவு தெரிந்து கொள்வானோ அதைவிட அதிகமாகவே ஒரு புத்திமான் ஒரு சிறு குடிசையைப் பார்த்துத் தெரிந்து கொள்வானென்று ஒரு வித்வான் சொல்லியிருக்கிறார்.

ஊன்றிப் பார்க்கத் திறமையற்று மேற்புல்லை மேய்கிறவன் ஒரு பெருங்காடெல்லாம் போய்ச் சுற்றினாலும் ஒரு விறகு குச்சிகூடக் கண்டெடுத்துக் கொண்டுவரமாட்டான். ஊன்றிப் பார்க்கத் திறமையுடையவன் தான் பார்ப்பது எவ்வளவு அற்பமாயிருந்தாலும் அதிலும் ஒரு புதுமையைக் கண்டுகொள்வான். ஐரோப்பா கண்டம் முழுதுக்கும் இங்கிலாந்து ஒன்று தான் மிகவும் சிறந்த வியாபார ஸ்தலமாயிருக்கிறதென்பது யாவருக்கும் தெரிந்திருக்கலாம். அதற்குக் காரணம் அத்தேசத்தில் நிலக்கரியும் இரும்பும் அளவற்றிருக்கின்றன என்பதே யல்ல; முக்கியமாய் அங்கிருக்கிற வேலைக்காரர்கள் வெகு திறமையாய் வேலைசெய்து முடித்துக்கொண்டு வருகிறார்களென்பதுதான். ஒரு தேசத்திலுள்ள பலவித வேலைக்காரர்களும் தங்கள் தங்களுடைய மனச்சாட்சிக்கு ஒத்து உண்மையும் ஊக்கமும் ஆள்தையுமுடையவர்களாய் உழைப்பார்களானால் அப்போதுதான் அத்தேசம் சிறந்ததென்று பெருமை பெற்று அப்படியே நீடித்திருக்கும்.

ஒருவனுடைய நற்குணங்களெல்லாம் மிகவும் அற்பமான கோபம், கர்வம், பேராசை முதலிய குணங்களால் அழிக்கப்படுகின்றன. அதிக சமர்த்தர்களாய் இருப்பவர்கள்கூட கொஞ்சம் பிசகுவதனால், அநேகமாய்க் காரியத்தைச் சாதிக்காமல் ஐயம் பெறாமற் போகிறார்கள். பரீக்ஷைக்குப் போகும் பிள்ளைகள் கூடிய வரையில் நன்றாகக் கேட்ட கேள்விகளுக்குப் பதில் எழுதியும், அதையோ காலோ கம்பர் பிசகிப்போவதனால் பலன் மாத்திரம் கைக்கெட்டாமற் போகின்றது. ஆக்ஸ்போர்டு மாகாணத்திலுள்ள வித்தியாசாலை ஒன்றில் ஒரு கடிகார யந்திரத்தில், காலத்தைக் கொல்வது கொலையாகாது என்று நினைத்திருப்பவர்க்கு எச்சரிக்கையாக, 'நாழிகை வீணாய்க் கழிந்து அந்தக் குற்றத்தை நம்மேல் சாத்துகிறது' என்கிற கருத்துள்ள வாக்கியமொன்று எழுதியிருக்கின்றது. அதைப் பார்த்தால், 'இது ஒன்றையும் ஆரம்பிக்கும் தருணமன்று, இது ஒன்றையும் முடிக்கத் தருணமன்று' என்று சொல்லி நாம் ஒவ்வொரு நிமிஷமாய்க் காலத்தை வீண்போக்குவது காலக்கொலையென்று தோன்றவில்லையா? முற்காலத்திலிருந்த வித்வான்களில் அநேகர் தாம் காலையில் உலாவும் போதும், ஏதாவது ஒரு தொழிலுக்குப் போகும் போதும், தொழில் செய்யுங்காலத்தில் அவ்வப்போது ஒழிவு நேரும்போதும், வெளியே யாத்திரை செய்யும்போதும் அவ்வப்போது கிடைக்கிற ஒவ்வொரு நிமிஷத்தையும் வீண் போக்காமல் பாஷைகளைக் கற்பது கிரந்தங்கள் செய்வது முதலான பெருங்காரியங்களைச் செய்திருப்பதாகக் கேட்டிருக்கிறோம் அல்லவா? போஜனத்திற்காக ஒரு நிமிஷம் காக்கவேண்டியிருந்தால் அநேகர்க்குப் பெருங்கோபம் உண்டாகக் காண்கிறோம். ஒரு வித்வான் அப்படிச் சாப்பாட்டு வேளையில் நேரிட்ட ஒழிவு காலத்திலேயே ஒரு சிறந்த புத்தகத்தை இயற்றியிருக்கிறார். மாஸன் என்கிற வயித்தியர் ஒரு நோயாளி வீட்டிலிருந்து மற்றொரு நோயாளி வீட்டிற்குப் போகிற தருணத்தில் லூகரிஷல் என்கிற கிரந்தத்தை மொழி பெயர்த்ததாகவும், டாக்டர் டார்லின் என்பவரும் அப்படியே அநேகங் கிரந்தங்கள் செய்ததாகவும், ஹேலி என்பவர் தமக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களின் மேல் விசாரணைக்காகச் சஞ்சாரஞ் செய்கிற காலத்தில் தம் அபிப்பிராயங்களை



யெல்லாம் சேர்த்து எழுதினதாகவும், எலியூ என்பவர் வயிற்றுப் பிழைப்புக்காகக் கருமார வேலை செய்துகொண்டே பற்பல பாஷைகளைக் கற்றதாகவும், இவ்வாறே இன்னும் அநேகர் அநேகம் நற்காரியங்களை நிமிஷம் நிமிஷமாகவே ஒழிவு வேளைகளில் செய்துமுடித்ததாகவும் கேள்விப் பட்டிருக்கிறோம் இது போலவே நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் அமைச்சர் உயர் திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் பாடசாலையில் வேலை பார்க்குங் காலந்தவிர மற்ற ஒவ்வொரு நிமிஷமும் புத்தகங்கள் எழுதி வெளிப்படுத்துவதும், இடையில் நமது சங்கத்தின் எல்லா வேலைகளையும் கவனித்துவருவதும் மிக மிகப் போற்றற்குரியதே. அப்பெரியார் நமது சமூகம் முன்னேறுவதற்காகச் செய்து வரும் அரும்பெருந் தொண்டிற்காக நாம் என்ன கைம்மாறு செய்ய வல்லோம்? ஒரு காசும் எதிர்பாராமல் தம் ஆயுள் வரையில் 'செங்குந்த மித்திரன்' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராய் இருப்பதாக ஈரோட்டில் செங்குந்தர் முதலாவது மகாநாட்டில் வாக்களித்ததை நினைக்கும்போது ஆற்றொணா விம்மிதம் கொள்கின்றோம். ஒவ்வொரு நிமிஷத்தையும் நமக்காகச் செலவழிக்கக் காத்துக் கொண்டிருக்கும்போது இப்படிப்பட்ட நிமிஷங்களையெல்லாம் நாம் அற்பமென்று இகழ்ந்து அலக்ஷியஞ் செய்வது நியாயமா? ஆகையால் இனி ஒவ்வொரு செங்குந்த குடும்பத்தினரும் பிரதிதினமும் ஒரு தம்பிடி வீதம் சேர்த்து வருஷத்தில் சேரும் ரூபா 1-14-0-ல் 'செங்குந்த மித்திரன்' என்னும் பத்திரிகைக்கு வருஷத்திற்கு ஒன்றரை ரூபாய் செலுத்தினால் பிரதி மாதமும் தவறாது நாம் முன்னேறுவதற்கான வழிகளையும் உலக விஷயங்களையும் 'செங்குந்த மித்திர'னாகிய நண்பன் நம் வீடுதேடி வந்து சொல்லுவான். கல்வி நிதிக்காக மிகுதி ஆறணாவையும் கொடுத்தால் அதனால் நாம் அடையும் பயனை எழுதி முடியாது; வாய் விட்டுச் சொல்லவும் முடியாது. (தொடரும்)

காஞ்சீபுரம். சீ. அருணாசலம்,
காரியதரிசி, செங்குந்த வாலிபர் சங்கம்.

## செங்குந்தர் கிளர்ச்சி

### திருச்சி ஜில்லா.

### உன்னியூர் செங்குந்தர் சங்கம்.

5-8-29 மாலை 5½-மணிக்குச் சங்கக்கூட்டம் செங்குந்தர் பொதுச்சாவடியில் திரு K. மாணிக்க முதலியாரவர்களது தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்குச் செங்குந்தர்களும் இதர பிரபலஸ்தர்களும் பெருங்கூட்டமாகக் குழுமியிருந்தனர். பல அறிஞர்களது உபந்நியாசம் நடைபெற்ற பிறகு அடியிற்கண்ட தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறின.

### நிறைவேறிய தீர்மானம்.

சென்றதை மீ ஈரோட்டில் நடந்த மஹாநாட்டிற்கு வசூலிக்கப்பெற்ற பணத்தில் செலவுபோக மீதியுள்ள பணத்தை சென்னை தலைச்சங்கத்திற்கு அனுப்ப வேண்டியதென, சட்டமிருந்தும் அவ்விதம் நடைபெற முடியாமல் மஹாநாட்டின் வரவேற்பு சபைத் தலைவருள்பட சிலர் ஆக்ஷேபித்ததில் அப்பணம் தலைச்சங்கத்திற்கு சேரமுடியாமல் சேர்ந்தது பற்றி விசனிக்கத் தக்கதேயாயினும் இச்சங்கத்திலிருந்தும் மஹாநாடு நடைபெற பொருள் உதவி செய்திருப்பதால் அவ்விதம் செய்யக்கூடாதென இச்சங்கத்தின் சார்பாய் ஆக்ஷேபித்ததில் அப்பணத்தைப் பரிபாலிக்க ஏற்படும் நிர்வாகசபையில் இச்சங்கத்தினருக்கும் பிரதிநிதித்துவம் அளிப்பதென, அங்கீகரிக்கப்பட்டதாயும் இப்பொழுது மஹாநாட்டு மீதிப்பணத்தை ஈரோடு செங்குந்தர் பாங்கியில் போட்டிருப்பதாக மித்திரன் மூலமாகத் தெரிவதேயன்றி அப்பணத்தைப் பரிபாலிக்க நிர்வாகசபை யாரதுவரை ஏற்பட்டிருப்பதாகவோ அன்றி எவ்விதமாக அப்பணத்தை யாருடைய தலைமையின்கீழ் செலவு செய்யப் போகிறார்களென்பதாகவோ இச்சங்கத்திற்கு யாதொரு தகவலும் தெரியாததாலும் இவ்வாண்டில் அநேக ஏழை மாணவர்கள் உபகாரச் சம்பளத்திற்கு மனுக்கள் தலைச்சங்கத்திற்கு அனுப்பிக்கொண்டிருப்பதாகத் தெரிவதாலும் அவர்களுக்கு உதவி செய்ய வேண்டியது அவசியம் என இச்சங்கம் கருதுவதாலும் மஹாநாட்டின் மீதிப்பணத்தை முழுவதுமாவது அல்லது அதன் வட்டித்தொகையையாவது வசூலித்தும், தலைச்சங்கப் பொதுநிதியிலிருந்தும் ஏழை மாணவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய முயற்சி எடுத்துக் கொள்ளவேண்டுமென சென்னை தலைச்சங்க நிர்வாக கமிட்டி கூட்டத்தினையும் தலைச்சங்க அமைச்சரவர்களையும் இச்சங்கம் வணக்கத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது.

மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியதும் தலைவர் முடிவுரைக்குப்பின் இரவு 8-மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

P. மாரியப்ப முதலியார், செக்ரிடரி.

143412

### சேலம் ஜில்லா.

### வேலநத்தம் செங்குந்த மகாஜன சங்கம்.

(1) 1929-ம் வருஷம் ஜுன் மீ 5உ வேலநத்தம் ஸ்ரீ சுப்பிரமணிய ஸ்வாமி ஆலயத்தில் உயர்திரு கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின் கீழும்

(2) 11—6—1929 தேதி டை இடத்தில் சென்னை வியாசர்பாடி ஸ்ரீமத் குருஸ்வாமிகள் தலைமையின் கீழும்

(3) 20-6-29 தேதி டை இடத்தில் காஸ்மீரம் ஸ்ரீமத் சத்குருஞானானந்த ஸ்வாமிகள் தலைமையின் கீழும்

(4) 26-6-29 தேதியில் டை இடத்தில் ஸ்ரீமான் கு. வை. ஆ. செங்கோட முதலியார் அவர்கள் தலைமையின் கீழும் கூட்டம் நடைபெற்றது.

(5) 10-7-29 தேதி புதன்கிழமை மாலை 5½-மணிக்கு ஆட்டியாம்பட்டி போர்டு பாடசாலையில் திருவாளர் பு. சொ. வேலாயுத முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்ச் சங்கம் கூடியது.

#### சங்க நடவடிக்கைகள்.

கடவுள் ஸ்தோத்திரம் திரு. கு. ரா. கந்தப்ப முதலியார் அவர்கள் செய்தபின் "கல்வி" என்பதைப் பற்றி திரு. கு. வை. ஆ. செங்கோடமுதலியார் அவர்களும், "வர்த்தகம்" என்பதைப்பற்றி திரு. சி. ல. வைத்தியலிங்க முதலியார் அவர்களும், "ஊக்கம்" என்பதுபற்றி திரு. கு. ரா. கந்தப்ப முதலியார் அவர்களும், "கற்பு" என்ற விஷயமாய் திரு. S. ஆறுமுக முதலியார் அவர்களும், "லேவாதேவி" என்ற விஷயமாய் திரு. தை. விநாயத்த முதலியார் அவர்களும், "நம்முன்னேற்றம்" என்ற விஷயமாய் திருவாளர் ஈ. சித்த முதலியார் அவர்களும் வெகு திறமையுடனும் இனிமையகாவும் பேசினார்கள்.

அடுத்த கூட்டம் 17-7-29தேதி மாலை 5½-மணிக்கு இதே இடத்தில் கூடுவதாகவும் அன்று திரு. S. ஆறுமுக முதலியார் "ஒழுக்கம்" என்பது பற்றியும், திரு. தை. விநாயத்த முதலியார் லேவாதேவி விஷயமாயும், திரு. ப. ம. பெருமாள் முதலியார் "பெண்கல்வி" விஷயமாயும், கு. ரா. கந்தப்ப முதலியார் முன்னேற்றம் என்ற விஷயமாயும், திரு. பு. சொ. வேலாயுத முதலியார் 'கற்பு நிலைமை' என்ற விஷயமாயும் பேசுவதாக தீர்மானிக்கப்பெற்றுத் தலைவர் முடிவுரை, கடவுள் வாழ்த்து, வந்தனோபசாரம் முதலியவற்றுடன் இரவு 9-மணிக்குச் கூட்டம் இனிது கலைந்தது

### ஆட்டியாம்பட்டி

17-7-29 அன்று மாலை 6-மணிக்கு ஆட்டியாம்பட்டி போர்டு ஆண்பாடசாலையில் திரு. ப. ஈ. சித்த முதலியார் அவர்கள் தலைமையில் சங்கம் கூடிற்று. அப்போது ஸ்ரீமான் கு. ரா. கந்தப்ப முதலியார் அவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்ற பின் 'கற்பு நிலைமை', 'பெண்கல்வி', 'நம்குல முன்னேற்றம் அடையும் வழி', 'முயற்சி,' 'கல்வியின்பெருமை' 'குல முன்னேற்றம்,' என்னும் விஷயங்களைக்குறித்து முறையே ஸ்ரீமான்கள் பு. சொ. வேலாயுத முதலியார், ப. மா. பெருமாள் முதலியார், கு. க. வையாபுரி முதலியார், S. ஆறுமுக முதலியார், கு. வை. ஆ. செங்கோட முதலியார், கு. ரா. கந்தப்ப முதலியார் ஆகிய அறிஞர்கள் வெகு அழகாகவும் தெளிவாகவும் பேசினார்கள். கடைசியாக அடுத்த சங்கம் 24-7-29 அன்றுமாலை 5½-மணிக்கு இதே இடத்தில் கூடுவதாயும், அன்று இவ்வூர்ப் பாடசாலையை ஹையர் எலிமெண்டரி பாடசாலையாக்க வேண்டிய விஷயமாய் விண்ணப்பங்கள் அச்சிடவேண்டுமோயும் தீர்மானிக்கப்பெற்றுத் தலைவர் முடிவுரையுடனும் கடவுள் வாழ்த்து வந்தனோபசாரத்துடனும் இரவு 9-மணிக்குச் சங்கம் இனிது கலைந்தது.

24-7-29உ மாலை 5½-மணிக்கு ஆட்டியாம்பட்டி போர்டு ஆண்பாடசாலையில் திரு. ப. ஈ. சித்த முதலியார் அவர்கள் தலைமையில் சங்கம் கூடிற்று. அச்சமயம் திரு. ரா. கந்தப்ப முதலியார் அவர்களால் வெகு பக்தி விநயத்துடன் கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்ற பிறகு திருவாளர்கள் S. ஆறுமுக முதலியார் ப. மா. பெருமாள் முதலியார், கு. வே. காவிரி முதலியார், கு. ஆ. அர்த்தநாரி முதலியார், ப. ஆ. சித... பர முதலியார், கு. க. வையாபுரி முதலியார் கு. ரா கந்தப்ப முதலியார், ஆ. வைத்தியலிங்க முதலியார் கு. ரா. வே. ஆறுமுகமுதலியார் ஆகிய பிரமுகர்கள் முறையே, 'ஒற்றுமை', 'புறங்கூறாமை', 'ஒத... தொழிலேயல்', 'கல்வி', 'குடும்ப ஒழுக்கம்', 'பொது விஷயமும், ஒழுக்கமும்', 'நம்குலச்சிறப்பு', 'ஜீவ காருண்யம்', என்னும் விஷயங்கள் பற்றி யாவரும் எளிதில் உணருமாறு அழகாகப் பேசினார்கள்.

அடுத்தபடி திரு. S. ஆறுமுக முதலியார் அவர்கள் 'செங்குந்த மித்திரன்' என்னும் விஷயமாய்ப் பேசுகையில் நமது 'மித்திரன்' நமது குலமுன்னேற்றத்திற்கு இன்றியமையாத சாதகமாயிருப்பதால் நம்... ரில் ஒவ்வொருவரும் தவறாமல் சந்தாதாரர்களாக சேர்ந்தும் சர்தாபாக்கி யுள்ளவர்கள் அடுத்த சங்க கூட்டத்திற்குள் அவசியம் ஒன்று சேர்த்து இச்சங்கத்தின்மூலமாக அனுப்பியும் கனம் பத்திராதி... அவர்களுக்கு அதிக ஊக்கத்தை உண்டாக்க வேண்டுமென்றும், மித்திரனைத் தருவிப்போர் அதை அடுத்த சஞ்சிகை வருவதற்குள்ளாகவாவது முதலிலிருந்து கடைசிவரையில் கவனமாக வாசித்து உணரவேண்டுமென்றும் செங்குந்தர் பிரபந்தத்திரட்டு ஒவ்வொரு வீட்டிலும் அவசியம் இருந்தே தீரவேண்டிய புத்த...மென்றும் நன்கு விளக்கி உரைத்தார்கள்.

#### அன்று நிறைவேறிய தீர்மானங்கள்.

இப்பாடசாலையை ஹையர் எலிமெண்டரி பாடசாலையாக மாற்றிக் கொடுக்கவேணுமாய் எழு... அச்சடித்திருக்கும்விண்ணப்பங்களை 1, 2, 3, 4 லக்கமிட்டவர்களுக்கு தபாலில் அனுப்ப வேணுமாய... 5, 6 லக்கமிட்டவர்களுக்கு நேரில் கொடுக்கவேணுமாயும் தீர்மானிக்கப்பட்டது.

1. ம-ா-ா-ஸ்ரீ சேலம் தாலுக்கா போர்டு பிரெஸிடெண்டு அவர்கள்.

2. ம-ா-ா-ஸ்ரீ சேலம் ஜில்லா போர்டு பிரஸிடெண்டு அவர்கள்.

3. ம-ா-ா-ஸ்ரீ சேலம் ஜில்லா எஜுகேஷனல் ஆபீசர் அவர்கள்.

4. ம-ா-ா-ஸ்ரீ மதராஸ் கல்வியிலாகா டைரக்டர் அவர்கள்.

5. ம-ா-ா-ஸ்ரீ சேலம் ரேஞ்சு ஸ்கூல் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள்.

6. ஆட்டியாம்பட்டியிலிருக்கும் சேலம் தாலுக்கா போர்டு மெம்பர் அவர்கள்.

அடுத்த சங்கம் மறுவாரம் புதன்கிழமை மாலை 6-மணிக்கு இதேஇடத்தில் கூடுவதாய்த் தீர்மானிக்கப்பட்டுத் தலைவர் முடிவுரையுடனும் கடவுள்வாழ்த்து வந்தனோபசாரத்துடனும் இரவு 10-மணிக்குச் சங்கம் இனிது கலைந்தது.

S. ஆறுமுக முதலியார்,
செக்ரடெரி.

### செங்குந்தர் சங்கம், மோகனூர்.

சுக்கிலஞு ஆவணி மீ 1உ (14-6-29)ல் இவ்வூர் ஸ்ரீ மாசடசியம்மன் ஆலயத்தில் 10-வது கூட்டம் கூடிற்று. கூட்டத்திறகுத் தலைவரவர்கள் வாராமையால உபதலைவர் ஸ்ரீமான் மு. மொணந்தசாமி முதலியார் அவாகள் தலைமை வகித்தார்கள். மாணவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறியபின் காரியதரிசியால் முன் கூட்டத்தின நடவடிக்கைகளும் வரவு செலவு கணக்குகளும வாசிக்கபபெற்றுச் சந்தாததொகை வசூலித்துத் தலைவர் முடிவுரைக்குப்பின கூட்டம இனிது கலைநதது.

சுகிலஞு ஆடி மீ 6உ (21-7-29)ல் இவ்வூர் ஸ்ரீ மாசடசியம்மன ஆலயத்தில் 11-வது கூட்டம கூடிற்று. ஸ்ரீமான் K. சபாபதி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். மாணவர்கள் கடவுள் வாழ்த்துக் கூறியபின காரியதரிசியால முன் கூட்டத்தின நடவடிக்கைகளும் வரவு செலவு கணக்குகளும் வாசிக்கப்பட்டதும தலைசங்கத்தார் அவர்கள் அனுப்பியிருக்கும் கல்வித்திட்டு புஸ்தகங்களைக் கூடிய சிக்கிரம விற்பனை செய்து பணம அனுபபுவதென்று தீர்மானிககப்பட்டுச் சந்தாததொகை வசூலிககப்பெற்றதும தலைவர் முடிவுரைக்குப்பின் கூட்டம் இனிது கலைவுற்றது.

சு. ல. சடையப்பன்,
காரியதரிசி, மோகனூர்.

### வட ஆற்காடு ஜில்லா

### ஆம்பூர்கஸ்பா.

விரிஞ்சிபுர நாட்டின மேற்கெல்லையாகிய பாலைமாநதி சூழ்ந்த திருவாண்மையூர் எனவழங்கும ஆமபூர் கஸ்பா செங்குநதர் சுந்தர விநாயகர் ஆலயததில் நமது தென்னிந்திய செஙகுந்த மகாஜன சஙகத்திற்கு மகமை ஏற்படுத்தவேண்டி ஆம்பூர்நாட்டு நாட்டாண்மை உயர் சைவத்திருவாளர் மைல. வையாபுரி முதலியார் அவர்களும், கிராமணி திரு. ஆ. மை. ஆறுமுக முதலியார், காரியதரிசிகள் திரு. கட்டாரி ரா. மார்க்கசகாய முதலியார், திரு. பு. ச. பு. ஆறுமுக முதலியார், திருவாளர்கள் ஆ. ஆ. சாமிநாத முதலியார், வி. மு. பொன்னுசாமி முதலியார், தி. க. விடோபாமுதலியார் முதலிய பிரமுகர்களும் உபகாரியதரிசியாகிய ஏனைய செங்குந்தர்களும் நிகழும் சுக்கிலவாண்டு ஆனித்திங்கள் 25உ ஆகிய சுபயோக நன்னளில் சபைகூடி ஏகமனதுடன் நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு விவாக முகூர்த்தம் ஒன்றுக்கு ஒரு ரூபாயும் சீமந்தம் ருது சாந்தி முதலிய இதர முகூர்த்தங்களுக்கு அரை ரூபாய் வீதமும் கொடுக்க வேண்டுமெனத் தீர்மானித்தார்கள். பின்னர் டை ஆலயத்தில் சிறவியுள்ள திருநாவுக்கரசுசுவாமிகள் சமரச சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கத்தை ஊரார் அங்கீகரிப்பதாயும் தீர்மானிக்கப்பெற்றது. மூன்றாவதாக டை நாட்டைச்சார்ந்த பேரூர் குமாரமங்கலம், சிற்றூர, மேல்கிருஷ்ணபுரம், ஆலாங்குபபம், பெரியாங்குப்பம் முதலிய கிராமங்களுக்கும் மேற்கண்ட தீர்மானங்களின்படி நடத்திக்கொள்ள வேண்டுமென்று திருமுகம் எழுதியனுப்ப வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பெற்றது.

### ஸ்ரீமத் திருநாவுக்கரசு சுவாமிகள் சமரச சன்மார்க்க செங்குந்த வாலிபர் சங்கத்து முதலாண்டு விழா.

செங்குந்தர் சுந்தர விநாயகர் ஆலயத்தில் சுக்கிலவாண்டு ஆனித்திங்கள் 29-ம் நாளாகிய சுபதினத்தில் கொண்டாடப்பெற்ற இச்சங்கத்தின் முதலாண்டு விழாவிற்கு திரு. நாட்டாண்மை மைல. வையாபுரி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்கள். 12-7-29 காலை 7-மணி தொடங்கி டை சுந்தரவிநாயகருக்கும் சுப்பிரமணியகடவுளுக்கும் விமரிசையாக அபிஷேகாதிகள் நடத்தி ஊர்வலம வந்து தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்துக்கு ஜே! என்ற ஆரவாரத்துடன் தலைவரவர்களுக்கு பூமாலை சூட்டி அனைவரும் டை ஆலயத்தில அமர்ந்தார்கள். தமிழ்மறை யோதிய பிறகு தலைவர் அவர்களுக்கு வரவேற்புப் பத்திரம வாசித்தளிக்கப்பெற்றது. வருஷ ரிபோர்ட்டு வாசிக்கப்பட்டது. தலைவர் உரையுடன் 11½-மணிக்குச் சபை இனிது கலைந்தது. அன்று மாலை 3-மணிக்கு மறுபடியும் சபை கூடிற்று. சுமார் 200 ஜனங்களுக்குமேல் குழுமியிருந்தார்கள். கடவுள்வாழ்த்தின பின்னர் திருவாளர்கள சங்கத்தலைவர் பூச. ஆ. கோபால்சாமி முதலியார், உபதலைவர் சி. மு. நீலகண்ட முதலியார், காரியதரிசிகள் ஆ. கு. ஆறுமுக முதலியார், வி. மு. துரைசாமி முதலியார் ஆ. கு. மு. குபேந்திர முதலியார், பொ. சா. ரத்தின சபாபதி முதலியார், வா. சி. குப்புசாமி முதலியார் இவர்களால் முறையே அன்பு, பக்தி, ஒற்றுமை, கல்வியின மாண்பு, கல்லாமை, புலால்மறுதல், ஆலயவழிபாடு, சங்கத்தின அவசியம் என்னும் விஷயங்களைக்குறித்துச் சொற்பொழிவுகள்நிகழ்த்தப் பெற்றன. தலைவர் பின்னுரை கூறியதும், திரு. தி. க. விடோபா முதலியார் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பெற்றுக் கடவுளுக்குத் தீபாராதனைநடத்திப் புஷ்பம் முதலிய வழங்கப்பெற்று 7-மணிக்குச் சபை இனிது முடிவுபெற்றது.

பூச. ஆ. கோபால்சாமி முதலியார், தலைவர்.

## திருமாற்பேறு செங்குந்தர் சங்கம்.

1929 ஆம் ஜூலை மீ 4உ வியாழக்கிழமை மாலை 6-மணிக்கு மேற்படி சங்கத்தின் ஆதரவில் திருவாளர் பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் தலைமையின் கீழ் ஒரு கூட்டம் கூடிற்று. கடவுள் வணக்கம் பாடிய பின்பு தலைவர் முன்னுரையாக 'செங்குந்தரின் ஆசாரம்' என்னும் விடயத்தைக்குறித்து உபந்நியாசித்தார்கள். பிறகு அடியிற்கண்ட தீர்மானங்கள் ஒருமனதாக நிறைவேற்றப்பெற்றன:

1. இவ்வூரில் சுமார் மூவாயிரம் ஜனத்தொகை இருந்தும், படிக்கக்கூடிய பிள்ளைகள் சுமார் இருநூறுக்குமேல் இருந்தும், இவ்வூருக்கடுத்து மூன்று மைல் சுற்றளவுக்குள் வாசிக்கக்கூடிய பிள்ளைகள் சுமார் ஐந்நூறுக்குமேல் இருந்துங்கூட இவ்வூரில் இதுவரையில் ஆரம்பப் பாடசாலை ஸ்தாபிக்காததைப்பற்றி இச்சங்கம் மிக வருந்துவதோடு தாமதியாமல் உடனே ஒரு பாடசாலை ஸ்தாபிக்க வேண்டுமென அரக்கோணம் தாலுக்கா போர்டாரவர்களை இக்கூட்டம் மிகவும் வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது.

(b) இதற்கு வேண்டிய முயற்சிகளைச் செய்யுமாறு பனப்பாக்கம் பிர்கா தாலுக்கா போர்ட் மெம்பர்களை இக்கூட்டம் மிகவும் வேண்டிக்கொள்ளுகிறது.

2. பன்னூர் இரயில்வே ஸ்டேஷனுக்கும் திருமாற்பேறு கிராமத்தின் வழியாக, பனப்பாக்கத்திற்கும் சென்ற வருடத்தில் போடப்பட்ட மண்பாதையில் வண்டி போக்குவரத்துக்கள் மிகவும் அதிகமாயிருப்பதினால், அம்மண்பாதையில் கமைவண்டிகள் போவது மிக கஷ்டமாயிருப்பதைக் கருதி அப்பாதையைக் கிரேவல் பாதையாகச் செய்யும்படி இக்கூட்டம் அரக்கோணம் தாலுக்கா போர்டாரவர்களை மிகவும் கேட்டுக்கொள்ளுகிறது.

3. இவ்வூரில் மாதக்தோறும் வர்த்தமானப் பத்திரிகைகள் சுமார் அறுபதும் கடிதங்கள் சுமார் நூறும், இதற்கடுத்த சுமார் மூன்று மைலுக்குட்பட்ட கிராமங்களுக்கு இதைப்போல் இரட்டிப்பான தபால்கள் வந்துகொண்டும், இம்மாதிரியே இங்கிருந்து வெளிக்குப் போய்க்கொண்டு மிருக்கின்றன. இங்குத் தபாலாபீஸ் இல்லாமையால் மணியாடர் இன்ஷியூரன்ஸ் முதலியவைகளைக் காஞ்சிபுரம் முதலிய விடங்களுக்கு அதிகச் செலவு செய்துகொண்டு போய் அனுப்பவேண்டியதா யிருக்கின்றது. இங்குள்ளோர்கள் பெரும்பாலும் வியாபாரிகளாதலாலும், இவ்வூர் அநேக சுற்றுப்பக்க கிராமங்களுக்கு மத்திய ஸ்தானமாயிருப்பதினாலும் இவ்வூரில் ஒரு கிளை தபாலாபீஸ் ஏற்படுத்துமாறு போஸ்மாஸ்டர் ஜெனரலவர்களை இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

4. சென்ற தைமீ ஈரோட்டில் கூடிய நமது முதல் மகாநாட்டின் தீர்மானப்படி நமது ஊரில் சுகாதாரம் பொதுஜனக்கூட்டம் முதலியவற்றை கவனிக்கவும் நமது மகாநாடுகளில் சென்று துணை புரியவும் இவ்வூரில் ஒரு தொண்டர்படை இச்சங்க ஆதரவில் ஸ்தாபிக்க வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

5. (a) மதுவிலக்கு பிரசாரத்திற்காக சென்னைச் சட்டசபையில் திரு. முத்தைய முதலியாரவர்கள் நான்கு லக்ஷம் ரூபாய் ஒதுக்கிவைத்திருப்பதைக் இக்கூட்டம் பாராட்டுவதோடு, செங்குந்தர்களின் தலைச்சங்கமாகிய சென்னை தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தில் பிரசாரகர்கள் தங்கள் பிரசாரத்தில் மதுவிலக்கையும் ஒருபாகமாகச் சேர்த்திருப்பதால் அச்சங்கத்திற்கு அப்பணத்திலிருந்து ஒரு பகுதியை உதவ வேண்டுமென இக்கூட்டம் வேண்டிக்கொள்ளுகிறது.

(b) மதுவிலக்கு சென்ட்ரல் கமிட்டியில் செங்குந்தரில் ஒருவரை நியமிக்கவேண்டுமென இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

6. திரு. அ. ப. முத்துக்குமார முதலியாரவர்களையும் திரு. கல். சாமி முதலியாரவர்களையும் சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர்களாகச் சேர்த்துக்கொள்ள வேண்டுமென இக்கூட்டம் தீர்மானிக்கின்றது.

7. அடுத்த இருத்திலைக் கூட்டத்தில் திரு. மணியம் அந்தாரி முதலியார், 'கல்வி' செ. மு. எல்லப்ப முதலியார், 'ஒழுக்கம்' என்னும் விடயங்களைக் குறித்து பேசுவார்கள்

நான்காவது தீர்மானப்படி அடியிற்கண்டோர்கள் தொண்டர்களாகச் சேர்ந்தார்கள் :—

தொண்டர்படைத்தலைவர் அப. முருகப்ப முதலியார்.

### தொண்டர்கள்.

செ. பொன்னுசாமி முதலியார், வட. பொன்ன முதலியார், கல. வேலு முதலியார், தக. நடேச முதலியார், மல. அருணகிரி முதலியார், பாடு. நாராயணசாமி முதலியார், அப. பூங்காவன முதலியார், கை. அப்பா முதலியார் கோடி. சுந்தரமூர்த்தி முதலியார், சா. கோவிந்தராஜு முதலியார், செ. கோவிந்தராஜு முதலியார், சித. முனியப்ப முதலியார், அம்பலத்தாடி முதலியார்.

இரவு 11-மணிக்குத் திரு. இராஜவேல் வந்தனோபசாரங்கூறக் கூட்டம் இனிது கலைந்தது.

இத்தகைய தீர்மானங்களை அவ்வவ்விலாகா அதிகாரிகளுக்கு உடனுக்குடனே தெரிவிப்பதன்றி நமது மித்திரனில் வெளியான உடன் அவற்றைக் குறிப்பிட்டும் அனுப்புவார்களென நம்புகிறோம்.

## திருநெல்வேலி ஜில்லா

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம், வீரவநல்லூர்.

இச்சங்கத்தின் பன்னிரண்டாவது ஆண்டு நிறைவு விழா ஆனிமீ 10உ ஞாயிற்றுக்கிழமை யன்று திருநெல்வேலி வக்கீல் ஸ்ரீமான் வி எஸ். சங்கரசுப்பிரமணிய முதலியாரவர்கள் பி.ஏ., பி.எல். தலைமையில் வெகு விமரிசையாகக் கொண்டாடப்பெற்றது. திருநெல்வேலி ஜில்லா பிரதிநிதிகளும் கொல்லங்கோட்டிலிருந்து திருவாளர் எஸ். சொக்கலிங்க முதலியாரவர்கள், முத்துவேல் முதலியாரவர்களும விஜயம் செய்திருந்தார்கள். கடவுள் வணக்கம் முடிந்ததும் சங்கக்காரியதரிசி திரு. சி. ப. ஆறுமுக முதலியாரவர்கள் வருஷாந்திர அறிக்கையும், வரவு செலவு கணக்கும் வாசித்தார்கள். பின்னர் தலைவர் நம்மாபினர் முன்னேற்றமடைய வேண்டிய பலதிலைகளையும்பற்றி நீண்டதொரு பிரசங்கம் செய்தார்கள். பின்னர் திருவாளர்கள் பி. எம். வெங்கடராமையர், சிவசுப்பிரமணியஞ் செட்டியார், வீரவாகு செட்டியார் ஆகிய மூவர்களும் முறையே "பக்தி", "பன்னிரண்டில் பன்னிரண்டு" "அறநெறி" என்னும் விஷயங்களைப்பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் சங்க ஆதரவில் நடந்துவரும் கல்லூரித் தலைமை ஆசிரியர் திரு. ஆதிநாராயண பிள்ளையவர்கள் கலூரி மாணவர்களைக்கொண்டு "கம்புலவும் ஆணவெழுவும்" என்பதுபற்றி ஓர் இனிய சம்பாஷணை நடத்திவைத்தார்கள். தலைவர் அவர்கள் பிரசங்கங்களை யொட்டிப் பேசி முடித்த பின் தீர்மானங்கள் முதலியன சமீபத்தில் நடக்கவிருக்கும் ஜில்லா காணபரனவில் கொண்டுவரப் படுமென்று தெரிவித்தார்கள். பின்னர் சங்க உபதலைவர் திருவாளர் ஆ. மு. ஆறுமுக முதலியாரவர்கள் யாவருக்கும் வந்தனங்கூறித் தலைவருக்கும் உபந்நியாசகர்களுக்கும் பூமாலை சூட்டிய பின்னர் தாம்பூலம் வழங்கப்பெற்றுச் சபை இனிது கலைவுற்றது.

சி. ப. ஆறுமுக முதலியார்,
காரியதரிசி.

## தென்னாற்காடு ஜில்லா

### லால்பேட்டை செங்குந்தர் ஞானப்பிரகாச சங்கம்.

8-6-29உ திரு. உ. அ. கந்தசாமி முதலியார் வியாபாரஸ்தலத்தில் பகல் 10 மணிக்குத் தலைச்சங்கப் பிரதிநிதி திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் முன்னிலையில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் மேற்படி சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது. அப்போது கீழ்க்கண்ட உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

**தலைவர்.**

திரு. தொ. சி. மா. சிவக்கொழுந்து முதலியார்.

**உபதலைவர்**

திரு. கு. தி. அ. நடராஜ முதலியார்.

**அமைச்சர்கள்.**

திரு. மூ. ம. ஆறுமுக முதலியார்

திரு. உ. அ. கந்தசாமி முதலியார்.

**பொருட்காப்பாளர்.**

திரு. மொ. உ. சாமிநாத முதலியார்.

**இதர நிர்வாக அங்கத்தினர்கள்.**

திரு. ஆ. கோவிந்தசாமி முதலியார்
,, கு. வே. மு. சுப்ரமண்ய முதலியார்
,, கு. க. வைத்தியலிங்க முதலியார்
,, க. சொ. பொன்னுசாமி முதலியார்
,, கோ பி. வேலு முதலியார்
,, வே. மாணிக்க முதலியார்
,, தா. சி. கந்தசாமி முதலியார்
,, பு. க. அ. முருக முதலியார்.

### நிறைவேறிய தீர்மானங்கள்.

1. மேலே கூறிய இச்சங்கத்திற்குக் கமிட்டி மெம்பர்கள் ஒவ்வொருவரும் பிரதி அமாவாசைதோறும் இரண்டணா சந்தா செலுத்திவர இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2. இச்சங்கம் சென்னையில் ஸ்தாபித்துள்ள தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்திற்கு வருஷா வருஷம் ஐந்து ரூபாய் செலுத்திவர தீர்மானிக்கிறது

3. இச்சங்கம் அமாவாசைதோறும் நிர்வாக கமிட்டிகூட்ட காரியதரிசிகளுக்கு அனுமதி அளிக்கிறது.

4. பதினைந்து தினத்திற்கொருமுறை பொதுக் கூட்டம் கூட்டிச் சீர்திருத்த சம்பந்தமாக உபந்யாசங்கள் செய்யவேண்டுமென்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது

5. நமது சமூக சீர்திருத்தத்திற்காக பொதுநல பத்திரிகைகளையும் சமூகப் பத்திரிகைகளையும் சமய சம்பந்தமான நூல்களையும் பெற்று வாசிப்பதற்கு ஒரு வாசகசாலை ஏற்படுத்துமாறு யூனியன் போர்டு பிரஸிடெண்டு அவர்களிடம் போய்க் கேட்பதற்கு ஒரு தூதுக்கூட்டத்தை யேற்படுத்த இக்கூட்டம் தீர்மானிக்கிறது. மாலை 12-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

தொ. சி. மா. சிவக்கொழுந்து முதலியார்,
பிரசிடெண்டு.

உ. அ. கந்தசாமி முதலியார்,
அமைச்சர்.

### உடையார்குடி செங்குந்த மாணவர் சங்கம்.
### காட்டுமன்னார் கோயில்.

22-7-29-ல் சங்கத்தின் இரண்டாவது கூட்டம் சபை பு. ப. வைத்தியலிங்க முதலியார் தலைமையின் கீழ்க் கூடியது. சபை அ. பொ. குமாரசாமி முதலியார், க. மூ. பழனி முதலியார், வை. க. ரத்தின முதலியார் வை. தாண்டவராய முதலியார், பொ. ராமலிங்க முதலியார் இவர்களால் அநேக அரிய சொற்பொழிவு நிகழ்ந்தபின் பின்னர் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது நிறைவேறியது

மு. செ சின்னதம்பி முதலியார்,
அமைச்சர்.

## கோவை ஜில்லா.

### ஊத்துக்குழி உண்மைச் செங்குந்த குலசங்கம்.

24-6-29உ இரவு 8-மணிக்கு மொ. ப. ரங்கசாமி முதலியார் பாங்கியின் முன் கட்டிட ஹாலில் திரு. நா க. வடிவேல் முதலியாரவர்கள் அக்ராசனத்தின்கீழ்ச் சங்கம் கூட்டப்பட்டது. நமது சங்கம வருஷ பூர்த்தியானமையாலும் இச்சங்கத்தின் முக்ய அங்கத்தினர்கள் சரியானபடி இவ்வூரில் இல்லாமையாலும் இச்சங்கம் நமது மகா நாட்டிற்குப் பிறகு கூட்டாமற்போனதுபற்றியும் இச்சங்கத்திற்குப புதிய மெம்பர்களை தேர்ந்தெடுக்குமாறு நாளது வரை சங்கக் காரியதரிசியாயிருந்துவந்த திரு. M. C. ராமசாமி முதலியாரவர்கள் பிரேரேபிக்க

எல்லோராலும் அங்கீகரிக்கப்பட்டு அடியில் கண்டவாறு புதிய அங்கத்தினர்கள் தேர்ந்தெடுக்கப் பெற்றனர்.

அக்கிராசனர்.

(1) திருவாளர் மை. சி. செங்கோட முதலியார் அவர்கள்.

உபதலைவர்.

(2) திரு. A. P. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள்.

காரியதரிசி.

(3) திரு. K. S. குப்பண்ண முதலியார் அவர்கள்.

உதவி காரியதரிசிகள்.

(4) திரு. M. K. ஆறுமுக முதலியார் அவர்கள்.

(5) திரு. U. K. ஆறுமுக முதலியார் அவர்கள்.

பொக்கிஷதார்.

(6) திரு. M. A. நாகப்ப முதலியார் அவர்கள்.

கணக்குப் பரிசோதகர்.

(7) திரு. நா. க. வடிவேல் முதலியார் அவர்கள்.

நிர்வாக சபை அங்கத்தினர்கள்.

திருவாளர்கள், மொ. ப. ரங்கசாமி முதலியார், மை. சி. அண்ணாமலை முதலியார், சா. ஞானந்த முதலியார், சா. மொ. சுப்பிரமணிய முதலியார், சின்னிய முதலியார், நாராயண முதலியார், ஆ. வஞ்சி முதலியார், க. சுப்பிராய முதலியார், கு. கனகசபை முதலியார், கு. கநித்தமலை முதலியார், மொ. ஆ. பழனியப்ப முதலியார், க. முத்துமாரப்ப முதலியார், கு. சின்னிய முதலியார், அண்ணாமலை முதலியார், நா. காசிமுதலியார், K. S. கிருஷ்ணன், மொ. கந்தசாமி முதலியார், M. A. அங்கப்ப முதலியார், சா. கு. சுப்பராய முதலியார், சிவ. ராம முதலியார்.

(2) சந்தாத் தொகை நபர் 1-க்கு ஒரு அணா வீதம் வசூலிக்கப்பட்டது.

(3) இச்சங்கம் பிரதி பௌர்ணமிதோறும் கூட்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

(4) நமது சங்கத்தின் அவசியத்தைப் பற்றியும் நன்மையைப் பற்றியும் திரு. M. C. ராமசாமி முதலியாரவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் இரவு 10மணி சுமாருக்கு வந்தனோபசாரம் சொல்லி வாழ்த்துதல் கவியுடன் சபை இனிது நிறைவேறியது.

க. கு. குப்பண முதலியார்,
காரியதரிசி.

கொல்லங்கோடு செங்குந்தர் வாலிபர் சங்கம்.

சங்கத்தின் 14-வது கூட்டம் வைகாசி௴ 6உ, வடக்குப்பாவடி தண்டபாணி கோயிலில், ச. சுப்பிரமண்ய முதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. சிவராம முதலியார் அவர்கள் 'கல்வி' என்பது பற்றிப் பேசினபின், தலைவர் முடிவுரையுடன் கூட்டம் இனிது கலைந்தது.

15-வது கூட்டம், வைகாசி௴ 13உ தெற்குப் பாவடி பஜனை மடத்தில். இரா. அருணாசல முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ப. சுப்பிரமண்ய முதலியார், இரா. நஞ்சப்ப முதலியார் இவர்கள் 'கல்வி' என்பதுபற்றிப் பேசினபின், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரகர்கள், கொல்லங்கோட்டிற்கு வரும்போது அவர்களைச் சங்கத்தின் ஆதரவில் வரவேற்கவேண்டுமென்ற தீர்மானம் ஏகமனதாக நிறைவேறிற்று. பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

16-வது கூட்டம் வைகாசி௴ 20உ வடக்குப் பாவடி தண்டபாணி கோயிலில் சிவராம முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. இரா. நஞ்சப்ப முதலியார் 'ஒற்றுமை' என்பது பற்றிப் பேசியபின், அ. இருளாண்டி முதலியார் பேசினார். கடைசியில் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

17-வது கூட்டம், வைகாசி௴ 27உ தெற்குப் பாவடி பஜனை மடத்தில் இ. சித்திலிங்க முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. ப. முத்துவேலு முதலியார் 'சங்கமும் பத்திரிகையும்' என்னும் விஷயத்தைப்பற்றிப் பேசினார். பின் சிவராம முதலியார், இரா. அருணாசல முதலியார், இவர்கள் பேசி முடிந்ததும் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

18-வது கூட்டம் ஆனி௴ 3உ வடக்குப் பாவடி தண்டபாணி கோயிலில் நடைபெற்றது. அது சமயம், கொல்லங்கோட்டிலுள்ள செங்குந்தர்கள், கைத்தொழிலிலும், வியாபாரத்திலும், போதிய பணவருவாயில்லாமல் கஷ்டப்படுவதைக் கூடின மட்டும் நிவர்த்திப்பதற்கும், தீய பழக்கங்களை ஒழிப்பதற்கும், நம்மவர்களிடையில் ஒற்றுமையும் பரோபகாரமும் உணர்ச்சியும் வளர்ப்பதற்கும், வேண்டிய விஷயங்களைப் பற்றி யோசிப்பதற்கும். கொல்லங்கோட்டில் வசிக்கும் செங்குந்தர்களனைவரும், ஆனி௴ 11 தேதி சுமார் 3-மணிக்கு, பஜனை மடத்தில், செங்குந்த வாலிபர் சங்கத்தின் முயற்சியால் கூடவேண்டுமென்றும் தீர்மானித்துக் கூட்டம் கலைந்தது.

19-வது கூட்டம் ஆனி௴ 10-தேதி தெற்குப் பாவடி பஜனை மடத்தில் ப. இராமசுவாமி முதலியார் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. க. சிதம்பர முதலியாரும், மு. பழனியப்ப முதலியாரும், க. சிவராம முதலியாரும், 'கைத்தொழிலும், வியாபாரமும், அபிவிருத்தியடைவதற்கு வேண்டிய காரியங்களைப்பற்றி யோசிப்பதற்கு, வாலிபர் சங்கத்தின் முயற்சியால், ஆனி 11 தேதி கூட்டுவதாகத் தீர்மானித்திருந்த பொதுக்கூட்டம், சங்கத்தின் காரியதரிசிகளாகிய S. சொக்கலிங்க முதலியாரும், P. முத்துவேலு முதலியாரும், ஊரில் இல்லாததனால், ஆடி௴ 1தேதி கூட்டப்படவேண்டுமென்று தீர்மானிக்கப் பெற்றபின், தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

20-வது கூட்டம் ஆனி௴ 17 தேதி இரவு 9 மணிக்கு வழக்கம்போல, வடக்குப் பாவடி தண்டபாணி ஆலயத்தில் சுப்ரமண்ய முதலியார் அவர்களின் தலைமையில் கூடிற்று. K. P. சுப்பிரமண்ய முதலியாரும், R. அருணாசல முதலியாரும் 'ஜீவகாருண்யம்' என்பதுபற்றிப் பேசினார்கள் பின் தலைவர் முடிவுரையுடன் கூட்டம் கலைந்தது.

S. சொக்கலிங்க முதலியார்,
P. முத்துவேல் முதலியார்.



தஞ்சை ஜில்லா,

உள்ளிக்கடை செங்குந்தர் சங்கம்.

(1) 23-6-29 தேதியில்பகல் 11-மணிக்குச் சென்னை சங்கத்தின் பிரசாரகர் சொ. ச. கந்தசாமி முதலியார் அவர்களால் உள்ளிக்கடை பாலசுந்தரமூர்த்தி பிள்ளையார் கோவில் பஜனை மடத்தில் செங்குந்தர் சங்கம் ஏற்படுத்தித் தேவாரக்கோஷ்டிகளும் தலைச்சங்க பிரசாரகர் திரு சொ. ச. கந்தசாமி முதலியாருக்கு வந்தனோபசாரமும் ஏனைய சமூகத்தவருக்கும் சந்தன தாம்பூலம் வழங்கப்பெற்று மங்களகரமாக வருகிற 30-6-29 இரவு 8-மணிக்கு மறுபடி சங்கம் கூடவேணுமென்று தீர்மானிக்கப்பட்டது.

(2) 27, 30-6-29தேதிஇரவு 8-மணிக்கு சங்கம் கூடப்பெற்றது. திரு. ஆ. ச. மாரிமுத்து முதலியார் அவர்கள் தலைமை வகித்தார். கடவுள் தோத்திரம் பாடப் பெற்றதும் திரு வீ. எஸ். குமாரசாமி முதலியார், 'ஒற்றுமை' யென்பதைப் பற்றியும் திரு. கு சாமிநாத முதலியார், அவர்கள் பொதுவிஷயங்களைப் பற்றியும் திரு. எஸ். சிவகுருநாத முதலியார் அவர்கள் 'தொழில்' என்பதைப்பற்றியும் தெளிவாகச் சொற்பொழிவு நிகழ்த்தினர். அக்கிராசனாதிபதி அவர்களுக்குக் காரியதரிசி அவர்களால் வந்தனோபசாரம் சொல்லப்பட்டுத் தாம்பூலம் வழங்கப்பட்டது.

(3) 7-7-29 இரவு 7-மணிக்குமேல் இச்சங்கம் ஆ. ச. மாரிமுத்து முதலியார் தலைமையில் கூட்டப்பட்டது. சென்ற மீட்டிங்கில் கடந்தேறிய விஷயங்கள் படிக்கப்பெற்ற உபகாரியதரிசி வா. சி. முருகைய முதலியார் அவர்களால் தலைமை வகித்து கடவுள் வணக்கம் பாடப்பட்டது. திரு. என். ஜீ. சாமிநாத முதலியார் அவர்கள் கல்வி விஷயத்தைப் பற்றி ஒரு மணி வரையில் சாமாரி பொழிந்தார். திரு வீ எஸ் குமாரசாமி முதலியார் அவர்கள் விபூதியின் மகிமையைப்பற்றித் தெளிவாக உரைத்தார். திரு. எம். எஸ். சிவகுருநாத முதலியார், அவர்களால் தலைவருக்கு வந்தனோபசாரம் கூறப்பட்டது.

(4) 14-7-29தேதி சங்கம் திரு ம குருஸாமி முதலியார் அக்கிராசனத்தின்கீழ்க் கூட்டப்பட்டது. கடவுள் வணக்கம் பாடப்பட்டதும் திருவாளர் வா. சி. முருகைய முதலியார் அவர்கள் 'செங்குந்த மித்திர'னின் மேன்மையைப்பற்றியும் திரு எம் எஸ் சிவகுருநாத முதலியார் அவர்கள் மித்திரனை ஆதரிக்க வேணுமென்பதைப்பற்றியும் அவரவர் பலன்களைப் பற்றியும் தெளிவாகச் சொற்பொழிவுநிகழ்த்தினார்கள். அக்கிராசனாதிபதி அவர்களுக்கு வந்தனோபசாரம் சொல்லப்பட்டது.

(5) 21-7-29 தேதி சங்கம் திரு மு. சாமிநாத முதலியார் அவர்கள் இல்லத்தில் டை சாமிநாத முதலியார், அவர்கள் அக்கிராசனத்தில் கூடிற்று. கடவுள் வணக்கம் பாடப் பெற்றதும் திரு. என். ஜீ. சாமிநாதமுதலியார் அவர்கள் கல்வியென்பதைப்பற்றியும் திரு. எம். எஸ் சிவகுருநாத முதலியார் அவர்கள் மதுபானத்தைக் கண்டித்தும் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

மு சாமிநாத முதலியார், அக்கிராசனாதிபதி
சி. கா. ஸாமிநாத முதலியார், காரியதரிசி

## தலைச்சங்கத்தின் பிரசாரம்

சேலம், கோயமுத்தூர், மலையாளம்
ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம்

தென்னிந்திய செங்குந்த மகாஜனசங்கத்தார் செய்த தீர்மானப்படி திருவாளர் கோட்டாறு C. பன்னிருகைப்பெருமான் முதலியார் அவர்கள், B. A., B. L., திருவாளர் வீரவநல்லூர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள், B. A., B. L., ஆகிய இருவரும் சேலம், கோயமுத்தூர், மலபார் என்ற மூன்று ஜில்லாக்களில் சமுதாய முன்னேற்ற சம்பந்தமான வேலைகள் செய்வதற்காக 1929௵ மே௴ 19 தேதி திருநெல்வேலியினின்றும் புறப்பட்டனர்.

அம்மாபேட்டை.

மே௴ 20 தேதி காலையில் சேலம் அம்மாபேட்டை சென்று சேர்ந்தனர். திருவாளர்கள் S. பழனியாண்டி முதலியார், S. P. பொன்னுசாமி முதலியார் முதலானவர்கள் ரயில்வே ஸ்டேஷனுக்கு வந்திருந்து இவர்களை அன்புடன் அழைத்துச் சென்றனர். அன்றைய இரவு அம்மாபேட்டை செங்குந்த சமாஜத்தின் ஆதரவில் ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று. இதன் விபரம் முன்னரே ஆனி மித்திரனிற் காண்க.

மே௴ 22-தேதி அம்மாபேட்டை இராசப்பள்ளிக்கூடத்தில் அவ்வூர் செங்குந்த இளைஞர் சங்கத்தின் ஆதரவின்கீழ் மற்றொரு விசேஷக்கூட்டம் கூடிற்று. அப்போது தலைவர் அவர்கள் ஊரில் ஒற்றுமை இல்லாதிருப்பது ஊருக்குக்கேடுதல் என்றும் அம்மாபேட்டையிலும் சேலம் டவுனிலும் செங்குந்தர்கள் ஒற்றுமையுடன் இருந்தால் வரப்போகும் முனிசிபல் தேர்தலில் குறைந்தது 6 செங்குந்தர்களேனும் சேலம் முனிசிபல் கௌன்சிலுக்கு மெம்பர்களாகத் தெரிந்தெடுக்கப்படுவார்களென்றும் பேசியது மிகவும் கவனிக்கத்தக்கது. மற்ற விபரங்கள் ஆனி௴ மித்திரனிற் காண்க.

மே௴ 23-தேதி காலை 10-மணிக்கு அம்மாபேட்டையில் இரண்டாவது செங்குந்தர் இளைஞர் சங்கம்

ஒன்று ஏற்படுத்தவதற்காக அவ்வூர் முனிசிபல் பாடசாலையில் ஒரு பெருங்கூட்டம் கூடிற்று. பாடசாலை முழுவதும் ஜனங்கள் நிறைந்திருந்தனர். திரு. C. பன்னிருகைப்பெருமாள் முதலியார் அவர்கள் அந்தச் சங்கத்தைத் திறந்து வைக்கும்பொழுது தற்போது உலகத்தில் தோன்றி இருக்கும் இளைஞர் இயக்கத்தைக் குறித்துச் சற்று விரிவாகப் பேசினர். திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்கள் அக்கூட்டத்தின் தலைவராக இருந்து இளைஞர் இயக்கத்தைக் குறித்தும் சமுதாய முன்னேற்றமான பல விஷயங்களைக் குறித்தும் அழகாகப் பேசினார்கள். திருவாளர்கள் மாரிமுத்து முதலியார் அவர்கள், S. P. பொன்னுசாமி முதலியார் அவர்கள், S. பழனியாண்டி முதலியார் அவர்கள் முதலான அம்மாபேட்டை செங்குந்தர் தலைவர்களும் பேசினார்கள். அம்மாபேட்டை இரண்டாவது இளைஞர் சங்கம் ஸ்தாபிக்கப்பட்டுச் சங்கத்திற்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களும் நியமிக்கப்பட்டார்கள்.

## வேலகந்தம்.

மேமீ 24௳ காலையில் நமது பிரதிநிதிகள் திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்களோடு ஆகியவர்கள் அட்டியாம்பட்டிக்குச் சமீபத்திலுள்ள வேலகந்தம் என்னும் ஊருக்குச் சென்றனர். இங்குக் கூடியகூட்டத்தின் விபரம் ஆடி மித்திரனிற் காண்க. அந்தக் கூட்டத்திற்கு அவ்வூரிலுள்ள முக்கிய தனவந்தரான திருவாளர் இராஜப்ப முதலியார் அவர்கள் வராதிருந்தது வருந்தத் தக்கது. செங்குந்தர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டுச் சங்க உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு 2 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

## சேலம் டவுன்.

மேமீ 25௳ காலை பிரதிநிதிகள் அம்மாபேட்டையை விட்டுப் புறப்பட்டார்கள். சேலம் டவுன் Extension-ல் வாழும் திருச்செங்கோடு T. R. முருகேச முதலியார் அவர்களையும், திரு. M. இராமசாமி முதலியார் அவர்களையும் கண்டு பேசிவிட்டு அன்று சாயங்காலம் 5-மணிக்குப் பிரதிநிதிகள் திருச்செங்கோடு போய்ச் சேர்ந்தார்கள்.

## திருச்செங்கோடு.

அவர்கள் போன சமயத்தில் திருச்செங்கோடு முருகக் கடவுள் கோவிலில் திருவிழாக் காலமானதால் அங்குள்ள ஜனங்களைக் கூட்டிவைக்க சௌகரியமில்லாது போயிற்று.

## ஈரோடு.

மேமாதம் 26 தேதி சாயங்காலம் பிரதிநிதிகள் ஈரோடு வந்து சேர்ந்தார்கள். அவ்வூரிலுள்ள செங்குந்தர் தலைவர்களெல்லாம் திருச்செங்கோட்டுக்குச் சென்றிருந்தபடியால் ஈரோட்டிலிருந்து அவ்விரவே புறப்பட்டனர்.

## கோயமுத்தூர்

மே மாதம் 28 தேதி சாயங்காலம் பிரதிநிதிகள் இருவரும் கோயமுத்தூர் வந்து சேர்ந்தார்கள். அவ்வூர்ச் செங்குந்தர்களின் முக்கிய தலைவரான திருவாளர் V. S. செங்கோட்டையா முதலியார் அவர்கள் நமது முதல் மகாநாட்டின் வரவு செலவு கணக்கை வெளியிட்டதின் பிறகே கோயமுத்தூர் ஜில்லாவிலுள்ள மற்றவர் ஊர்களுக்கு நாம் சென்று பிரசார வேலை செய்வது சரியாகுமென்று சொன்னதினால் வேறு ஊர்களுக்கும் போகாமல் பிரதிநிதிகள் கொல்லங்கோட்டுக்குப் புறப்பட்டனர்.

## கொல்லங்கோடு.

மேமாதம் 29 தேதி சாயங்காலம் பிரதிநிதிகள் இருவரும் கொல்லங்கோடு வந்து சேர்ந்தனர். அன்று சாயங்காலம் 5 மணிக்கு அவ்வூர் செங்குந்த சமாஜத்தின் ஆதரவில் ஒரு விசேஷக் கூட்டம் கூடிற்று. இக்கூட்டத்திற் கண்ட ஒரு விசேஷம் என்னவென்றால்: கூட்டத்திற்கு வந்தவருள் சில மாதர்களும் இருந்தனர். திருவாளர் கொல்லங்கோடு முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தனர். நமது பிரதிநிதிகள் இருவரும் முதலில் பொதுவாகச் செங்குந்தசமுதாயமுன்னேற்றத்திற்கு வேண்டிய விஷயங்களைக் குறித்துப் பேசினர். பின்னர் மலையாள ஜில்லா செங்குந்தர்களுக்கிடையில் வழங்கிவரும் ஒரு நாகரீகமற்ற வழக்கத்தைக் குறித்து விரிவாய்ப் பேசினர். அவ்வழக்கம் என்னவென்றால்: செங்குந்த ஆடவர்கள் கல்யாணமாகிறவரையிலும் தாடி மீசை வளர்த்தல் (இதுவிஷயமாக ஒரு நீண்ட வியாசம் ஒன்று இப்பத்திரிகையில் வெளிவரும்.) கூட்டம் இராத்திரி 9-மணிக்குக் கலைந்தது.

மேமாதம் 30தேதி பகலில் கொல்லங்கோட்டிலுள்ள மேட்டுப்பாளையம், பாறைக்களம், மடக்குப்பாவடி முதலான இடங்களுக்குச்சென்று அங்குள்ள ஜனங்களை ஒரு பொது இடத்தில் அழைத்து வைத்துச் சமுதாய முன்னேற்ற விஷயமான காரியங்கள் அவர்களுக்குச் சொல்லப்பட்டன.

அன்று சாயங்காலம் 6 மணிக்கு திருவாளர் சித்தூர் C. P. இராமன் முதலியார் அவர்கள், B. A., B. L., தலைமையின் கீழ்க் கொல்லங்கோட்டில்இரண்டாவது விசேஷக் கூட்டம் ஒன்று கூடிற்று. தலைவர் அவர்கள் கல்யாணமாகாதவர்கள் தாடி மீசை வளர்ப்பதான கெட்ட வழக்கத்தைக் குறித்து மிகுந்த ஆத்திரத்துடன் பேசி, "என் உயிர் இருக்குமானால் இந்தக் கெட்ட வழக்கத்தை அடியோடு மலபாரினின்றும் தொலைக்க நான் முயல்வேன்" என்று முடித்தனர்.

## கொச்சி சித்தூர்.

மே மாதம் 31 தேதி திருவாளர்களான முத்துக்குமாரசாமி முதலியார், C. P. இராமசாமி முதலியார், கொல்லங்கோடு சொக்கலிங்க முதலியார், பிரதிநிதிகள் ஆகிய இவர்கள் கொச்சியிலுள்ள சித்தூர் வந்து சேர்ந்தனர். அப்பொழுது அந்த ஊரில் மாரியம்மன் கோவிலில் விசேஷத் திருவிழா நடந்த காலம். அந்தக் கோவிலிலேயே அவ்வூரிலுள்ள ஜனங்களை வரவழைத்து சமுதாய முன்னேற்றச் சம்பந்தமான விஷயங்களைப்பற்றிச் சொன்னதின் பின்னர் செங்குந்தர் சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

## குழல் மன்னம்.

ஜூன் மாதம் 1தேதி காலை குழல் மன்னம், என்னும் ஊருக்கு மலையாளத்துத் தலைவர்கள் மூவரும், பிரதிநிதிகள் இருவரும் போனார்கள். அவ்வூரிலுள்ள ஜனங்களைத் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் வீட்டில் அழைத்து வைத்துச் செங்குந்தர் பல துறைகளில் அபிவிருத்தி அடைவதற்குரிய நற்போதனைகள் சொல்லப்பட்டன.

## புதூர்.

ஜூன் மாதம் 1 தேதி சாயங்காலம் 3-மணிக்கு எல்லோரும் புதூர் போய்ச் சேர்ந்தனர். அங்குள்ள செங்குந்தர்கள் கோவிலில் கூடினர். அப்பொழுது குடி, தாடி மீசை வளர்த்தல், பெண்கல்வி முதலான விஷயங்களைக் குறித்து அவர்களுக்குச் சொல்ல, அப்பொழுது அங்கிருந்தவருள் சிலர் தாடி மீசை வளர்த்தல் அவசியம் வேண்டிய ஒரு காரியம் என்பதைக் குறித்து உக்கிரமாக வாதாடத் தொடங்கினர். அவர்களுக்கு இனிய வார்த்தைகளினால் சமாதானம் சொல்லப்பட்டது.

## பல்லஞ் சாத்தனூர்

ஜூன் மாதம் 2 தேதி காலையில் பல்லஞ் சாத்தனூருக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அங்குள்ள ஜனங்களையும் கோயிலில் வரவழைத்துக் கட்குடி என்னும் கெட்ட வழக்கத்தை அறவே நீக்கவேண்டுமென்றும் தாடி மீசை வளர்த்தலை நீக்கவேண்டு மென்றும் சொல்லப்பட்டது. இங்குத் தாடி மீசை வளர்த்தலைப் பற்றி அபிப்பிராயபேதம் உண்டாயிற்று. ஆனால் அங்கிருந்த பெரியவர்கள் பக்கத்திலுள்ள எல்லா ஊராரும் இந்த நாகரீகமில்லாத வழக்கத்தை நிறுத்த உடன்படுவார்களானால் தங்களுக்கு ஆக்ஷேபம் இல்லை என்று முடிவு செய்தனர்.

## பழம் பாலக்கோடு.

சாயங்காலம் எல்லோரும் பழம் பாலக்கோடு போய்ச் சேர்ந்தார்கள். அன்று பகல் 2மணிக்கு அவ்வூர் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டம்கூடிற்று. 250 ஜனங்கள் வரையிலும் வந்திருந்தனர். திருவாளர் முத்துக்குமாரசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்து நீண்டநேரம் பல விஷயங்களைக் குறித்துச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மற்றவர்களும் பேசினார்கள். இறுதியில் அவ்வூரில் செங்குந்தர் சங்கம் ஒன்று ஏற்படுத்தப்பட்டது.

## கூட்டாலை.

ஜூன் மாதம் 3 தேதி கொச்சி சமஸ்தானத்திலுள்ள கூட்டாலை என்னும் ஊருக்கு ஐவரும் போய்ச்சேர்ந்தனர். அவ்வூர் மலையாளம் பள்ளிக்கூடத்தில் ஒரு கூட்டம் கூட்டப்பட்டது. இந்த ஊரில் தாடி மீசை வளர்ப்பதான கெட்ட வழக்கமில்லாதிருப்பது கவனிக்கத்தக்கது.

## பாலப்புரம்.

ஜூன் மாதம் 4 தேதி காலையில் செங்குந்தர்களுக்குள் ஒரு ஒப்பற்ற திலகமாய் வாழ்ந்து சமீபத்தில் இம்மண்ணுலகினின்று நீங்கினவரான திருவாளர் மந்திரி முதலியார் அவர்கள் ஊரான பாலப்புரத்துக்கு எல்லோரும் போனார்கள். அங்கு மந்திரி முதலியார் அவர்கள் வீட்டிலேயே தங்கியிருந்து அவ்வூரிலுள்ள சிலரை அங்கு அழைத்துச் சமுதாய அபிவிருத்திக்கான பல காரியங்களைப்பற்றி அவர்களிடம் சொல்லிவிட்டுப் பிரதிநிதிகள் தங்கள் நாட்டை நோக்கிப் புறப்பட்டனர்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரின் பிரதிநிதிகளாக மைமூன்று ஜில்லாக்களில் சுற்றுப்பிரயாணம் செய்த திருவாளர் C. பன்னிருகைப் பெருமான் முதலியார் அவர்களுக்கும் திருவாளர் V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கும் அவர்கள் பிரயாணத்தில் பலவிதத்திலும் மிகுந்த ஒத்தாசை செய்த அம்மாபேட்டை திரு. S. பழனியாண்டி முதலியார் அவர்களுக்கும், சேலம் திரு. T. R. முருகேச முதலியார் அவர்களுக்கும், வேலகந்தம் திரு. சின்னய்ய முதலியார் அவர்களுக்கும், திருச்செங்கோடு திரு. T. R சந்தப்ப முதலியார் அவர்களுக்கும், திருச்செங்கோடு திரு. V. V C. நடேச முதலியார் அவர்கள் சகோதரர் திரு பெரியசாமி முதலியார் அவர்களுக்கும், உதகமண்டலத்தில் சுகத்திற்காக வாழ்ந்து வந்த திரு T. R. வையாபுரி முதலியார் அவர்களுக்கும், கோயம்புத்தூர் திரு. V.S செங்கோட்டைய்யா முதலியார் அவர்களுக்கும், கொல்லங்கோடு திரு. K. முத்துக் குமாரசுவாமி முதலியார் அவர்கள் குடும்பத்தாருக்கும், சித்தூர் திரு. C. P. இராமன் முதலியார் B. A., B. L., அவர்களுக்கும், குழல் மன்னம் திரு. சுப்பிரமணிய முதலியார் அவர்களுக்கும், பழம் பாலக்கோடு திரு. வேலாயுத முதலியார் அவர்களுக்கும் கூட்டாலை திரு. அண்ணாமலை முதலியார் அவர்களுக்கும் பாலப்புரம் காலஞ்சென்ற திரு. மந்திரி முதலியார்அவர்கள் சிறிய தகப்பனார் அவர்களுக்கும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தாரும்மை இரண்டு பிரதிநிதிகளும் மிகுந்தநன்றி பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறார்கள். திருவாளர்கள் அம்மாபேட்டை S. பழனியாண்டி முதலியார் அவர்களுக்கும் கொல்லங்கோடு திரு. முத்துக்குமாரசாமி முதலியார் அவர்களுக்கும், சொக்கலிங்க முதலியார் அவர்களுக்கும், C. P. இராமன் முதலியார் அவர்களுக்கும் பிரதிநிதிகள் கூட பல ஊர்களுக்கும் சென்று உதவி செய்ததற்காக திரு. பன்னிருகைப் பெருமான் முதலியார் திரு. V. S. சங்கரசுப்பிரமணிய முதலியார் ஆகிய இருவரும் பிரத்தியேக நன்றி செலுத்திக் கொள்கிறார்கள்.

### வடஆற்காடு ஜில்லாவில் பிரசாரம்

18-5-28௳ திரு. மா. அ. கனகசபை முதலியார், திருப்பத்தூர் திரு. பி. ந. கந்தசாமி முதலியார் ஆகிய இருவரும் சென்னையிலிருந்து புறப்பட்டு உத்திரன்மேரூர், மாரும்பதி, பெருநகர் முதலிய ஊர்களுக்குச் சென்று கல்வி நிதிச் சீட்டு விஷயமாகப் பிரசாரம் செய்தார்கள். 21-5-29௳யிலிருந்து 5-6-29௳ வரையில் திரு. பி. ந. கந்தசாமி முதலியார், உத்திரன்மேரூர் கா. உ. பொன்னுசாமி முதலியார் ஆகிய இருவரும் அகரம் தூளி, கொடுங்காலூர், கொட்டை, வழூர், அம்மையப்பட்டு, திருவோத்தூர், அசனம்மாபேட்டை, வட மணப்பாக்கம், கலவை, விளாப்பாக்கம், ஆரணி, வாழைப்பந்தல் முதலிய இடங்களுக்குச் சென்று சில விடங்களில் கூட்டங்கள் கூட்டி உபந்யாசங்கள் செய்தும் இதரவிடங்களில் கல்வி நிதிச் சீட்டிற்காகப் பிரசாரஞ் செய்தும், மித்திரனுக்கு அநேக சந்தாதேயர்களைச் சேர்த்துக் கொண்டும் வந்தார்கள்.

### தஞ்சை ஜில்லாவில் பிரசாரம்

நமது தலைச்சங்கத்தின் ஆதரவில் தஞ்சை ஜில்லாவுக்கு அனுப்பப்பட்ட பிரசாரகர்களான திருவாளர்கள் A. S. முத்தைய முதலியார், S. S. கந்தசாமி முதலியார் ஆகிய இருவரும் திருவாரூர், சிக்கில், பொருள்வைத்தசேரி, சங்கமங்கலம் முதலிய இடங்களுக்குச் சென்று 15-5-29௳ கவிச்சக்ரவர்த்தி ஒட்டக்கூத்தர் ஜென்ம க்ஷேத்திரமாகச் சொல்லப்படும் மணக்குடிக்குப் போயினர். இங்குத் திருவாளர்கள் காளிமுத்து முதலியார், சீனிவாச முதலியார் இவர்கள் பெருமுயற்சியால் ஒரு பொதுக்கூட்டம் திரு. எஸ். கந்தசாமி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. அச்சமயம் விசேஷ உபந்யாசங்கள் நடந்தன. அவ்வூர் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் திரு. சுந்தரதேவர் அவர்கள் கல்வியின் அவசியத்தைப்பற்றியும் இவ்வூர்ப் பள்ளிக்கூடத்தை 7-வது வகுப்பு வரையிலுள்ள செகண்டரி ஸ்கூலாக்க வேண்டுமென்பதைப் பற்றியும் வற்புறுத்திப் பேசியது குறிப்பிடத் தக்கது. தலைவர் அவர்களது நீண்ட முடிவுரையின் பிறகு இரவு 12 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது. வலங்கைமான், கொடவாசல் முதலிய பல இடங்களிலும் பிரசாரம் செய்யப்பட்டது.

### தென்னாற்காடு ஜில்லாவில் பிரசாரம்

6-5-29-ல் பிரதிநிதிகளாகிய திருவாளர்கள் A. S. முத்தையா முதலியார், T. A. சண்முக முதலியார் அவர்கள் சென்னையினின்றும் இரவு 9 மணிக்குப் புறப்பட்டு 7-5-29 பகல் 4 மணிக்கு வலங்கைமானை யடைந்து திரு. S. S. கந்தசாமி முதலியாருடன் 8-5-29 கொடவாசல் சென்று 9-5-29 இரவு சமூக முன்னேற்றத்தைப் பற்றி உபந்யாசம் செய்து வலங்கைமான் முதலிய இடங்களைப் பார்த்துத் திரு T. A. சண்முக முதலியார் தென்னாற்காடு ஜில்லாவில் பிரசாரஞ் செய்ய 12-5-29 பழைய வண்டிப்பாளையம் அடைந்து காஞ்சிபுரம் திரு. தா. செ. கந்தசாமி முதலியார் அவர்களுடன் புது வண்டிப்பாளையம், திருப்பாதிரிப்புலியூர், முதலிய இடங்களில் பிரசாரம் செய்துவிட்டு 14-5-29 குறிஞ்சிப்பாடியை யடைந்து மாஜி யூனியன் சேர்மென் திரு. நாராயணசாமி முதலியார், ஜவுளி வியாபாரிகள் திருவாளர்கள் பொ. சிங்கார முதலியார், ப. கு. அருணாசல முதலியார் நாட்டாண்மைக்காரர் திரு பழனிவேல் முதலியார், வி. ஆறுமுக முதலியார், யூனியன் சேர்மென் வேலாயுத முதலியார், ல. க. ஆறுமுக முதலியார், இவர்கள் உதவியால் மீனாக்ஷிபேட்டை, கஞ்சநாதப்பேட்டை முதலிய இடங்களில் பிரசாரம் செய்து 15-5-29 இரவு 8 மணிக்கு அவ்வூர் மாரியம்மன் கோயிலில் திரு. அரி. சிங்காரவேல் முதலியார் அவர்கள் தலைமையில் ஒரு செங்குந்தர் பொதுக்கூட்டம் கூட்டினர். அவ்வமயம் பிரதிநிதிகள் முறையே செங்குந்தர் முன்னேற்றமும், கல்வி நிதிச் சீட்டும் என்பனைப்பற்றி உபந்யசித்துக் குறிஞ்சிப்பாடி விழப்பள்ளம், விநாயகர் ஆலயத்தில் 17-5-29-ல் முறையே ஒட்டக்கூத்தர், வீரநாராயண விஜயம் வல்லாள சரிதை முதலிய சரித்திரங்களை உபந்யசித்துவிட்டு 18-5-29-ல் கடலூரையடைந்து திரு தி. நா. மாணிக்க முதலியாரைக் கண்டு கல்வி நிதிச் சீட்டு விற்பனைக்காக வேண்டிய ஏற்பாடுகளை செய்துவிட்டு 22-5-29 காலை கண்டாச்சிபுரத்தில் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் அவர்களைக் கண்டு உபசரிக்கப்பெற்று 2-5-29-ல் செங்கமேடு (சிக்காத்தூர்) ஆலப்பாடி முதலிய இடங்களில் பிரசாரம் செய்யத் திரு. வை. ச. இராமலிங்க முதலியாருடன் சென்று பிரசாரஞ் செய்துவிட்டு 25௳ திருக்கோயிலூர், திருப்பாலைப்பந்தல் சென்று சித்தாத்தூரையடைந்து 26௳ இரவு 9 மணிக்கு திரு. கை. மாணிக்க முதலியார் வீட்டில் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் கூட்டினர். அவ்வமயம் நமது பிரதிநிதிகள் முறையே செங்குந்தர் கல்விநிதிச் சீட்டு, ஒழுக்கம் என்பதைப் பற்றி உபந்யசித்து மறுநாள் சென்னகுணம், சென்று, அன்றிரவு 9 மணிக்குத் திரு. வை. அருணாசல முதலியார் அவர்கள் வீட்டில் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. வை. ச. இராமலிங்க முதலியார் நமது பிரதிநிதிகளை அறிமுகப்படுத்தித் திரு. தி. அ. சண்முக முதலியாரும் திரு. தா. செ. கந்தசாமி முதலியாரும் முறையே கொல்லாமை, கல்வி என்னும் விஷயத்தை உபந்யசித்து. மறுநாள் திடாரை யடைந்து திரு. ஆ. மு. நடராஜ முதலியாரது பெரு முயற்சியால் இரவு 9-மணிக்குச் செங்குந்த கூட்டத்தைக் கூட்டினார்கள். திரு. வை. ச. இராமலிங்க முதலியாரும், நமது பிரதிநிதிகளும் நம்மவர் சீர்படையும்படி வேண்டிய கருத்தமைந்த உபந்யாசங்களைச் செய்து மறுநாள் கண்டாச்சிபுரத்தை யடைந்தார்கள்.



(18)

30-5-29-ல் நமது தலைச்சங்கப் பிரதிநிதிகளும் திரு. வை. ச. இராமலிங்க முதலியாரும் ஒடடம்பட்டு என்னும் கிராமத்தை யடைந்து பிரபல செல்வந்தர் திரு. சிங்கார முதலியார், கிராம முனிசீப்பு திரு. வி. கதிர்வேல முதலியார் இவர்களால் உபசரிக்கப்பெற்றனர். அன்றிரவு திரு. சிங்கார முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய செங்குந்த பொதுக்கூட்டத்தில் நமது பிரதிநிதிகள் முறையே செங்குந்தர் ஒற்றுமைப்பு கிளைச்சங்கம், நமது பத்திரிகை என்னும் விஷயங்களை உபந்யசித்துவிட்டு மறுநாள் 1-6-29-ல் வலங்கைமான் திரு. S. S. கந்தசாமி முதலியாரும், திரு. தா. செ. கந்தசாமி முதலியாரும், திரு. தி. அ. சண்முக முதலியாரும், புவனகிரியை யடைந்து பெருமாத்தூர் திருவாளர்கள் பா. ந. பொன்னம்பல முதலியார், தி. வ. க. மாரிமுத்து முதலியார் முதலிய பிரமுகர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று ஸ்ரீமத் சங்காரவேலு சுவாமிகள் அவர்களைக் கண்டு நமது சமூகச் சம்பந்தமான சில விஷயங்களைப் பேசி. மறுநாள் ஸ்ரீவெற்றி வேலாயுதசாமி கோயிலில் மாலை 6-மணிக்கு ஸ்ரீமத் சங்காரவேலு சுவாமிகள் தலைமையில் செங்குந்தர் பொதுக்கூட்டம் ஒன்று கூட்டினர். அதுகாலை திரு, தா. செ. கந்தசாமி முதலியார், தலைச்சங்கம் என்னும் விஷயத்தையும், திரு. தி. அ. சண்முக முதலியார், சீர்திருத்தம் என்னும் விஷயத்தையும், திரு. S. S. கந்தசாமி முதலியார், பத்திரிகை என்னும் விஷயத்தையும் முறையே பேசி இரவு 11-மணிக்குக் கூட்டமினிது நிறைவேறியது. ஷை சுவாமிகள் நமது சமூக சம்பந்தமாக இனி வேலைசெய்ய முற்படுகிறேன் என்று உறுதியாகக் கூறியது இங்கே குறிக்கற்பாலதொன்று.

மறுநாள் 4-6-29-ல் திரு. தி. அ. சண்முக முதலியாரும், திரு. S. S. கந்தசாமி முதலியாரும், ஸ்ரீமுஷ்ணம் அடைந்து அவ்வூர் போஸ்டு மாஸ்டர் திரு. வேல்முருக முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று அன்று மாலை ஆண்டிமடம் சென்று, தாலுக் போர்டு மெம்பரும், கோவாப்ரேடிவ் பாங்கு சேர்மெனும் ஜவுளி வியாபாரியுமாகிய திரு. சிவசிதம்பரம் முதலியார் அவர்கள் ஊரில் இல்லாமையால் நமது பிரதிநிதிகள் வேலைசெய்ய முடியாமல் ஒருநாள் இருந்தும் பயன்படாது போய்விட்டது.

5-6-29-ல் காட்டுமன்னார் கோயிலையடைந்து உடையார்குடி ஜவுளி வியாபாரியும் செல்வந்தரும் ஆகிய திரு. சின்னதம்பி முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று மறுநாள் லால்பேட்டையை அடைந்து திருவாளர்கள் சிவக்கொழுந்து முதலியார், கந்தசாமி முதலியார், மலைக்கொழுந்து முதலியார், அப்பாதுரை முதலியார் முதலிய செங்குந்த பிரமுகர்களால் வரவேற்று உபசரிக்கப்பெற்று 7-6-29௳ இரவு 9-மணிக்கு அவ்வூர் யூனியன் ஆபிசில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார், கல்வி நிதிச் சீட்டும் கல்வியும் என்னும் விஷயத்தையும், திரு. S. S. கந்தசாமி முதலியார், "செங்குந்த மித்திரன்" என்னும் விஷயத்தையும் உபந்யசித்த பின் இரவு 1-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

மறுநாள் பகல் 11-மணிக்குத் திரு. கந்தசாமி முதலியார், ஜவுளி வியாபாரத் தலத்தில் கூடிய கூட்டத்தில் அவ்வூரில் மிக்க பழமையாயும் ஊக்கத்தோடும் வேலை செய்து வந்த செங்குந்த ஞானப்பிரகாச சங்கம் வேறு சிறு பிளவுகளால் முயற்சி குன்றியிருந்ததால் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் அச்சங்கத்தைப் புதுப்பித்துத் தலைவர் முதலிய உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து, சங்கம் என்பதைப்பற்றி ஒருமணி நேரம் உபந்யசித்து செங்குந்த ஞானப்பிரகாச சங்கம் எனப் புதுப்பித்து முறையே நடத்த வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து விட்டு மாலை 4-மணிக்கு உடையார்குடியை யடைந்து அவ்வூர் பஜனை மடத்தில் இரவு 9-மணிக்கு வைத்தியர் திரு. சி. கணபதி முதலியார்

அவர்கள் தலைமையில் கூடிய பொதுக்கூட்டத்தில் திரு. தி. அ. சண்முக முதலியார், செங்குந்தர் செய்யவேண்டிய வேலை என்னும் விஷயத்தையும், திரு. S. S. கந்தசாமி முதலியார், சிக்கனம் என்பது பற்றியும் உபந்யசித்து அவ்வூரில் செங்குந்த மாணவ சங்கம் ஒன்று ஏற்படுத்த, இரவு 11-மணிக்குக்கூட்டம் இனிது நிறைவேறியது. ஜவுளி வியாபாரி திரு. சின்னத்தம்பி முதலியாரும் அவரது சகாக்களும் செய்த முயற்சி மிகவும் கவனிக்கற்பாலதே.

மறுநாள் 9-6.29 நமது பிரதிநிதிகள் சிதம்பரத்தையடைந்தார்கள். அவர்கள் நடராஜப் பெருமான் காலை சந்திக்கட்டளை சிதம்பரநாத முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று, அவ்விடத்தில் பிரசாரஞ் செய்து விட்டு மறுநாள் பழைய வண்டிப்பாளையம் தமிழ்ப் பண்டிதர் திரு. V. கந்தசாமி முதலியார் அவர்களுடன் 14-6-29-ல் மேல் பட்டாம்பாக்கம் அடைந்தனர். அங்கவர்கள் பொக்கிஷம் திரு. ரங்கசாமி முதலியார் அவர்களால் உபசரிக்கப்பெற்று அன்று பகல் சென்னப்ப நாய்க்கன் பாளையம், கடுவீரப்பட்டு முதலிய இடங்களில் பிரசாரம் செய்து விட்டு 13-6-29-ல் சென்னை வந்து சேர்ந்தனர். திரு. S. S. கந்தசாமி முதலியார் வலங்கைமான் போய்ச் சேர்ந்தார். நமது பிரதிநிதிகளை வரவேற்று உபசரித்தும் மித்திரனுக்குச் சந்தாதார்களைச் சேர்த்தும் உதவிபுரிந்த நமது செங்குந்த குலச் சீமான்களுக்குத் தலைச்சங்கததாரது நன்றி என்றும் உரித்தாகுக.

### சென்னைச் செங்குந்த வாலிபர் சங்கம்

2—8—29 வெள்ளிக்கிழமை மாலை 6 மணிக்குத் திருவாளர் V. இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் ஒட்டக்கூத்தர் திருவுருவப் படம் பூசிக்கப்பட்டது. திரு. தி. அ. சண்முக முதலியார் கூத்தர் பெருமானைப்பற்றிப் பேசியபின், தலைவர் முகவுரை முடித்ததும், திருவாளர்கள் தி. நா. சபாபதி முதலியார், ஆ. வே. முதலைய முதலியார், பி.ஏ., பி.எல்., வி. இரத்தின முதலியார், பி.ஏ., பி.எல். ஆகியோர் ஆதரவாளர்களாகவும், திருவாளர் ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி., அவர்கள் தலைவராகவும், திருவாளர்கள் மா. பா. கந்தசுவாமி முதலியார், பி.ஏ., பி.இ., C. P. ராமன் முதலியார், பி.ஏ., பி.எல்., E. V. சிங்காரவேல் முதலியார், பி.ஏ., ஆகியோர் உபதலைவர்களாகவும், திருவாளர்கள் I. ராஜவேலு முதலியார், ஜெ. தங்கவேல் முதலியார் ஆகியோர் காரியதரிசிகளாகவும், இன்னும் சிலர் நிருவாகசபை அங்கத்தினராகவும், இவ்வருடத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்னர், திருவாளர்கள் மா. அ. கனகசபை முதலியார், ஜெ. தங்கவேல் முதலியார் E. V சிங்காரவேல் முதலியார் ஆகியோர் ஒட்டக்கூத்தரைப்பற்றியும், செங்குந்த வாலிபர்கள் செய்ய வேண்டிய வேலைகளைப்பற்றியும் பேசினார்கள். தலைவர் முடிவுரைக்குப்பின் வந்தனோபசாரத்துடன் சுமார் 9.30 மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

காரியதரிசிகள்.

### செங்கற்பட்டு ஜில்லா
### கோடம்பாக்கம் செங்குந்தர் சங்கம்.

29-7-29 ௳ இரவு 8-மணிக்குத் திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிய கூட்டத்தில் திரு. மா. அ. கனகசபை முதலியார் அவர்கள் 'நமது இரண்டாவது மகாநாடு' என்ற விஷயமாய் நீண்டதோர் உபந்யாசம் செய்தார்கள். தலைவர் முடிவுரை கூறிய பிறகு இரவு 10-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

### வடதிருநாகேஸ்வரம் செங்குந்த வாலிபர் சங்கம்

சுக்கில௵ வைகாசி௴ 11௳ திருநாகேஸ்வரம் சிவனடியார் திருக்கூட்டச்சபையில் கூடிய செங்குந்தர் பொதுக்கூட்டத்தில் செங்குந்த வாலிபர் சங்கம் ஸ்தாபிக்கப்பெற்றது. அவ்வமயம் கீழ்கண்ட உத்தியோகஸ்தர்கள் எல்லோராலும் ஏகமனதாய்த் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

தலைவர்.
திருவாளர் தி. ஆ. தக்ஷிணாமூர்த்தி முதலியார்.

அமைச்சர்.
திருவாளர் தொ. மு. முருகேச முதலியார்.

பொருட் காப்பாளர்.
திருவாளர் தி. மு. துரைசாமி முதலியார்.

கணக்குப் பரிசோதகர்.
திருவாளர் தி. மயிலை சண்முக முதலியார்.

இதர நிருவாக அங்கத்தினர்

திருவாளர்கள் ஏ. பொன்னுசாமி முதலியார், தொ. மு. பஞ்சாக்ஷர முதலியார், க. மாசிலாமணி முதலியார், ருத்திரகோட்டி முதலியார், ப. கதிர்வேல் முதலியார், மெ. கடேச முதலியார், தி. அருணகிரி முதலியார், தெய்வசிகாமணி முதலியார், தி. ஆ. தேவராஜ முதலியார், தி. க. அருணாசல முதலியார், மேனுவ கந்தா முதலியார், ஏ. கை. தியாகராஜ முதலியார், சோமு முதலியார், மட. மாணிக்க முதலியார், தி. ப. குப்புசாமி முதலியார், இரத்தினசபாபதி முதலியார், இராஜு முதலியார், தி. க. சம்பந்த முதலியார், தி. ம. பொன்னுசாமி முதலியார்.

4—8—29 மாலை 4-15 மணிக்குத் திருவாளர் வெ. அருணகிரி முதலியார் அவர்கள் தலைமையில் கூடிய கூட்டத்தில் திருவாளர்கள் தி. அ. சண்முக முதலியார், ஜெ. தங்கவேல் இருவரும் முறையே 'செங்குந்தர் கடமை,' 'கல்வியும், கைத்தொழிலும்,' என்பவை பற்றி வெகு விளக்கமாக சுமார் 4 மணி நேரம் பேசினர். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் 9-30 மணிக்கு இனிது கலைந்தது.



## நிருபம்

செங்குந்தமித்திரன் பத்திராதிபர் அவர்கள் சமுகத்திற்கு,

அன்புள்ள ஐயா!

இராமேஸ்வரத்தில் இருக்கும் செங்குந்த முதலிமார் பொதுமடம் இவ்வளவு காலமாக எங்களில் முத்துக்கருப்ப முதலியார் கைவசத்தில் இருந்தது. அவர் குடிக்கூலி தஸ்தாவேஜி எழுதிவாங்கிக்கொண்டு மு. சொக்கலிங்கம் பிள்ளையெனும் ஒரு ஒதுவாரை என் சம்மதத்தின்பேரில் குடிவைத்திருந்தார். அவர் மடத்தில் கொஞ்சகாலம் இருந்துவிட்டுப் பிறகு மடத்தை முத்துக்கருப்ப முதலியாரிடத்தில் ஒப்புவித்து விட்டு அவர் வெளியேறிவிட்டார். பின் அவர் கைவசமிருந்தது. ஸ்ரீராமநாதபிள்ளை ஓதுவார் மருமகன் குருவையா பிள்ளை என்பவர் எங்கள் பூட்டை உடைத்து மடத்துக்குள் குடும்ப சகிதமாய் இருந்தார். நாங்கள் அவரிடத்தில் போய் 'எங்கள் மடத்தில் நாங்கள் போட்டுவைத்த பூட்டை ஏன் உடைத்தாய்?' என்று கேட்டோம். அதற்கு அவர் 'இந்த மடம் எனக்குத்தான் சொந்தம் முதலிமார்களுக்குச் கிடையாது.' என்று சொல்லி மத்தவும் தயார் செய்கிறார். இவ்விடத்தில் நம்மவர்கள் சொற்பமாயிருப்பதால் அவர் எங்களை மதியாமல் பேசுகிறார். இவ்விஷயத்தில் சிரத்தை எடுத்து இராமநாதபுரம் ஜில்லா கலெக்டர் அவர்களுக்குத் தெரிவித்து மடத்தில் இப்போது இருக்கும் குருவையாபிள்ளையை வெளியேற்றி மடத்தைப் பழையபடி முத்துக்கருப்பமுதலி வசம் ஒப்புவிக்கவேண்டியது தலைவர்களைப் பொறுத்த கடமை.

இந்தச் சங்கதியைச் செங்குந்த மகாஜனங்களுக்குத் தெரிவித்து, நம்மவர்கள் யார் இராமேஸ்வரத்திற்கு வந்தாலும் நம்மடத்தில் தங்கியிருந்து இராமநாதசுவாமியைத் தரிசனம் செய்யும்படிச் செய்யவேண்டியதும் தங்களைப் பொறுத்த கடமை.

இதில் கண்ட விபரங்களைத் தெனகாசி ம-ள-ள-ஸ்ரீ ப. கு. ஆறுமுக முதலியார் அவர்களுக்கும் தெரிவிக்க வேண்டுகிறேன். அவர்களிடத்திலும் ஒரு குடிக்கூலி அக்ரிமெண்டு தஸ்தாவேஜு இருக்கிறது. அதையும் யோசித்துக் கொள்ள வேண்டியது தங்களுடைய கடமை.

இவ்வூர் மடத்திற்கு முதன்மையா யிருந்து நம்மவர்கள் யாவருக்கும் தெரியப்படுத்தி மடத்தைச் சேர்திருத்த வேண்டியது தங்களைப் பொறுத்த கடமை.

மெய்யம்புளி த. முத்துகருப்பன் முதலியார்,
மெய்யம்புளி V. வேலு முதலியார்

---

### சொக்காப்பேட்டை

கடலிக்குடுத்த சொக்காப்பேட்டை கிராமத்தில் மயிலம் சோ. நாராயணசாமி முதலியார் திருமணத்திற்காக விஜயஞ்செய்த திருவாளர் கா. சு. வைரம் நாதஞ்செகிசர் அவர்கள், அக்கிராமத்திலும் அதன் சூழலிலுமுள்ள செங்குந்தர்களிடை இருந்த கக்ஷிபபிளவை ஒழிக்கவேண்டுமென்று அவ்வூரார் வேண்டியதற்கிணங்கிச் சொக்காப்பேட்டை, காவராஜப்பேட்டை, மேலப்பூண்டி ஆகிய 3 கிராமச் செங்குந்தர்களையும் 5—7—29-ல் கூட்டி, அக்கிராமங்களுக்கும், பொதட்டூர்ப்பேட்டை, அத்திமாஞ்சேரி கிராமங்களுக்கும் உள்ள பிணைவைப் பெருமனக்காரரிடமிருந்தறிந்து, ஒற்றுமையைப்பற்றிப் பேசி, 5 கிராமத்தாரிடமும் அவரது முடிவை ஏற்றுக்கொள்வதாக வாக்குறுதி பெற்று, 7—7—29 காலை 10 மணிக்குக் கூடிய கூட்டத்தில் ஒரு முடிவு செய்து அனைவரும் ஒப்புக்கொண்டதற்கு அறிகுறியாய் ஒரே பந்தியில் உட்கார்ந்து சிற்றுண்டி தாம்பூலம் பெற்றபின் தேசிகரவர்கள் மேற்படி அருகிலுள்ள ஜங்கப்பூர், தெள்ளூர் பள்ளிக்கா முதலிய இடங்களிலுள்ள செங்குந்த மயிலாம ஊக்கத்துடன் உழைப்பதால் சைவிராமத்தினர் வானாகிருந்து உறுகாது சகலங்களை ஸ்தாபித்து அவற்றை தலைசமைதர்க்கும் நினைத்து, அனைவரும் ஒற்றுமைக்கு வெண்மையுடன், மாலை 8 மணிக்குக் கூட்டம் இனிது முடிந்தது.

மு. கோவிந்த முதலியார்
மா. கோவிந்த முதலியார்

---

### வைகாசித் திங்களில் வெளி வந்த பொழுது போக்கு எழுத்து மாறிய வார்த்தைகளின் விடை.

1. செங்குந்த மித்திரன் ஓங்குமாறு ஆதரியுங்கள்.
2. முதலைய முதலியார் நீடுவாழ்க.
3. அடுத்த மகாநாடு காஞ்சியில் நன்கு நடைபெறுக.
4. கோவை, சேலம் ஜில்லா செங்குந்தர்களுக்கு ஜே.
5. சபாபதி வளைதல நமக்கு தெய்வம்.

## பாமாலைப் பகுதி

### சங்கமும் கல்வியும்

கும்மி.

(க) நாட்டிற் சிறந்ததே இன்றும் வெகு
நன்மை பயந்திடும் பொன்னாடு
ஏட்டில் எழுதவும் ஆகுமோ இந்திய
எம்மவர் போற்றிடும் நன்னாடு (நாட்)

(உ) காட்டில் வளர்ந்தழை கட்டிய நாட்டினர்
கண்ணியம் கொண்ணுமிக் காலையிலே
நாட்டிசமாகவே நமைசதிட்ட வித்தியர்
தன்மையைக் காணுவீர் சோதரரே. (நாட்)

(ங) பண்டையர் காலத்தில் பார்த்தவர் மெச்சிட்ட
பக்குவம் இன்று பறந்த தந்தோ!
ஒண்டொடி! உண்மையாய் இத்திருநாட்டினுக்
கொன்றின தேதொரு கண்மணைச்சிலே (நாட்)

(ச) கம்பனைவ் வைபடிக் காதொடு கூத்தனும்
கவின்பெறச் செய்திட்ட பான்றுவ
உம்பர்கள் வாழ்த்திய நன்றுடையிதை
ஓகைப் புரிந்திடீர் பாரதரே. (நாட்)

(ரு) ஆண்டொரு கோத்தி லேவெய நாட்டினர்
அண்டிசம தொழிலைக கற்றயாத்தார்
ஈண்டபின் அன்னவர் மன்னவ ராகியே
இகழ்ந்தன ரெயிதை எண்ணிடுவீர். (நாட்)

(சு) நீதில் சிலப்பதி காரத்தி லேயேனும்
தெரிந்திலி ரேசெய்த லின்பெருமை
ஆதியில இத்தொழில் கம்மையி டலவர்
அறிந்தனர் கூறுவீர் சோதரரே. (நாட்)

(எ) இத்தன்மைத் தானதோர் இந்திய நாடின்று
ஏனமிடும் காரணம் என்னெரல் சொறும்
சுத்தமதாகவே கல்வியி லாததோர்
தோஷமன் றேஅதைக் கண்டிவீர் (நாட்)

(அ) முப்பத்து முக்கோடி பாரத மக்களுள்
முன்னிடம் வகித்த செங்குந்தர்காள்!
தப்பித மிலலாத ஆங்காங்குச் சங்கத்தை
ஸ்தாபிப்போம ஸ்தாபிப்போம் ஸ்தாபிப்
போமே. (நாட்)

மு. த. வேலாயுதம்,
செமினெரி காலேஜ் உபாத்தியாயர்,
புதுவை சொக்காதன் பேட்டை.

---

### தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாடு, ஈரோடு, (19, 20—1—29)

12-12-1928 முதல் 4-4-1929 வரை நய நஷ்டக்கணக்கு.

| செலவு. | | ரூ. | அ. | பை | வரவு. | | ரூ. | அ. | பை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பிரயாணச் செலவு | ... | 1,617 | 0 | 5 | நன்கொடை வசூல் | .... | 12,869 | 8 | 0 |
| அச்சுக்கூலி | .... | 1,326 | 12 | 2 | கொட்டகை டிக்கட்டு வசூல். | | 1,210 | 0 | 0 |
| தபால் தந்தி செலவு | .... | 147 | 10 | 6 | தொண்டர்படை வசூல | .... | 73 | 0 | 0 |
| ஸ்டேஷனரி செலவு | .... | 49 | 5 | 0 | ஸ்டால் வாடகை வசூல் | ... | 62 | 0 | 0 |
| வாலண்டியர் செலவு | ... | 314 | 14 | 10 | கொட்டகை சமையல் | | | | |
| கொட்டகை போடவும் | | | | | சாமான்கள் விக்கிரயம். | .... | 1,923 | 2 | 10 |
| கொட்டகை அலங்க | | | | | இதர சில்லரை வசூல் | ... | 332 | 7 | 0 |
| ரிக்கவும் செலவு | .... | 3,315 | 14 | 11 | | | | | |
| சமையல் செலவு | ... | 5,179 | 2 | 4 | | | | | |
| பொதுச்சில்லரைச் செலவு | .... | 864 | 0 | 5 | | | | | |
| நிகர்லாபம் கைஇருப்புச் சீட்டிற்குக் கொண்டு போனது 4-4-29-ல் கையிருப்பு | .... | 3,645 | 5 | 3 | | | | | |
| ஆகமொத்தம் ரூ. | .... | 16,460 | 1 | 10 | ஆக மொத்தம் ரூ. | | 16,460 | 1 | 10 |

பரிசீலனை செய்ததில் சரியாய் இருக்கிறது.

N. C. Rajagopal & Co.,
Govt. Diplomates in Accountancy, Honorary Auditors

Erode, 9th June, 1929.

---

# செங்குந்த மித்திரன
## பொழுது போக்கு

ஆடி மாத மித்திரனில் வெளிவந்த பொழுதுபோக்கின் முடிவு

முதல் பரிசு—ஓ. சோமசுந்தரம் பிள்ளை, ட்ராப்ட்ஸ்மேன், சூபரிண்டெண்டிங் என்ஜினியர் ஆபீஸ், கோயமுத்தூர்—செங்குந்தர் பிரபந்தத் திரட்டு.

இரண்டாம் பரிசு—அ. பிச்சலிங்க முதலியார், பெருநகர்—திருவாசகம்.

இருவர் தவிர மற்றவர் விடையெல்லாம் சரியாக இருந்தன.

சரியான விடை.

இடமிருந்து வலம்—1 குகன்; 3 ஓ தவி; 6 மலை; 9. மாரி; 10. எண்; 11. ததி; 13. வலிமை 14 வைரம் அல்லது வையம்; 15. வசதி; 18. பூசம்; 21 சிகி; 22. தனி; 24. ராகு; 26. பீரு; 27. மிதிலை 28 அதிதி

மேலிருந்து கீழ்—1 குமரி; 2 கலை; 4. தேமா; 5 விரிவு; 7. ஒண்மை; 8 வதுவை; 10. எலி; 12. திற அல்லது திர; 16 சசி; 17 திமிரி; 18 பூதம்; 19. சனி; 20. பிரமி; 23. திருதி; 25. குதி; 26. பீதி.

திற, வைரம் இவைகளிலுள்ள ரகர றகரங்களில் ஒன்று மற்றொன்றுபற்றிப் பேதமாயது.

### பந்தனை எண் 2.

மேலிருந்து கீழ்:—1. கடல், 3. குமரி, 5. திங்கள், 6. கொலைமழு வாளி, 7 தோண்டல், 10. பேய், 11. மாதர்குணம், 12. பாவம், 13. விற்றல், 14 ஞாபிழ, 17. தருமம், 18. திவான், 19. பிறப்பு.

தனி யெழுத்துக்கள்:—2. நரபதி, 4 இடபம், 8. தெய்வம், 9. ஆகாயம், 15 சித்திரபானு, 16. சிங்கம், 20. மேடம், 21. மேகம்.



இடமிருந்து வலம்:—22. ஆ, 23. தாய், 24. மறை, 25. சரஸ்வதி, 26. பகை, 27. பூ, 28 சோலை, 29. மிடி, 30. ஒரு சாதி, 31. முத்து, 32. மூஞ்சுறு, 33. பெயர், 34 சிற்சிலிகுருவி.

மேற்கண்ட கட்டிடத்தைப் பூர்த்திசெய்து இரண்டணைத் தபாற்றலையுடன் "செங்குந்த மித்திரன் பொழுது போக்கு" மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், 200, தம்பு செட்டித் தெரு சென்னை என்ற முதி செப்டம்பர்மீ 10-ந் தேதிக்குள் அனுப்பவேண்டும்.

செப்டம்பர்மீ 10உ மன்று மாலை 7-மணிக்கு விடைகள் யாவற்றையும் எடுத்துச் சரியானவற்றைப் பொருக்கி அவற்றைக் குலுக்கி முதலில் வரும் சீட்டிற்கு முதல் பிரைசும், இரண்டாவதற்கு இரண்டாவது பிரைசம் கொடுக்கப்படும். விடைகளின் எண்ணிக்கை அதிகப்படின் வெகுமதியின் எண்ணிக்கையும் அதிகப்படும். பொழுதுபோக்கின் மேல்பார்வையாளரின் தீர்ப்பே முடிவானதாகும். சரியான விடையளித்தவர்களுடைய பெயரும், வெகுமதிபெற்ற நண்பர்களின் பெயரும் அடுத்தமாத மித்திரனில் வெளிவரும். 'செங்குந்த மித்திரன்' காரியாலயத்தில் சம்பந்தப்பட்ட எவரும் போட்டியிற் கலந்துகொள்ளலாகாது.

# 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

**சுக்கில௵ ஆவணி௴ (1929௵ ஆகஸ்ட்௴—செப்டம்பர்௴) தக்ஷிணாயணம், வருஷருது**

| இங்கிலீஷ். | தமிழ். | வாரம். | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | நேத்திரம். | ஜீவன். | வாக்கிய [illegible] | யோகினி. | விசேஷ நாட்கள். |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ஆகஸ்ட்௴ 16 | சுக்கில௵—ஆவணி௴ 1 | வெ | ஏகா 3-28 | மூ 10-25 | அ 10-25 பி | 2 | 1 | சூன் | கிழக்கு | வரலட்மிவிரதம் |
| 17 | 2 | சனி | துவா 9-28 | பூ 17-43 | சி 60 | 2 | 1 | திர | வடக்கு | பிரதோஷம் |
| 18 | 3 | ஞா | திர 14-50 | உ 24-25 | அ 60 | 2 | 1 | சது | தென்கி | சர்வ முகூர்த்தம் |
| 19 | 4 | திங் | சது 19-23 | தி 30-18 | அ 30-18 சி | 2 | 1 | ... | தெமே | பௌர்ணமி |
| 20 | 5 | செவ் | பௌ 22-58 | அ 35-13 | சி 35-13 ம | 2 | 1 | பௌ | தெற்கு | ஆவணி அவிட்ட |
| 21 | 6 | புத | பிர 52-30 | ச 39-10 | சி 39-10 அ | 2 | 1 | பிர | மேற்கு | [ம் |
| 22 | 7 | வியா | துதி 27-10 | பூ 42-15 | சி 60 | 2 | 1 | துதி | வடமே | |
| 23 | 8 | வெ | திரி 27-53 | உ 44-23 | சி 44-23 அ | 2 | 1 | திரி | வடகிழ | சுப முகூர்த்தம் |
| 24 | 9 | சனி | சது 27-38 | ரே 45-35 | ம 45-35 சி | 2 | 1 | சது | ஆகாசம் | |
| 25 | 10 | ஞா | பஞ் 26-20 | அ 45-45 | சி 60 | 2 | 0 | பஞ் | பூமி | சுப முகூர்த்தம் |
| 26 | 11 | திங் | சஷ் 24-5 | பா 45-10 | சி 45-10 ம | 2 | ½ | சஷ் சப் | கிழக்கு | |
| 27 | 12 | செவ் | சப் 20-45 | கி* 43-8 | சி 43-8 அ | 1 | ½ | அஷ் | வடக்கு | கிருத்திகை |
| 28 | 13 | புத | அஷ் 16-23 | ரோ 40-13 | சி 60 | 1 | ½ | நவ | தென்கி | ஸ்ரீ கிருஷ்ணஜய |
| 29 | 14 | வியா | நவ 10-58 | மி 36-20 | ம 60 | 1 | ½ | தச | தெமே | [ந்தி |
| 30 | 15 | வெ | தச 4-35<br>ஏகா 56-38 | தி 31-35 | சி 60 | 1 | ½ | ஏகா | தெற்கு | |
| 31 | 16 | னி | துவா 50-10 | பு 26-15 | சி 60 | 1 | ½ | துவா | வடமே | |
| செப்டம்பர்௴ 1 | 17 | ஞா | திர 42-30 | பூ 20-38 | சி 60 | 0 | ½ | திர | வடகிழ | பிரதோஷம் |
| 2 | 18 | திங் | சது 35-33 | ஆ 15-0 | சி 15-0 ம | 0 | ½ | சது | ஆகாசம் | |
| 3 | 19 | செவ் | அ● 28-13 | ம 9-55 | சி 60 | 0 | 0 | அமா | பூமி | அமாவாசை |
| 4 | 20 | புத | பிர 22-28 | பூர 5-38 | அ 60 | 0 | 0 | பிர | கிழக்கு | |
| 5 | 21 | வியா | துதி 18-5 | உ 2-38 | ம 2-38 சி | 0 | 0 | துதி | வடக்கு | |
| 6 | 22 | வெ | திரி 14-48 | அ 1-20 | அ 1-20 சி | 0 | ½ | திரி | தென்கி | |
| 7 | 23 | சனி | சது 14-38 | சி 1-48 | ம 1-48 அ | 0 | ½ | சது | தெமே | விநயகசதுர்த்தி |
| 8 | 24 | ஞா | பஞ் 15-48 | ச 4 18 | சி 4-18 ம | 1 | | பஞ் | தெற்கு | |
| 9 | 25 | திங் | சஷ் 18-20 | வி 8-35 | ம 8-35 சி | 1 | ½ | சஷ் | மேற்கு | |
| 10 | 26 | செவ் | சப் 23-15 | அ 14-25 | சி 14-25 ம | 1 | ½ | சப் | வடமே | |
| 11 | 27 | புத | அஷ் 28-58 | கே 21-20 | சி 21-20 ம | 1 | ½ | அஷ் | வடகிழ | |
| 12 | 28 | வியா | நவ 35-15 | மூ 28-48 | சி 60 | 2 | ½ | நவ | ஆகாசம் | |
| 13 | 29 | வெ | தச 41-13 | பூ 36-13 | பி 36-13 சி | 2 | ½ | தச | பூமி | |
| 14 | 30 | சனி | ஏகா 46-35 | உ 43 0 | சி 60 | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| 15 | 31 | ஞா | துவா 53-10 | தி 48-53 | அ 48-53 ம | 2 | 1 | துவா | வடக்கு | |

14.3412.

# அன்பருக்குச் சில விளம்பரங்கள்

## குலதிலகரின் புகைப்படங்கள்

‘செங்குந்தமித்திரன்’ ஆபீஸில் நமது குலதிலகரின் புகைப்படங்கள் கீழ்க்கண்ட விலைகளுக்குக் கிடைக்கும்:—

| | ரூ. அ. பை. |
|---|---|
| ஒட்டக்கூத்தர் | 1—8—0 |
| தலைச்சங்கத்தின் நிர்வாக அங்கத்தினர் (22 பேர் கொண்ட படம்) | 2—8—0 |
| ம. சண்முகசுந்தர முதலியார். ‘செங்குந்தமித்திரன்’ பத்திராகாசிரியர் | 1—8—0 |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் | 1—8—0 |

இத்தொகையில் படத்தின் கிரயம் பாக்கிங் தபால்செலவு முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் முன்பணமனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## ‘மகாநாட்டு மலர்’

ஈரோட்டில் விபவஸு தைமீ' கூடிய தென்னிந்திய செங்குந்தர் முதலாவது மகாநாட்டின் வைபவங்களும், நிகழ்ச்சிகளும், தலைவர்களின் பேருரைகளும், தீர்மானங்களும், அறிஞரின் அபிப்பிராயங்களும், தலைச்சங்கத்தின் முயற்சிகளும் வெளுத்த வளவளப்பான தாளில் வெகு அழகாக அச்சிடப்பெற்று, நாற்பதிற்கு மேற்பட்ட ஆப்டோன் படங்களுடன், இம் ‘மகாநாட்டு மலர்’ில் அடங்கியிருக்கின்றன. நமது ‘மித்திரன்’ செல்லாத ஒவ்வொரு செங்குந்த குடும்பத்திலும் இப்புத்தகமேனும் ஒன்று இருக்கவேண்டியது அவசியம். இதன் விலை அணா 8 தான் தபாற்செலவு அணா 3. வேண்டுவோர் முன்பணமாக அணா 11 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

## விளம்பர விகிதங்கள்

‘செங்குந்த மித்திர’னில் விளம்பரஞ் செய்ய விரும்புவோர் கீழ்க்கண்ட விகிதம் முன்பணமாகக் கட்டணஞ் செலுத்தவேண்டும். மாதம் மாதம் 6,000 பிரதிகள் அச்சாகின்றன. ஜாதிய பத்திரிகைகளுள் இதற்கு மேலான பத்திரிகை யில்லை. இதில் விளம்பரஞ் செய்வோர்க்கு அதிக பலனுண்டு :—

| | | ஒரு வருஷம். | ஆறு மாதம். | மூன்று மாதம். | ஒரு மாதம். |
|---|---|---|---|---|---|
| ஒரு பக்கம் | ரூ. | 100 | 50 | 26 | 10 |
| ½ பக்கம் | ,, | 60 | 30 | 16 | 6 |
| ¼ பக்கம் | ,, | 40 | 20 | 11 | 4 |

## செங்குந்த மித்திரன் 2-வது ஆண்டு பைண்டு புத்தகம்

சென்ற ஆண்டின் செங்குந்த மித்திரன் வேண்டுமென்று அநேகர் விரும்பியபடியால் செலவழிந்துவிட்ட முதல் மூன்று மாதப்பத்திரிகைகளையும் மீண்டும் பதிப்பித்து மொத்தமாக 12 சஞ்சிகைகளையும் மிக அழகாகப் பைண்டு செய்துள்ளோம். செங்குந்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இவ்வழகிய புத்தகம் இருக்கவேண்டுவது அவசியம். சொற்ப புத்தகங்களே கைவசமுள்ளன.

விலை தபாற் செலவு உள்பட ரூபா 2—0—0.

இங்ஙனம் :

மானேஜர், ‘செங்குந்த மித்திரன்’ ஆபீஸ்,

81, அரண்மனைக்காரன் தெரு, சென்னை

# " செங்குந்த மித்திரன் "

## தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு

**ஆசிரியர்: ம. சண்முகசுந்தர முதலியார், எம்.ஏ., எல்.டி.**

இது உண்மைச் செங்குந்தர்கள் முன்னேற்ற மடையும் வண்ணம் வெளிவரும் ஒரு மாதப் பத்திரிகை. இதில், செங்குந்தர்களின் பண்டைப் புகழைப் பற்றிய ஆராய்ச்சிக் குறிப்புக்களும், குலதிலகர் சரித்திரங்களும், விரதாதி பண்டிகைகளின் ஐதீகங்களும், பொதுவில் அறிவையும் நல்லுணர்வையும் புகட்டும் சிறந்த கட்டுரைகளும், வியாபார விவசாய வைத்தியக் குறிப்புக்களும், தொழில் முறைகளும், உலகவர்த்தமானங்களும், ஆங்காங்கே செங்குந்தரிடையே நிகழும் முன்னேற்றக் கிளர்ச்சிகளின் விருத்தாந்தங்களும், தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் பிரசாரம் முதலிய தொண்டுகளின் விவரங்களும், வேடிக்கைத் துணுக்குக்களும், விநோதக் கதைகளும் சம்பாஷணைகளும், செங்குந்தர் பஞ்சாங்கம் முதலியவைகளும் வெளிவருகின்றன. அன்பர்களின் ஆதரவு அதிகமாகக் கிடைக்குமாயின், பத்திரிகையைத் துவக்கும் ஆண்டில் முன்னிலும் அழகாகவும், இன்பகரமாகவும், பலசுவையுந் ததும்புமாறு சித்திரங்களோடு கூடிய சிறிய விஷயங்களைக் கொண்டதாகவும், பொதுவில் நம்மவர் அறிவும் ஒழுக்கமும் ஓங்கி உன்னத வாழ்க்கைக்குரிய சாதனங்களை அடையும் நெறியிலும் வெகு சிறப்பாகத் தோற்றுவிக்க உத்தேசிக்கிறோம். ஆகவே, நமது குலப்பத்திரிகைக்கு அன்பர்கள் ஆதரவு அதிகமும் எதிர்பார்க்கப் படுகின்றது. ஒவ்வொரு செங்குந்த குடும்பமும் 'செங்குந்த மித்திர'னை வரவழைக்கவேண்டுமென்னும் கொள்கை நம்மவருள் பரவுமானால் நமது 'மித்திர'னுக்கு வலுவேற்பட்டு அதன் வாயிலாக நமது குலமுன்னேற்றம் சீக்கிரம் சித்தியடையுமென்பதில் யாதொரு ஐயமுமில்லை. இக்கொள்கையையே நமது குலப்பிரமுகர்கள் தமது வாக்குச் செல்லுமிடங்களிலெல்லாம் நாட்டி வருவார்களென நம்புகின்றோம்.

| தபாற்கூலி உள்பட வருஷச் சந்தா | ரூ. அ.பை. | |
|---|---|---|
| இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்கட்கு | 1—8—0 | தனிச்சஞ்சிகை ஒன்றுக்கு |
| பினங்கு, சிங்கப்பூர், ஆப்பிரிகா ,, | 2—0—0 | 0—2—6. |

# "செங்குந்தர் பிரபந்தத் திரட்டு"

என்னும் அரிய பெரிய நூல் வெளிவந்து விட்டது. இது கவிச்சக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர் செய்தருளிய 'ஈட்டி எழுபது', 'எழுப்பெழுபது', மற்றைய பெரும்புலவர் பலர் செய்தருளிய களிப்போருபது, திருக்கை வழக்கம், பிள்ளைத் தமிழ், கலித்துறை மாலை, தசாங்கம், ஊசல், லாலி, கட்டியம், எச்சரிக்கை, மங்களம் முதலியன செங்குந்த விநாயகர் மாலை, செங்குந்த சிலாக்கியர் மாலை, செங்குந்த வேற் பதிகம், செங்குந்த மரபு விளக்கம், சூருவளி, திருக்கை வழக்கத்தந்தாதி, செங்குந்த குலமாட்சி ஆகிய 15 பிரபந்தங்களும் அடங்கியது.

இப்புத்தகத்தைச் செங்குந்த குலமக்கள் ஒவ்வொருவரும் வாங்கி விஷயங்களை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாதலால் இதனைக் கண்ணுறும் சகோதரர்கள் இப்பிரபந்தத் திரட்டை ஆதரிக்க வேணுமாய்க் கோருகிறோம்.

உயர்ந்த பதிப்பு காலிகோ பயிண்டில் பொன் கில்ட் செய்தது. விலை ரூ. 2-8-0.

தபாற் கூலி பிரத்தியேகம்.

புத்தகம் கிடைக்குமிடம் :—

மானேஜர், 'செங்குந்த மித்திரன்' ஆபீஸ்,

நெ. 31. அரண்மனைக்காரன் தெரு, சென்னை

This Journal is published by T. N. Sabapathi Mudaliar for the **South Indian Sengunthar Mahajana Sangam Madras,** at 31 Armenian Street, Madras, and is printed by T. C. Nataraja Mudaliar at the Cambridge Press, 3/19-A. Armenian Street, Madras.